நமது

# செட்டிநாடு

மலர் 10 ✿ மணம் 11 ✿ ஸ்ரீ குரோதி ஆண்டு ✿ பங்குனி ✿ மார்ச் 2025 ✿ ரூ.25

Namadhu Chettinad ✿ Volume 10 ✿ Issue 11 ✿ March 2025 ✿ Rs.25



கோவை நகரத்தார் சங்க நற்பணிகளுக்கு செட்டிநாடு குழுமத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குனர் டாக்டர் முத்தையா ராமசாமி அவர்கள் ரூபாய் 10 லட்சம் நன்கொடை வழங்கினார். சங்கத் தலைவர் ஆடிட்டர் S. சுந்தரேசன், பொருளாளர் ஆடிட்டர் SM. நாகப்பன் மற்றும் துணைத் தலைவர் நாகப்பா ராமநாதன் ஆகியோர் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.


Institute of Technology
Chettinad Academy
of Research and Education
(Deemed to be University)
MANAMAI CAMPUS
From bridges to AI, Engineering makes it possible!
B.Tech (AI&DS)*
B.Tech (Cyber Security)*
B.Tech (CS & Medical Engg)*
B.Tech (IT)*
B.Tech (ECE)*
B.Tech(CSE)*
B.Tech*
4 years
SCAN TO REGISTER
ADMISSION OPEN 2025-26
MANAMAI CAMPUS
844 789 2022
manamaiadmissions.care.edu.in
Nallur - Manamai, ECR, Behind Great Lakes Institute of Management, Thirukalukundram taluk, Chennai - 603102.
*Subject to Approval

நமது செட்டிநாடு

மலர் 10 மணம் 11 மார்ச் 2025
ஸ்ரீ குரோதி ஆண்டு பங்குனி மாதம்

ஆசிரியர்: ந.ஆவுடையப்பன்

ஆசிரியர் குழு:

புதுவயல் செல்லப்பன்

குழ.கதிரேசன்

ஆறாவயல் ஆர்எம்.சண்முகம்

முனைவர் எம்.எஸ்.ஸ்ரீலக்ஷ்மி

விசாலாட்சி சுப்பிரமணியம்

புதிய சந்தா, சந்தா புதுப்பித்தல்,

தட்டச்சு: முரு.மலர்விழி

வடிவமைப்பு: பி.தாமோதரன்

விளம்பரம் தொடர்புக்கு:

99622 43750

இணைய இதழ் முகவரி: www.namadhuchettinad.com

செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

நமது செட்டிநாடு மாத இதழ்

ராணி சீதை அரங்கம், 3–வது தளம்,

603, அண்ணா சாலை, சென்னை - 600 006

தொலைபேசி: 044–42951888

**கரு.மணிகண்டன்**

மக்கள் தொடர்பு அலுவலர்

காரைக்குடி 86818 28284

இதழ் சந்தா விவரம்

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ.300 |
| இரண்டாண்டு | ரூ.500 |
| ஐந்தாண்டு | ரூ.1250 |

கட்டுரைகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

மின்னஞ்சல்

namadhuchettinad@gmail.com

வாட்ஸ்ஆப்

9962243750



# நம்மவர்களின் உதவிகள் பெற...

சமீபத்தில் சமூக வலைத்தளத்தில் ஒரு செய்தியைப் படிக்க நேர்ந்தது. நகரத்தார்கள் ஒன்று கோவில்கள் கட்ட, புனரமைக்க, கொடுக்கிறார்கள் இல்லையேல் நகர விடுதிகளில் தங்கும் அறைகளை தங்கள் பெயரில் கட்டிக் கொடுக்கிறார்கள். இதனால் பிற இன மக்கள் மதிக்கிறார்கள், துதிக்கிறார்கள். ஆனால் நம் இனத்திற்கு என்று எதுவும் கொடுப்பதில்லை. சாதிக்க வைப்பதுமில்லை. நம் பெருமை நமக்குள் பேசும் அளவுக்கு ஒன்றுமில்லை. மற்றவர்கள் தம்மவர்கள் எவரையும் கைவிடார் என்ற முறையில் கை தூக்கி விட்டு வாழ்கிறார்கள். இந்த ரீதியில் குறைகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து நிறைகள் பற்றி அதிகம் குறிப்பிடாமல் அந்த செய்தி இருந்தது. சமூக வலைத்தளங்களில் பரப்பப்படும் செய்திகள் பெரும்பாலும் யூகத்தின் அடிப்படையில் அல்லது தவறான செய்தியை பரப்ப வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அமைவது உண்டு. இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் இவற்றைத் தவிர்க்க இயலாது. அது போல் தவறான செய்தியை பரப்ப வேண்டும் என்ற மனநிலை கொண்ட எவரோ அனுப்பிய செய்தி பலரால் படிக்கப்பட்டு பிறருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இதனால் இந்தத் தகவல் பிறர் கவனத்தை ஈர்த்து விடுகிறது. நம் மக்கள் எளிதிலும் சரியான முடிவை எடுப்பதில் முன்னிற்பவர்கள். அவ்வாறு எடுக்கப்படும் முடிவு பெரும்பாலும் பொது மக்கள் நன்மை சார்ந்ததாகவே இருக்கும். அதே சமயம் இன மக்கள் தேவைக்கு எவ்வாறு எப்படி உதவ வேண்டும் என்பதையும் நன்கு உணர்ந்தே உள்ளார்கள். கல்வி, மருத்துவம், முதியோர் பாதுகாப்பு என மிக முக்கிய தேவைகளுக்கு ஒரு போதும் உதவத் தவறியதில்லை. தனிநபராக, குழுவாக உலகில் எங்கிருந்தாலும் உதவுவதை ஒரு வரமாகவே ஏற்று செய்து வருகிறார்கள். இதனால் பலன் அடைந்தவர்கள் அதிகம். அது போல் தேவைப்படும் போதெல்லாம் முன்வந்து உதவுவதிலும் சளைத்தவர்கள் அல்ல. உதாரணமாக நகரத்தார் நலன் அமைப்பு கோவிட் பெருந்தொற்று காலத்தில் பாதிக்கப்பட்ட நம் இனத்தவருக்கு ஆற்றிய தொண்டு வார்த்தைகளில் அடங்காது. தொடர்ந்து அவர்கள் ஆற்றி வரும் தொண்டும் பாராட்டிற்குரியது. நம் இனத்திற்கு இந்தந்த வகையில் உதவலாம் என்ற சரியான வேண்டுகோளுடன் சரியான அமைப்பின் மூலம் தொண்டுள்ளத்துடன் செயல்பட்டால் நம்மவர்களின் உதவிகளை எளிதில் பெறலாம். ♦




உ
திருச்சி ஸ்ரீ வளத்தி
சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
துவக்கம் 2005
வளத்திஸ்ரீ சிட் பண்ட்ஸ் (பி) லிட். ஸ்ரீ முத்துமீனா சிட் பண்ட்ஸ் (பி) லிட்.
பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை
எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு
ரூ. 1,00,000/- முதல் ரூ. 30,00,000/- வரை
அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை
பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!
இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.
0431-2760064
0431-7968005
TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.
VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,
SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,
94439 86143

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6–வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1), அருணோதயா அபார்ட்மெண்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை – 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம்,
பழைய சொக்கநாதர்–
–கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001.
Cell : 89034 90064

★ வாய்மையே வெல்லும் ★ tvcfpl@gmail.com www.valathichitfunds.com


## உள்ளே...


கோட்டையூர் க.வீ.சொ.வீ. அழகப்ப ஐயா ... 06

வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க.. 10

நகரத்தார் திருப்பணிகள்.................... 12

திருமாலின் திவ்ய தேசங்கள் ............... 14

கோலாலம்பூர் செந்தூல் தண்டாயுதபாணி ஆலய மகா கும்பாபிஷேகம் ................. 17

அற்புதங்கள் நிறைந்த அலோர் ஸ்டார் தண்ணீர்மலை பாதயாத்திரை ............... 18

உங்களுடன் உரையாடுங்கள் ............... 20

தொழில் தொடங்கலாம் வாங்க ............ 21

இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு ....................... 26

நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு .. 28

கயிலாய வாத்தியக்குழு நடத்தும் பள்ளி மாணவி பிருந்தா பெரியண்ணன் .......... 30

உற்சாகம் ‘ஆன்’ செய்ய ஒரு ‘சுவிட்ச்’.. 32

திருமந்திரச் சுவை .............................. 34

ஏழிளந்தமிழ் – கொன்றை வேந்தன் – உரை செம்மல் வ.சுப.மாணிக்கனார் ................ 35

பார்த்தேன்... படித்தேன்... பகிர்கிறேன் ... 36

இராம காவியம் .................................... 39

நகரத்தார் சிகரத்தார் ............................ 40

கைப்பிடியில் கம்ப்யூட்டர் ...................... 42

Vees Star™
Diamonds & Jewelry

ஸ்ரீ அடைக்காத்தாள் பெரியகருப்பண்ண சாமி துணை

GIA
CERTIFIED
SOLITAIRE



CHENNAI: W-182, NORTH MAIN ROAD ANNA NAGAR WEST EXTN., TN-600 101.
SURAT: SURAT DIAMOND BOURSE DREAM CITY KHAJOD, GUJARAT - 395007.
www.vstardiamonds.com

CHENNAI I SURAT I MADURAI I KARAIKUDI





S. விஜயகுமார் V. விசாலாட்சி
பள்ளத்தூர்

CHENNAI - 044 4553 6003 1, 9383007477


MADURAI - 9884473330

KARAIKUDI - 9884803349

# கோட்டையூர்
# க.வீ.சொ.வீ. அழகப்ப ஐயா



**பழ.கைலாஷ்**



கோட்டையூர், இது கோயில் திருப்பணிகளும் கல்வி அறப்பணிகளும் நிரம்ப செய்த பெருமக்கள் பிறந்த புண்ணிய பூமி. இவ்வூர் மெ.க. வகையார் செய்த திருப்பணிகளை இக்கட்டுரையிலோ அல்லது ஒரு புத்தகத்திலோ அடக்கிவிட முடியாது, மெ.க. வகையார் திருவண்ணாமலை கோயில் உள்ளிட்ட எண்ணற்ற திருப்பணிகள் செய்த பெருமான்கள்.

இந்த மெ.க. வகையில் பிறந்த ‘வள்ளல் இராம.அழகப்ப செட்டியார்’ ஆற்றியிருக்கும் அரும்பணிகள் அனைவரும் அறிந்ததே. காரைக்குடியை கல்விக் குடியாக்கிய பெருமைக்குரியவர். கோட்டையூரில் உள்ள தனது இல்லத்தையே 1954-ஆம் ஆண்டு மகளிர் கல்லூரியாக மாற்றியவர், ஆகையால் ‘குடியிருந்த வீடும் கொடுத்த விழுத்தெய்வம்’ என்று போற்றப்படுகிறார்.

வள்ளல் க.வீ.அழ.இராம.அழகப்ப செட்டியாருக்கே முன்னுதாரணமாக இருந்தவர் இதே மெ.க வகையில் பிறந்த ‘க.வீ.சொ.வீ.அழகப்ப செட்டியார்’. இவர் தனது வீட்டை 1940-ஆம் ஆண்டே ‘சனாதன தர்ம வித்யாலயா’ என்ற பெயரில் பள்ளிக்கூடமாக மாற்றியவர். இவரைப் பற்றி அறிந்து கொள்ளும் முன் இவரின் முன்னோர்களைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

### சொக்கப்ப ஐயா

அழகப்பையாவின் பாட்டனார் பெயர் க.வீ.சொக்கலிங்கம் செட்டியார். இவர் பெரும் தனவணிகர். பல திருப்பணிகள் செய்துள்ளார். கோவிலூர் மடாலயத்தின் இரண்டாவது மடாதிபதியான துறவு ஆண்டவர் என்னும் சீர்வளர்சீர் அருணாச்சல ஞானதேசிக சுவாமிகளிடமும் மூன்றாவது மடாதிபதி சீர்வளர்சீர் சிதம்பர ஞானதேசிக சுவாமிகளிடமும் முதன்மை சீடராக இருந்து, வேதாந்தப் பாடம் பயின்றும், பலருக்குப் பயிற்றுவித்தும் வந்துள்ளார். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் தமக்கு வேதாந்தத்தில் சந்தேகம் வருகின்ற போதெல்லாம் இவரிடம் கேட்டுத் தெளிவு பெற்றுள்ளார்.

கோவிலூர் மடாலயத்தில் வேதாந்தம் கற்று காவி உடையணிந்து துறவு பூண்டவரை ‘சுவாமிகள்’ என்றும், வேதாந்தம் கற்று காவி அணியாமல் வெள்ளை உடையிலேயே இல்லறத்தில் இருந்து வருபவர்களை ‘ஐயா’ என்றும் அக்காலத்தில் அழைத்துள்ளனர். சொக்கலிங்கம் செட்டியார் வேதாந்தம் கற்று இல்லறத்தில் இருந்து வந்ததால் ‘சொக்கப்பையா’ என்னும் திருப்பெயரால் அழைக்கப் பெற்றுள்ளார்.

சொக்கப்பையா, துறவு ஆண்டவரின் சீடராக சிதம்பரத்தில் வாழும் காலத்தில் தம் சொந்த செலவில் இளமையாக்கினார் கோயிலில் சில திருப்பணிகள் செய்தும், சிதம்பரத்தில் உள்ள பொன்னம்பல சுவாமிகள் மடமும், அருகே துறையூரில் உள்ள மடமும் நிலையாக நடந்திட வழிவகை செய்துள்ளார். கோவிலூர் மடாதிபதியின் நேரடி நம்பிக்கைக்குரியவராக இருந்துள்ளார். அதற்கு ஒரு உதாரணம் கோவிலூர் மடாலயத்தின் பெயரில் வாங்கும் சொத்துகளுக்கு சாட்சி கையெழுத்திட்டு வந்துள்ளார்.

கோவிலூர் மடாலயத்திற்குச் சொந்தமான ‘களத்தூர்’ என்னும் கிராமத்தில் பர்வதவர்த்தனி உடனமர் இராமநாதசுவாமி கோயிலை தம் சொந்த பொருட் செலவில் புதிதாய் கட்டி, சிதம்பர ஞானதேசிக சுவாமிகள் முன்னிலையில் கும்பாபிஷேகம் செய்து, அதன் அருகே ஒரு மடத்தை நிறுவி பலருக்கும் வேதாந்தம் பயிற்றுவித்து வந்துள்ளார் சொக்கப்பையா. இந்த கோயிலில் நித்திய பூஜைகள் சிறப்பாக நடந்திட செட்டிவயல் என்னும் கிராமத்தை எழுதி வைத்துள்ளார்.

இப்படியாக பல திருப்பணிகளை செய்து, வேதாந்த நூல்களை பயிற்றுவித்து வந்த சொக்கப்பையா கி.பி.1889ஆம் ஆண்டு சித்தியடைந்தார். இவரது சமாதி கோவிலூர் மடாலய நந்தவனத்தில் உள்ளது.

### வீரப்ப செட்டியார்

அழகப்பையாவின் தந்தை க.வீ.சொ.வீரப்ப செட்டியார். இவர் தம் தந்தை சொக்கப்பையாவை பின்பற்றி இளமையாக்கினார் கோயிலை, காரைக்குடி பெரி.க. குடும்பத்தாருடன் இணைந்து முழுக்கோயிலையும் புதிய கல்திருப்பணி செய்து கி.பி.1900-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்துள்ளார். மேலும், சிதம்பரம் பொன்னம்பல சுவாமிகள் மடத்தையும், துறையூர் மடத்தையும் விரிவுபடுத்திக் கட்டியுள்ளார்.

### அழகப்ப ஐயா(1875-1946)

க.வீ.சொ.வீரப்ப செட்டியாரின் மகனாக கி.பி.1875-ஆம் ஆண்டு, பிப்ரவரி, 5ஆம் நாள் பிறந்தார் அழகப்ப



சனாதன தர்ம வித்யாலயா
(அழகப்ப ஐயாவின் பூர்வீக வீடு)

செட்டியார். பர்மா, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளில் பெரும் வணிகம் செய்து வந்தார். தன் பாட்டனாரை பின்பற்றி கோவிலூர் மடாலயத்துடன் நெருங்கிய தொடர்பில் இருந்தார். கோவிலூர் மடாலய ஐந்தாவது மடாதிபதி சீர்வளர்சீர் வீரசேகர ஞானதேசிக சுவாமிகளிடம் வேதாந்த பாடம் கேட்டு, சுவாமிகளின் அன்புக்குரிய சீடராக இருந்தார். தனது பாட்டனார் போல் வேதாந்தம் கற்று இல்லறத்தில் இருந்து வந்ததால் அழகப்ப செட்டியார் 'ஐயா' என்ற பட்டம் பெற்று 'அழகப்பையா' என்னும் திருப்பெயரால் அழைக்கப் பெற்றார்.




களத்தூர்

சொக்கப்பையா கட்டிய 'களத்தூர்' இராமநாத சுவாமி கோயிலை அழகப்பையா அன்றைய மதிப்பில் 10,000/- ரூபாய் செலவில் சீர்திருத்தி, வீரசேகர சுவாமிகள் தலைமையில் கி.பி.1908-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்துள்ளார். கோ.அளகாபுரி அருகேயுள்ள 'கல்லாங்குடி' திருப்பாகதீஸ்வரர் கோயிலை 50,000/- ரூபாய் செலவில் விரிவுபடுத்திக் கட்டி கி.பி.1922-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்துள்ளார்.

சிதம்பரம் அருகே திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற திருநெல்வாயில் என்னும் 'சிவபுரி' உச்சிநாதர் கோயில் சிதிலமடைந்திருந்ததைக் கண்டு வருத்தமடைந்த அழகப்பையா. தன்னுடன் க.வீ.மு.ப.கதிரேசன் செட்டியார் மற்றும் காரைக்குடி முத்து.அரு.மு.அருணாச்சலம் செட்டியார் ஆகியோரை இணைத்து கோயில் திருப்பணிகளை தொடங்கினார். பழைய கோயிலை முற்றிலுமாக பிரித்து, அன்றைய மதிப்பில் 3,27,500/- ரூபாய் செலவில் புதிய கருங்கற்களால் இராஜகோபுரத்துடன் பெரிய கோயிலாக கட்டி கி.பி.1928-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்தார். தொடர்ந்து அழகப்பையாவின் வம்சாவளியினரால் 1957, 1982, 2008 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் செய்யப் பெற்று, அன்று முதல் இன்று வரை சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் அழகப்பையாவால் சிவபுரியில் அழகிய திருக்குளம், நந்தவனம், பசுமடம், தண்ணீர்ப்பந்தல், அக்ரஹார வீடுகள் ஆகியன உருவாக்கப் பெற்றுள்ளன.

கும்பகோணம் அருகேயுள்ள பாடல் பெற்ற தலமான 'அவளிவநல்லூர்' சாட்சிநாதர் கோயிலும் சிவபுரி போல் சிதிலமடைந்திருந்துள்ளது. அழகப்பையா தன் பெரும் முயற்சியில், காரைக்குடி மெ.மெ.மெய்யப்ப செட்டியார் மற்றும் நேமத்தான்பட்டி மு.பெ.காசி செட்டியார் ஆயியோருடன் இணைந்து பழைய கோயிலைப் பிரித்து, புதிய கருங்கற்களால் சுமார் 1,00,000/- ரூபாய் செலவில் கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்துள்ளார். வேதாந்தப் பாடம் மூலம் தம் வாழ்வில் ஒளி ஏற்றிய கோவிலூர் மடத்திற்கு மின்சார ஒளி வசதி ஏற்படுத்தியுள்ளார் அழகப்பையா.

தனது குரு வீரசேகர ஞானதேசிக சுவாமிகளால் கல்திருப்பணி செய்யப்பெற்று கி.பி1911-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற 'திருக்களர்' பாரிஜாதவனேசுவரர் கோயிலின் அறங்காவலராக இருந்து பல திருப்பணிகள் செய்து கி.பி1933-ஆம் ஆண்டு மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் தலைமையில்



சிவபுரி

இரண்டாவது கும்பாபிஷேகம் செய்துள்ளார். திருவண்ணாமலை அருகே ‘பழங்கோயில்’ எனும் ஊரில் உள்ள பலக்ராதீஸ்வரர் கோயில் சிதிலமடைந்திருந்ததை கண்ட அழகப்பையா அக்கோயிலை 20,000/- ரூபாய் செலவில் சீர்திருத்தி, விரிவுபடுத்திக் கட்டி கி.பி.1933-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்துள்ளார். மேலும் கோயிலில் தினசரி பூஜைகள் நடந்திட எலத்தூர் என்னும் கிராமத்தை வாங்கி கோயிலுக்கு எழுதி வைத்துள்ளார். நில விபரங்களை சர்வே எண்ணுடன் கோயிலில் கல்வெட்டாக பொறித்து வைத்துள்ளார். இன்றும் அதை நாம் காணலாம்.

‘குருநாதர்’ என்று அழைக்கப் பெற்ற ஸ்ரீ யோகானந்தேந்திர சரஸ்வதி சுவாமிகள் தம் இறுதிகாலத்தில் கோட்டையூரில் தங்கியிருந்து சமாதியானார்கள். அவர்களுக்கு அழகப்பையா, கோட்டையூர் நகரத்தார் பொருளுதவியுடன் அழகிய அதிஷ்டான ஆலயம் எழுப்பி, அதன் முன்பு தம் சொந்த பொருட் செலவில் அலங்கார மண்டபம் கட்டி, கி.பி.1937-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்துள்ளார். அலங்கார மண்டப கல்தூண்களில் அழகப்பஜயாவும் அவர்தம் மனைவி அலமேலு ஆச்சியும் சதாசேவிப்பு சிற்பமாக காட்சியளிக்கின்றனர். இந்த ஆலயம் அழகப்பையாவின் வம்சாவளியினரால் 1994 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் செய்யப்பெற்று சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசரால் பாடல்பெற்ற திருநாரையூர் சுயம்பிரகாசர் கோயிலில் காரைக்குடி பழ.இராம. லெட்சுமணன் செட்டியாரால் 1930களில் திருப்பணிகள் தொடங்கப் பெற்றது. இக்கோயில் பற்றி தெரிந்து கொண்ட அழகப்பையா, திருப்பணியில் இணைந்து கொண்டார். தம் சொந்த பொருட்செலவில் சுவாமி கோயிலின் திருச்சுற்று திருமாளிகை, தெட்சிணாமூர்த்தி மண்டபம், லெட்சுமி சந்நிதி, உள் இராஜகோபுரம், உள் மதில்சுவர் மற்றும் தீர்த்தப்படித்துறைகள் ஆகியவற்றை கட்டிக்கொடுக்க, கி.பி.1943-ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. தாம் பிறந்த மெ.க வகையாருக்கு விருப்பத்திற்குரிய திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கும்பாபிஷேகம் கி.பி.1944-ல் நடைபெற்ற போது, அக்கோயில் அறங்காவலராக இருந்தார் அழகப்பையா. மேலும், தமது குலதெய்வ கோயிலான மூலங்குடி பொய்சொல்லா மெய்யர் கோயிலுக்கும் கும்பாபிஷேகம் செய்துள்ளார்.


திருநாரையூர்



சொக்கப்ப ஐயா – அழகப்ப ஐயா சமாதி

அழகப்பையா, கோயில்கள் திருப்பணி செய்யும் காலத்தில் அக்கோயில்கள் தொடர்பான புராண நூல்கள் மற்றும் வரலாற்று நூல்கள் பல வெளியிட்டுள்ளார். அதில் குறிப்பிடத்தக்க நூல்கள் ‘சொர்ணபுரீஸ்வரர் சௌந்தரிய நாயகி அந்தாதி-1917’, ‘செல்வவிநாயகர் செம்பொன்மாலை-1917’, ‘சிவபுரி புராணம்-1923’, ‘கோவிலூர் நால்வர் நான்மணிமாலை-1930’, ‘திருநாரையூர்ப்புராணம்-1935’, ‘ஆன்மானான்ம விவேகம்-1938’, ‘திருவண்ணாமலை வரலாறு-1940’, ‘வினாவிடை மணிமாலை-1943’. அழகப்பையா ஆன்மீக பணிகள் மட்டுமல்லாது கல்வி பணிகளும் செய்துள்ளார். மலேசியா கோலப்பிலா-வில் வணிகம் செய்து வந்த போது, மலேசிய பல்கலைக்கழகத்திற்கு கி.பி.1940களில் 200அமெரிக்க டாலர் நிதியுதவி செய்துள்ளார்.

கோட்டையூரில் தாம் பிறந்து வளர்ந்த பூர்வீக வீட்டில் உள்ள அனைவரின் பங்குகளையும் விலைக்கு வாங்கி அப்பெரிய வீட்டை 1940ஆம் ஆண்டு, செப்டம்பர், 15-ஆம் நாள் ‘சனாதன தர்ம வித்யாலயா’ என்ற பெயரில் பள்ளிக்கூடமாக உருவாக்கினார். இன்றும் இவரது வம்சாவளியினரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

பற்பல கோயில் திருப்பணிகள் மற்றும் கல்விப்பணிகள் செய்துவந்த அழகப்பையா தமது 71வது அகவையில் கி.பி.1946ஆம் ஆண்டு சித்தியடைந்தார். இவரது சமாதி கோவிலூர் மடாலய நந்தவனத்தில் உள்ள சொக்கப்பையா சமாதியின் எதிரில் உள்ளது. சொக்கப்பையா லிங்கமாகவும், அழகப்பையா நந்தியாகவும் அருள்பாலிக்கின்றனர். வருடம் தோறும் வைகாசி மாதம் சொக்கப்பையாவுக்கும், சித்திரை மாதம் அழகப்பையாவுக்கும் குருபூஜைகள் நடைபெற்று வருகின்றன.

27 கிளைகள், 36 வருட அனுபவம்




ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜென்ஸி

98421 62416
97918 48265
98424 47305
98421 62265



RECOGNIZED GOVT. OF INDIA TOURISM

H.O. 10, வடக்கு ஆவணி மூல வீதி. மதுரை-1

## SPECIAL TOURS

www.srimurugantravel.com

| நாள் | சுற்றுலா | புறப்பாடு | கட்டணம் |
|---|---|---|---|
| 10 நாள் | ஆக்ரா-காசி அயோத்தியா | மாதந்தோறும் 9,21 | Rs. 13500/- |
| 13 நாள் | டெல்லி-ஆக்ரா அயோத்தியா | மாதந்தோறும் 6,18,27 | Rs. 17500/- |
| 6 நாள் | ஸ்ரீரடி பண்டரிபுரம் | மாதந்தோறும் 1,8,15,22 | Rs. 8000/- |
| 10 நாள் | குஜராத்-துவாரகா பட்டேல்சிலை | மாதந்தோறும் 17 | Rs. 17000/- |
| 17 நாள் | பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி | மாதந்தோறும் 10,20 மே முதல் | Rs. 30000/- |
| 13 நாள் | பத்ரிநாத் கேதார்நாத் | மாதந்தோறும் 10,20 மே முதல் | Rs. 25000/- |
| 14 நாள் | முக்திநாத்-நேபாள் கொல்கத்தா | மாதந்தோறும் 18 | Rs. 27000/- |
| 15 நாள் | நவஜோதிர்லிங்கம் | மாதந்தோறும் 18 | Rs. 20000/- |
| 10 நாள் | சிம்லா-மணாலி ஆக்ரா | ஏப் 1,8,15,22,29 மே. 1,8,20,27 | Rs. 18000/- |
| 13 நாள் | அமர்நாத் | ஜுலை முதல் | Rs. 16000/- |

| நாள் | சுற்றுலா | புறப்பாடு | கட்டணம் |
|---|---|---|---|
| 2 நாள் | மும்பை-ஸ்ரீரடி | தினந்தோறும் | Rs. 14990/- |
| 4 நாள் | கோவா SPL | | Rs. 24990/- |
| 4 நாள் | டெல்லி-ஆக்ரா ஜெய்ப்பூர் | வாரந்தோறும் வியாழன் | Rs. 26990/- |
| 5 நாள் | அந்தமான் ஹேவலோக் | தினந்தோறும் | Rs. 29990/- |
| 5 நாள் | காஷ்மீர் குல்மார்க் | வாரந்தோறும் புதன் | Rs. 44990/- |
| 5 நாள் | டார்ஜலிங் கேங்டாக் | வாரந்தோறும் புதன் | Rs. 39990/- |
| 7 நாள் | NORTH EAST | வாரந்தோறும் திங்கள் | Rs. 44990/- |
| 3 நாள் | பூரி புவனேஸ்வர் | வாரந்தோறும் வெள்ளி | Rs. 24990/- |
| 7 நாள் | குஜராத் துவாரகா | வாரந்தோறும் செவ்வாய் | Rs. 35990/- |

| நாள் | சுற்றுலா | புறப்பாடு | கட்டணம் |
|---|---|---|---|
| 6 நாள் | காசி அயோத்தியா | | Rs. 34990/- |
| 8 நாள் | பத்ரி-கேதார் | வாரந்தோறும் ஞாயிறு | Rs. 44990/- |
| 12 நாள் | பத்ரி-கேதார் கங்கோத்ரி-யமுனோத்ரி | வாரந்தோறும் திங்கள் | Rs. 54990/- |
| 6 நாள் | முக்திநாத் நேபாள் | ஏப்ரல் 1,18 மே 1,10,18 | Rs. 29990/- |
| 6 நாள் | பூடான் SPL | வாரந்தோறும் செவ்வாய் | Rs. 44990/- |
| 8 நாள் | காஷ்மீர் லே-லடாக் | வாரந்தோறும் ஞாயிறு | Rs. 64990/- |
| 5 நாள் | சிம்லா-குளு மணாலி | வாரந்தோறும் புதன் | Rs. 27990/- |
| 5 நாள் | லே-லடாக் | வாரந்தோறும் | Rs. 54990/- |
| 6 நாள் | நைனிட்டால் முசௌரி-கார்பெட் | வாரந்தோறும் புதன் | Rs. 34990/- |

| நாள் | சுற்றுலா | கட்டணம் |
|---|---|---|
| 6 நாள் | சிங்கப்பூர் மலேசியா | Rs. 84,990/- |
| 5 நாள் | சிங்கப்பூர் மலேசியா | Rs. 74,990/- |
| 10 நாள் | சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து | Rs. 1,34,990/- |
| 8 நாள் | சிங்கப்பூர் மலேசியா தாய்லாந்து | Rs. 94,990/- |
| 5 நாள் | பாங்காக் பட்டாயா Standard | Rs. 52,000/- |
| 4 நாள் | பாங்காக் பட்டாயா Basic | Rs. 37,990/- |
| 5 நாள் | புக்கட் கராபி | Rs. 64,990/- |
| 8 நாள் | Exclusive தாய்லாந்து | Rs. 94,990/- |
| 4 நாள் | மாலத்தீவு Special | Rs. 59,990/- |

| நாள் | சுற்றுலா | கட்டணம் |
|---|---|---|
| 5 நாள் | ஸ்ரீலங்கா Special | Rs. 44,990/- |
| 8 நாள் | Exclusive ஸ்ரீலங்கா | Rs. 64,990/- |
| 5 நாள் | இந்தோனேசியா பாலி | Rs. 64,990/- |
| 6 நாள் | வியட்நாம் கம்போடியோ கலாங் விரிகுடா | Rs. 94,990/- |
| 7 நாள் | Exclusive சீனா | Rs. 1,54,000/- |
| 10 நாள் | ஹாங்காங் மக்காவ் | Rs. 1,34,990/- |
| 6 நாள் | ரஷ்யா Special | Rs. 1,34,990/- |
| 4 நாள் | எகிப்து Special | Rs. 1,29,990/- |
| 8 நாள் | எகிப்து Cruise | Rs. 1,65,990/- |

| நாள் | சுற்றுலா | கட்டணம் |
|---|---|---|
| 5 நாள் | துபாய் அபுதாபி | Rs. 74,990/- |
| 7 நாள் | சௌத்கொரியா | Rs. 1,69,990/- |
| 7 நாள் | கென்யா | Rs. 1,59,990/- |
| 9 நாள் | ஆஸ்திரேலியா | Rs. 2,94,990/- |
| 11 நாள் | ஆஸ்திரேலியா நியூசிலாந்து | Rs. 5,29,990/- |
| 9 நாள் | ஜப்பான் | Rs. 2,94,990/- |
| 12 நாள் | ஈரோப் Special | Rs. 2,74,990/- |
| 4 நாள் | உஸ்பெகிஸ்தான் | Rs. 54,990/- |
| 4 நாள் | கஜகஸ்தான் அல்மைட்டி | Rs. 74,990/- |

## அதிரடி ஆஃபர்

**12 நாள் ஈரோப் SPL**
ஏப்ரல் 30, மே 12
~~ரூ. 3,25,000/-~~ ரூ. 2,75,000/- முதல்

**6 நாள் சிங்கப்பூர் மலேசியா**
மாதந்தோறும் 1,10,18,25
~~ரூ. 95,000/-~~ ரூ. 88,000/- முதல்

**5 நாள் துபாய் அபுதாபி**
~~ரூ. 75,000/-~~ ரூ. 70,000/- முதல்

இது தவிர மேலும் பல சுற்றுலாக்கள் மற்றும் குரூப் சுற்றுலா, தனி நபர் சுற்றுலா, கல்வி, கம்பெனி குரூப் சுற்றுலாக்களுக்கு 97918 48265 / 98421 62416



PALANI

HOTEL PL GRAND
PLEASANT STAY



KARAIKUDI

98421 62416 / 97918 48265
www.hotelplgrand.com

# வாங்க... வாங்க... வியட்நாமுக்கு வாங்க...

## 12 அண்டை நாடு – லாவ் (Laos)



சோமலெ
சோமசுந்தரம்




### அறியாத லாவ்!

சிறு குழந்தைக்குக் கூட தெரிந்த வார்த்தை 'லவ்' (love). உலகறிவு பெற்ற பலரும் கேள்விப்படாத சொல் 'லாவ்'.

வியட்நாமைச் சுற்றியுள்ள மூன்று அண்டை நாடுகளில் வடக்கே உள்ள சீனாவையும், தென் மேற்கே உள்ள கம்போடியாவையும் பலரும் அறிவோம். மேற்கே உள்ள லாவ் உலக வெளிச்சத்திற்கு வராத அமைதியான நாடு.

தென் கிழக்காசிய நாடுகளில் கடற்கரையே இல்லாமல், நிலத்தால் சூழப்பட்ட நாடு லாவ். இதனுடைய அண்டை நாடுகளான வியட்நாம், சீனா, மியன்மார் (பர்மா), தாய்லாந்து, கம்போடியா போன்று, லாவ் அதிகம் அறியப்படாததற்குக் காரணம், லாவ் நாட்டிற்குள் 1900 வரை சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படவில்லை!

லாவ் நாட்டைப் பார்க்க வேண்டுமென அதற்கு மட்டும் செல்பவர்கள் அண்டை நாட்டினர் மட்டுமே. பெரும்பாலான உலக சுற்றுலாப் பயணிகள் தாய்லாந்து, வியட்நாம், சீனா செல்லும் போது முடிந்தால் லாவ் சென்று வருகின்றனர். நாங்களும் அவ்வகையைச் சேர்ந்தவர்களே. வியட்நாம் போரில் அமெரிக்காவின் ஈடுபாட்டால் வியட்நாமைப் பார்க்க எங்களுக்கு ஆவல். வியட்நாம் செல்ல முடிவு செய்ததால், அருகே உள்ள கம்போடியா மற்றும் லாவ் நாட்டையும் பார்க்கத் திட்டமிட்டோம்.

லாவ் நாட்டின் பரப்பளவு 236,800 சதுர கிலோமீட்டர். தமிழ் நாட்டை விடக் கிட்டத்தட்ட 1.8 மடங்கு பரப்பளவில் பெரிய இந்நாட்டின் மக்கள் தொகையோ (79 இலட்சம்) தமிழக மக்கள் தொகையை விடப் பத்து மடங்கு குறைவாகும்.

அறிவியலும், தொழில் நுட்பமும் இன்னும் தலை காட்டாத, ரம்மியமான கிராமப்புற இயற்கைக் காட்சிகள் மற்றும் பாரம்பரிய வாழ்க்கை – இதுவே இன்றைய லாவ்.

### காலையில் எழுந்ததும்...

'லுஅங் பிரபங்' – இது எழுத்துப் பிழையல்ல! லாவ் நாட்டின் தலைநகரும் பெரிய நகரும் வியென்டியான். ஆனால், சுற்றுலா மையமோ லுஅங் பிரபங் (Luang Prabang) நகர் மற்றும் அதைச் சுற்றிய பகுதிகளாகும். இப்பகுதியின் கலாச்சாரம், கட்டிடக்கலை மற்றும் மதம் சார்ந்த தொன்மைகளைப் பாதுகாக்க யுனெஸ்கோ பாரம்பரியத் தளமாக (UNESCO Heritage Site) அறிவிக்கப்பட்டுள்ளது.

லுஅங் பிரபங் நகரில் கண்டிப்பாகப் பார்க்க வேண்டியவை காலை எழுந்ததும் 'டக் பாட்', தூங்குவதற்கு முன்பு 'இரவுச் சந்தை'. இரவுச் சந்தை புரிகிறது, அது என்ன 'டக் பாட்'? என்ற ஆவலுடன் அதைப் பார்க்க அதிகாலை ஐந்தரை மணிக்கு எழுந்து தெருவில் போய் நின்றோம்.

மகளிர் தெருவோரங்களில் அமர்ந்து கொடுக்கின்ற அன்னதானத்தை இந்நகரில் உள்ள எண்பதுக்கும் மேற்பட்ட



புத்தர் கோவில்களில் வாழ்கின்ற துறவிகள் வரிசையாக வந்து பெற்றுக்கொள்ளும் தனித்துவமான காட்சி தான் அது!

நம் ஊர் கோவில்களுக்கு வெளியே அமர்ந்துள்ள துறவிகள் மற்றும் பிச்சைக்காரர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கும் இதற்கும் அப்படியென்ன வித்தியாசம் என்ற கேள்வி வரலாம். இந்தத் துறவிகள் எட்டு வயது முதல் எண்பது வயது வரை உள்ளனர். இளம் துறவிகளைப் பார்க்கும்போது மெய்சிலிர்க்கிறது! அன்னதானம் வழங்குபவர்களும் வரிசையில் அமர்ந்து பய பக்தியோடு வழங்குகின்றனர். யாரும் யாரிடமும் பேசுவதில்லை. மிக அமைதியான தெய்வீகச் சூழ்நிலை. இந்நாட்டினர் விரும்பிச் சாப்பிடுகின்ற சர்க்கரை சாதம் போன்ற (sticky rice) உணவே துறவிகளுக்குப் பெரும்பாலும் வழங்கப்படுகிறது. மற்ற உணவுப் பொருட்களையும், பூக்களையும் வழங்குகிறார்கள்,

துறவிகள் தாங்கள் வாழும் கோவிலுக்குத் திரும்பிச் சென்று, பெற்ற அன்னதானத்தை மற்ற துறவிகளோடும் பக்தர்களோடும் பகிர்ந்து கொள்வார்களாம். பொருளுக்கும், ஆடம்பரத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் இந்த உலகத்தில், பணிவு மற்றும் கருணை ஆகிய நற்பண்புகளை மனதில் பதிய வைக்கும் பாடங்களோடு எங்களின் அன்றைய காலை உதயமாகியது.

### வம்புச் சண்டைக்குப் போகாமல் வந்த சண்டை!

போருக்குப் போகாமலேயே உலகிலேயே மிக அதிகக் குண்டுத் தாக்குதலுக்கு ஆளான நாடு லாவ்! ரஷ்ய – அமெரிக்க விரிசல்களில் நடு நிலைமை வகித்த லாவ், அமெரிக்க – வியட்நாம் போரில் அந்த இரண்டு நாடுகளுக்குமிடையே மாட்டிக்கொண்டது. வடக்கு வியட்நாமை ஆதரித்த லாவ் கம்யூனிஸ்ட்களை அழிக்கும் நோக்கத்தோடு, லாவ் நாட்டில் தமக்கு ஆதரவாக இருந்த அரச குடும்பத்தை நிலைப்படுத்தும் பணியில் களம் இறங்கியது அமெரிக்கா. அதன் கொடிய விளைவே லாவ் நாட்டில் 1964 முதல் 1973 வரை அமெரிக்கா கொட்டித் தீர்த்த இரண்டு மில்லியன் வெடி குண்டுகள். இரண்டாம் உலகப்போரில் பல நாடுகள் மீது மொத்தமாகப் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகளின் அளவு இதை விடக் குறைவே. லாவ் நாட்டைத் தாக்கிய குண்டுகளில் மூன்றில் ஒரு பங்கு வெடிக்காமல், காடுகளிலும், மலைகளிலும், வயல்களிலும் இன்றும் இருப்பதால் வியட்நாம் போர் முடிந்த ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகும் கிராமப்புற அன்றாட வாழ்வில் போரின் தாக்கம் இருக்கிறது.

### வளையலாகிய வெடிகுண்டு!

புகழ் பெற்ற லுஅங் பிரபங் இரவுச் சந்தையில் உள்ள எண்ணற்ற தெருவோரத் தற்காலிக நடைபாதைக் கடைகளில் எங்களை மிகவும் சிந்திக்க வைத்தது ஒரு கடை. அந்தக் கடையில் இருந்த பொருட்களோ எளிமையான, அலுமினியத்தில் செய்யப்பட்டக் கரண்டிகள், வளையல்கள்,



மோதிரங்கள், சாவிக் கோர்வைகள். அவற்றை நேர்த்தியாக அடுக்கிவைத்து விற்றுக்கொண்டிருந்த லாவ் பெண்மணியின் அருகே இருந்தது சிறு செய்திப் பலகை: ‘இந்த வளையல்கள் வெடிகுண்டுகள்’ என்ற தலைப்பில் ஒரே பத்தியில் செய்தி.




‘நாங்கள் போர்களை உருவாக்காமல் வளையல்களைச் செய்கிறோம். இங்கே உள்ள பொருட்கள் அனைத்தும் 1964 முதல் 1975 வரை போரில் வீசப்பட்ட வெடிகுண்டுகளில் இருந்து எடுக்கப்பட்ட அலுமினியத்தில் இருந்து செய்யப்பட்டவை. இக்கைவினைப் பொருட்கள் மூலம் வெடிகுண்டிற்குப் புதிய அர்த்தத்தைக் கொண்டு வந்துள்ளோம். எங்களின் வறுமையைப் போக்க இவை உதவுகின்றன. உங்கள் ஆதரவிற்கு மிக்க நன்றி.’

அச்செய்தியைப் படிப்போரின் உடல் சிலிர்க்கிறது, உள்ளம் நெகிழ்கிறது. பேரம் ஏதும் பேசாமல் அந்த (வெடிகுண்டு) வளையல்களைச் சுற்றுலாப் பயணிகள் வாங்கிக் கொண்டு விரைவாகவும், அமைதியாகவும் அடுத்த கடைக்குச் சென்று விடுகின்றனர்.

(தொடரும்)

நமது செட்டிநாடு



சென்ற இதழ் தொடர்ச்சி

# நகரத்தார் திருப்பணிகள்



சொ.சொ.மீ.சுந்தரம்

## 115) திருவண்ணாமலை – (Pincode - 606 601):

### பிற பணிகள்:

கி.பி. 1872-ல் தொடங்கப் பெற்ற கோட்டையூர் மெ.க. சத்திரத்தார், காலையில் அபிஷேகத்திற்கு நாள்தோறும் 5 லிட்டர் பால் வழங்கி வருகிறார்கள். சிவகங்கைத் தீர்த்தக் குளம், குளக்கரை விநாயகர் கோயில் இரண்டிலும் திருப்பணி செய்த கோட்டையூர் க.வீ.அழ.ராம. குடும்பத்தார் இவற்றுக்கான நித்திய பூஜைச் செலவு, குருக்கள் சம்பாவனை, மின்கட்டணம் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

அண்ணாமலையார் கோயிலுக்கு மிகப் பெரிய அளவில் திருப்பணி செய்த நாட்டுக்கோட்டை நகரத்தார்கள், பாண்டு பத்திரங்கள் எழுதும் போது அண்ணமலையார் துணை என்றே போடுவார்கள். இது கையெழுத்துக்குச் சமமாக மதிக்கப்படும். இவர்கள் பக்தி திருப்பணியாய் மலர்ந்தது. கானாடுகாத்தான் வெ.சா. நாகப்ப செட்டியார் குடும்பத்தார் ஒரு தேர் செய்து, ஆனந்த ஆண்டு, கார்த்திகைத் திங்கள், ஐந்தாம் நாள் (1913) வெள்ளோட்டம் விட்டனர். இது போல அம்மன் தேரைப் புதுப்பித்து 29.06.1956-ல் வெள்ளோட்டம் விட்டனர். காரைக்குடி சா.நா.சா. குடும்பத்தார் பிச்சாண்டவருக்குத் தங்கக் கவசம் செய்து வைத்தனர். கடியாபட்டி தீ.நா., தீ.சொ., தீ.அ. ஆகியோர் கல்யாண மண்டபம் கட்டி வெள்ளி ரதமும் செய்து வைத்தனர். அண்ணாமலையார் கோவிலுக்குக் கிழக்கே ஐயன் குளம் எனப்படும் இந்திர தீர்த்தம் உள்ளது. இதன் மேற்குக் கரையில் உள்ள சஞ்சீவிராயர் கோயிலைப் பிரித்துப் புதுக்கோயிலாக இருபதாம் நூற்றாண்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் கட்டி இருக்கிறார்கள்.

துர்க்காம்பாள் கோயிலில் மண்டபங்களும், கோபுரங்களும், மதில்களும் கட்டிக் கோட்டையூர் அ.க.அ.மெ. குடும்பத்தாரும், ராம.பெ. அவர்களும் செய்த திருப்பணிக் கைங்கர்யச் செலவு ரூ.3,50,000/-. இவ்வாறு அனுமார் வாலை அளந்தாலும் அண்ணாமலையாருக்கு நகரத்தார் செய்த பணிகளை அளக்க முடியாது என்பது சத்திய வாக்கு.

### அணி அண்ணாமலை:

இத்திருத்தலம் திருவண்ணாமலை கிரிவலத்தில் ஒன்பது கிலோமீட்டர் தூரத்தில் மலையின் மேற்குப் பகுதியில் உள்ளது. திருநாவுக்கரசர் பாடிய தேவாரத்தில் ஏழு பாடல்கள் இத்தலத்துக்குரியவை.

ஓதிமா மலர்கள் தூவி உமையவள் பங்கா! மிக்க
சோதியே! துளங்கும் எண்தோள் சுடர்மழுப் படையினானே!
ஆதியே! அமரர் கோவே! அணிஅணா மலையுளானே!
நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவிலேனே.

என்பது அவர் பாடல். மாணிக்கவாசகர் இங்குதான் திருவெம்பாவை பாடினார். இங்குள்ள குளம் தான் அவர் பாடிய பொங்குமடு. கிழக்கே திருமால் வழிபட்ட மூர்த்தி அண்ணாமலையார். மேற்கே பிரமன் வழிபட்ட மூர்த்தி அணி அண்ணாமலையார். இரண்டு கோயில்களுக்கும் இடையில் சுரங்கப் பாதை உள்ளது என்று கூறப்படுகிறது. இத்தலத்தில் கோட்டையூர் அ.க.அ.மெ. வகையார்களும், ராம.பெ. அவர்களும் சேர்ந்து புதுக்கோயில் கட்டி மண்டபங்கள், திருமதில், அக்கிரகாரம் ஆகியவை கட்டி ரூ.3,50,000/-க்குத் திருப்பணி செய்து, பிங்கள ஆண்டு, தை மாதம், ஞாயிற்றுக் கிழமை 27.01.1918-ல் திருக்குட நன்னீராட்டுச் செய்தார்கள். மீண்டும் கோட்டையூர் அ.க.அ.சித.அழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் பெரிய அளவில் திருப்பணி செய்து பிலவங்க ஆண்டு, வைகாசி மாதம், வெள்ளிக் கிழமை (19.05.1967) திருக்குட நன்னீராட்டுச் செய்தார்கள். கோட்டையூர் அ.க.அ.மெ. வகையார் சுவாமிக்கும், அம்மனுக்கும் நாகாபரணமும், வெள்ளிக் கவசங்களும் செய்து வைத்தனர். திருப்பணி விடுதி கட்டி பத்து அக்ரகார வீடுகள் கட்டி நித்திய வழிபாட்டுக்கு நிலம் வாங்கி வைத்துப் பெரும் பணி செய்துள்ளார்கள்.

## 116) திருமுண்டீச்சரம் (Pincode - 607 203):

பெண்ணையாற்றின் தென் கரையில் உள்ள இத்தலம் கிராமம் என்று அழைக்கப்படுகிறது. இது திருக்கோயிலூரிலிருந்து திருவெண்ணைநல்லூர் வழியாக அரசூர் செல்லும் பாதையில் உள்ளது. அப்பர் பாடல் பெற்ற இத்தலத்தில் இறைவர் பெயர் முடீஸ்வரர். இறைவி கானார்குழலி. சிவபிரானுடைய காவலர்களாகிய திண்டியும், முண்டியும் வழிபட்டுப் பேறுபெற்ற இக்கோயில் கி.பி.943-ஆம் ஆண்டில் கேரள மன்னான வெள்ளாங்குமரன் என்பவனால் கருங்கற் கோயிலாகக் கட்டப் பெற்றது. துவாபர யுகத்தில் வேட்டைக்கு வந்த சொக்கலிங்க மன்னன் இங்குள்ள குளத்தில் ஓர் அதிசயத் தாமரையைக்

கண்டான். அதைப் பறிக்க முயன்றான். அது அவன் கையில் அகப்படாமல் சுற்றிச் சுற்றி வந்தது. மன்னன் அதன் மீது அம்பு விட்டான். குளம் முழுவதும் செந்நிறமாயிற்று. மயங்கிய மன்னன் அருகில் சென்று பார்த்தான். அம்மலருக்குள் ஒரு சிவலிங்கம் இருந்தது. அதை எடுத்து இந்த ஆலயத்தைக் கட்டி இதில் வைத்தான். சிவலிங்கத்தின் மீது அம்பு பட்ட தழும்பு உள்ளது. இதனால் இறைவனுக்கு முடீஸ்வரர் என்ற பெயர் வந்தது. இதனால் கல்வெட்டில் இவ்வூர் "மௌலி கிராமம்" எனப்பட்டு நாளடைவில் கிராமம் மட்டும் மிஞ்சியது. முடீச்சரம் முண்டீச்சரம் ஆயிற்று. வீரபாண்டிய மன்னனுக்கு இறைவன் பொக்கணம் (திருநீற்றுப்பை) தந்ததால், கல்வெட்டில் பொக்கணம் கொடுத்த நாயனார் என்றழைக்கப் பெற்றது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆற்றின் கரையில் கோயில் இருப்பதால் இறைவன் ஆற்றுத்தளி மகாதேவர் என்றும் அழைக்கப்படுகிறார். இங்குக் கொடிமரம் இல்லை. சுவாமிக்கு வலப்பால் அம்மை சந்நிதி உள்ளது. தட்சிணாமூர்த்தி கல்லால மரமின்றி, மலை மீது நந்தியை வாகனமாகக் கொண்டு காட்சியளிக்கிறார். இது அப்பர் பாடல் பெற்ற தலமாகும்.

இத்தலத்தில் தேவகோட்டை வெ.அரு.வெ. குடும்பத்தார் ரூ.1,50,000/- செலவு செய்து நூறாண்டுகளுக்கு முன் திருப்பணி செய்தார்கள். அதன் பிறகு தேவகோட்டை ராம.அரு.அரு. ராம. அருணாசலம் செட்டியார் அவர்கள் திருப்பணி செய்து 30.08.1950-ல் திருக்குட நன்னீராட்டுச் செய்தார்கள்.

### 117) புறவார் பனங்காட்டூர் (Pincode - 605 603):

இத்தலம் இப்பொழுது பனையபுரம் என்று அழைக்கப்படுகிறது. இது திண்டிவனத்திலிருந்து விழுப்புரம் செல்லும் சாலையில் விக்கிரவாண்டியை அடுத்துள்ளது. பனைமரத்தைத் தலமரமாகக் கொண்டவை. ஐந்து தலங்கள். அவை, 1) வன்பார்த்தான் பனங்காட்டூர் 2) புறவார் பனங்காட்டூர் 3) திருப்பனந்தாள் 4) திருப்பனையூர் 5) திருவோத்தூர் ஆகியவை. புறவு என்ற சொல் சோலைகளையும், காடுகளையும் குறிக்கும். இது காடு சூழ்ந்த பகுதி என்பதால் புறவார் பனங்காட்டூர் ஆயிற்று. இறைவர் பெயர் பனங்காட்டூர். இறைவி பெயர் புறவம்மை. சம்பந்தர் பாடல் பெற்ற இது சூரியன் வழிபட்ட தலமாகும். இங்குள்ள திருநீலகண்டக் குயவனார் திருமேனி மிகச் சிறப்பானது. கல்வெட்டில் இறைவர் திருப்பனங்காடுடைய மகாதேவர் என்று குறிப்பிடப்படுகிறார். இத்தலத்தில் தேவகோட்டை கோவிலூரார் வீட்டைச் சேர்ந்த முத்துவீரப்பச் செட்டியார், பள்ளத்தூர் உ.அ.உ.அ. முத்தையா செட்டியார் ஆகியோர் பிற நகரத்தார்களோடு இணைந்து ஓர் இலட்சம் ரூபாய் செலவு செய்து நூறாண்டுகளுக்கு முன் திருப்பணி செய்துள்ளார்கள். வெளிப்புறத்தில் விநாயகர், முருகன் சந்நிதிகளுக்கருகில் தலமரங்களாகிய மூன்று பனைமரங்கள் உள்ளன,

## தொண்டை நாட்டுத் திருத்தலங்கள்

### 118) திருக்கழுக்குன்றம் (Pincode - 603 109):

செங்கல்பட்டிலிருந்து மாமல்லபுரம் செல்லும் வழியிலுள்ள இத்திருத்தலம் நால்வராலும் பாடப்பெற்ற தலமாகும். இங்கு வேதமே மலையாய் இருப்பதால் இது வேதகிரி எனப்படுகிறது. மலை மேல் உள்ள கோயிலில் நாள்தோறும் இரண்டு கழுகுகள் வந்து பிரசாதம் உண்டு சென்றதால் இது திருக்கழுக்குன்றம் எனப்பட்டது. இதற்குப் பட்சிதீர்த்தம் என்றும் பெயர். மலைக்கோயில் இறைவர் வேதகிரீஸ்வரர். இவர் சுயம்புமூர்த்தி. இறைவி சொக்கநாயகி. இது மார்க்கண்டேயர் வழிபட்ட தலமாகும். இங்கு உடற்பிணி தீர மலைவலம் வருவோர் அதிகம். மணிவாசகருக்கு இறைவன் குருவாக வந்து காணொணாத் திருக்கோலம் காட்டியது இத்தலத்தில் தான் நடந்தது. இங்குள்ள சங்கு தீர்த்தத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு பிறக்கிறது. கீழே உள்ள பெரிய கோயில் தாழக் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலில் இறைவர் பெயர் பக்தவத்சலேஸ்வரர். இறைவி திரிபுரசுந்தரி. தலமரம் வாழையாகும். அம்பாளுக்கு மார்பில் ஸ்ரீசக்ரம் சாத்தப்பட்டுள்ளது. ஆண்டில் 1) ஆடிப்பூரம், 2) பங்குனி உத்திரம், 3) நவராத்திரியில் வரும் நவமி ஆகிய மூன்று நாட்களில் மட்டுமே அம்மைக்கு அபிடேகம் செய்யப்படுகிறது. மற்ற நாட்களில் பாத பூஜை மட்டுமே நடைபெறும். ஆடிப்பூர நாளில் அம்மை மலையைச் சுற்றி வருகிறாள். இக்கோயில் காரைக்குடி நா.லெ. நா. நாராயணன் செட்டியார், சண்முகநாதபுரம் செ.ராம.ராம. இராமசாமி செட்டியார் இவர்களால் ரூ.1,00,000/- செலவில் திருப்பணி செய்யப் பெற்றது. தேவகோட்டை அழ.மு.கரு. வினைதீர்த்தாள் ஆச்சி மூவாயிரம் ரூபாய் செலவில் குருபூஜை மடம் அமைத்தார். காரைக்குடி நா.அ. நந்தவனம் வைத்தார்.

### 119) திருக்கச்சி ஏகம்பம் - காஞ்சிபுரம்:

செங்கற்பட்டிலிருந்து அரக்கோணம் செல்லும் பாதையில் உள்ள இத்தலம் வரலாற்றுக்கு முற்பட்டதாகும். இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பதஞ்சலியும், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இங்கு வந்த சீன யாத்ரிகர் யுவான்சுவாங்கும் இந்நகரைப் பாராட்டி வியந்திருக்கிறார்கள். கல்வியில் கரையிலாத காஞ்சி மாநகர் என்று அப்பர் சுவாமிகள் குறிப்பிடும் இத்தலத்தில் மூன்றாம் நூற்றாண்டிலேயே கடிகாஸ்தானம் எனப்படும் பல்கலைக் கழகம் இருந்தது. நாளந்தாப் பல்கலைக் கழகத் தலைவர் தர்மபாலர்,பேராசிரியர் தின்னாகர். பௌத்த தத்துவ ஞானி போதி தர்மர், அர்த்தசாஸ்திரம் எழுதிய பரிமேலழகர், பொய்கை ஆழ்வார், வேதாந்த தேசிகர், சியாமா சாஸ்திரிகள் ஆகியோர் இங்கே வாழ்ந்தவர்கள். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் காஞ் சிபுரத்திலிருந்துதான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சென்றார்கள். அப்பொழுது நகரம் என்று போற்றப் பெற்ற காஞ்சியிலிருந்து வந்ததால் இவர்கள் நகரத்தார் எனப் போற்றப் பெற்றனர். திருமழிசை ஆழ்வாரும், உடையவர் எனப்படும் இராமானுஜரும் காஞ் சியில் வாழ்ந்தவர்கள். முத்தித் தலம் ஏழில் முதன்மையானது காஞ்சி. கச்சியப்பர் காஞ்சியில் வாழ்ந்து கந்தபுராணம் பாடினார். காமாட்சியம்மை அருள்புரியும் இடம் காமக் கோட்டம். ஏகம்பரநாதர் கோயில் உள்ள இடம் திருவேகம்பம். இவை இரண்டுக்கும் நடுவில் முருகன் இருக்கும் குமரக் கோட்டம். இம்மூன்றும் சோமாஸ்கந்த வடிவில் அமைந்துள்ளன. சாக்கிய நாயனார் திருக்குறிப்புத் தொண்டர், ஐயடிகள் காடவர்கோன் ஆகியோர் வாழ்ந்த தெய்வத் திருத்தலம் இது. சுந்தரர் இங்குதான் இடக்கண் பெற்றார். மணிவாசகர் இத்திருக்கோயிலை "கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோயில்" என்று பாடுகிறார். இது நால்வராலும் பாடப் பெற்ற தலமாகும்.

(திருப்பணிகள் தொடரும்)




# திருநாகை என்னும் நாகப்பட்டினம் - (19)

நா. சௌரிராஜன், கோட்டையூர்



கடற்கரை நாகைக் கடவுளே போற்றி!
சௌந்தர ராஜப் பெருமாளே போற்றி!
சௌந்தரிய வல்லி அழகியே போற்றி! போற்றி!

*****

இந்தத் திருநாகை என்னும் நாகப்பட்டினம் இன்றையத் தமிழ்நாட்டில் உள்ள அழகிய கடற்கரை நகரங்களுள் மிகச்சிறந்த ஒன்றாகும். அனைத்துப் பகுதிகளிலும் இருந்தும் இங்குச் சென்று வரலாம்.



நாகங்களின் தலைவன் ஆதிசேடன் எம்பெருமானைக் குறித்துத் தவம் இருந்து, எம்பெருமான் காட்சி தந்து, ஆதிசேடனை எப்போதும் தான் சயனமாக ஏற்றுக் கொள்வதாக அருளிய ஸ்தலமிது. அதனால் அவன் பெயராலேயே நாகன் பட்டிணமாகி, நாகப்பட்டினம் ஆயிற்று.

இங்குள்ள புஷ்கரணி ஸார புஷ்கரணி. ஸாரம் என்றால் பாம்பு. பாம்பாகிய நாகராஜனால் உண்டாக்கப்பட்ட புஷ்கரணி. இத்தலத்தின் மகிமையை எல்லாம் நாரதர் மூலம் கேட்ட துருவன் என்னும் ராஜகுமாரன், இந்த உலகு முழுதும் தனக்கே அடிமையாக வேண்டும் என்று இவ்விடத்தைக் கடுந்தவம் செய்து, தவத்தின் இடையே ஏற்பட்ட எண்ணற்ற இடையூறுகளை எல்லாம் கடந்து நிற்க, இறுதியில் பெருமாள் கருடாழ்வார் மீது மிகுந்த பேரழகு பொருந்தியவராகக் காட்சி கொடுக்க, அப்பேரழகில் மயங்கித் துருவன், தான் கேட்க வந்த வரத்தையே வெறுத்து ஒதுக்கி, இறைவனின் இப்பேரழகிலேயே எப்போதும் திளைக்கும் மோட்சம் வேண்டும் என்று வேண்ட, அவ்விதமே மோட்சமளித்து, அவனுக்குக் காட்சி கொடுத்த அதே சௌந்தரியமான திருக்கோலத்திலேயே இவ்விடம் காட்சி தருகிறார்.

மூலவர்: கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம். நீலமேகப் பெருமாள்.

உற்சவர்: சௌந்தரிய ராஜன். தாயார்: சௌந்தரிய வல்லி.

நின்ற, இருந்த, கிடந்த என்ற மூன்று திருக்கோலச் சேவையும் இங்கு உண்டு. மூலவர் நின்ற திருக்கோலம், "வீற்றிருந்த பெருமாள்" என்ற அமர்ந்த திருக்கோலமும், பள்ளி கொண்ட திருக்கோலத்தில் அரங்கநாதனும் இங்குக் காட்சி தருகின்றனர்.

கடலில் வரும் கப்பல்களுக்கு வழிகாட்டக் கலங்கரை விளக்காக இதன் கோபுரம் அமைக்கப்பட்டு, அதன்மேல் விளக்கு வைத்துக் காட்டப்பட்டதாகக் கூறுவர்.


திருமங்கையாழ்வாரால் மட்டும் 10 பாசுரங்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருத்தலம். ஒவ்வொரு பாடலிலும், "அச்சோ ஒருவர் அழகியவா", "அச்சோ ஒருவர் அழகியவா" என்று இப்பெருமானின் பேரழகில் மயங்கி மையல் கொண்டு ஆனந்தித்து மகிழ்கிறார்.

(பயணம் தொடரும்)

# கர்நாடக நகரத்தார் சங்க புதிய நிர்வாகிகள்



கடந்த 02.02.2025 அன்று கர்நாடக நகரத்தார் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம், பெங்களூர் ராஜராஜேஸ்வரி நகரில் புதிதாக கட்டப்பட்ட சங்கத்தின் கட்டிடத்தில் நடைபெற்றது. அன்று சங்கத்தில் உள்ள கைலாச வினாயகர் திருக்கோயிலின் நன்னீராட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது. சங்கத்தின் புதிய கட்டிடத்தை கர்நாடக நகரத்தார் சங்கத்தின் நிறுவனத் தலைவர் திரு. ஏ.எல்.முத்தையா அவர்களும், சங்கத்தின் தலைவரான திரு.சி.வள்ளியப்பா மற்றும் திருமதி சீத்தா ஆச்சி அவர்களும் திறந்து வைத்தார்கள். புதிய சங்கக் கட்டிடத்தில் 250 பேர் அமரக்கூடிய மண்டபம் முதல் தளத்தில் உள்ளது. இரண்டாம் தளத்தில் மூன்று தங்கும் அறைகளும் உள்ளன. தங்கும் வசதி கொண்ட அறைகளை கோவை நகரத்தார் சங்கத்தின் மேனாள் தலைவர் திரு. பி.எல்.சுப்பிரமணியன், கர்நாடக நகரத்தார் சங்கத்தின் துணைத் தலைவர் திரு. வீ. வீரப்பன் மற்றும் செயலர் ஏ.எஸ். சோலையப்பன் திறந்து வைத்தார்கள். கர்நாடக நகரத்தார் சங்கத்தின் 43வது பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது 2025 மற்றும் 2026 இரு ஆண்டுகளுக்கான நிர்வாகிகள் மற்றும் 16 செயற்குழு உறுப்பினர்களும் ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் திரு. வீ. வீரப்பன் (சொக்கலிங்கம் புதூர்), உப தலைவர்கள் திரு. எம்.வி. பெத்த பெருமாள் (தேவகோட்டை), திரு. ஏ.எஸ். சோலையப்பன் (ராயவரம்), செயலாளர் திரு. சி. பழனியப்பன் (ராயவரம்), துணைச்செயலாளர்கள் திரு. எஸ்.பி. திருநாவுக்கரசு (புதுவயல்), திரு. முத்துராமன் (பொன் புதுப்பட்டி), பொருளாளர் திரு. பி. ஆர். குமார் (ஆத்தங்குடி) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.


தலைவர் திரு.வீ. வீரப்பன்

தகவல்: அழ. தண்டாயுதபாணி செயற்குழு உறுப்பினர்

# நகரத்தார் ஐக்கிய சங்கம்

நகரத்தார் பெருமக்களுக்கு வணக்கம்,

பிள்ளையார்பட்டி இரணிக்கோயில் திருமணம் செய்துகொள்ள முயற்சி எடுத்தோம், நல்ல விதமாக முடிந்தது. காரைக்குடி செந்தூர் ரெஸிடென்சியிலும் கவுன்சிலிங் குழு ஏற்படுத்தி அதிலும் மாதம் 2, 3 முறை கவுன்சிலிங் நடைபெறுகிறது. கோவிலூர் நமது ஆதீனம் ஸ்ரீ ல ஸ்ரீ நாராயண சுவாமிகள் அவர்கள் ஆலோசனைப் படியும், நமது நிர்வாக குழுவின் தீர்மானத்தின்படியும் இப்பொழுது ஐக்கிய நகரத்தார் சங்கம், 76 ஊர்களிலும் புள்ளி விபரங்களை காரியக்காரர் மூலம் சேகரித்து, கல்யாணம் ஆகாத பெண்கள், பையன்கள் எவ்வளவு பேர் உள்ளார்கள் என்று கணக்கெடுக்க, நமது துணை தலைவர் டாக்டர் M. பழனியப்பன் (நாகப்பா மோட்டார்ஸ்), பொருளாளர் திரு ஓ.சோமசுந்தரம் (Nagarathar pulligal.com) இருவரும் பொறுப்பெடுத்து, Data Entry எடுப்பவர்களை நியமித்து, அவர்களுக்கு அங்கீகார கடிதமும் கொடுத்தனுப்பி, தேவைப்பட்டால் நகரத்தார்சங்கம் இருக்கும் ஊர்களிலெல்லாம் தொடர்புகொண்டு இப்பணியை செய்ய இருக்கிறோம். அப்போதுதான் கல்யாணம் ஆக வேண்டிய பெண்கள், பையன்கள் எவ்வளவு பேர் உள்ளார்கள் என்று தெரிய வரும். அது நமக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

– டாக்டர் ஏ.ராம.ஏ. ஞானம், தலைவர், நகரத்தார் ஐக்கிய சங்கம்.

# ஓ.சிறுவயல்: அர்ச்சகர்களுக்கு வீடு மற்றும் தபால் நிலையம்



ஓ.சிறுவயல், திரு.சொ.லெ.அழகப்ப செட்டியார் அவர்கள் அருள்மிகு பொன்னழகி அம்மன் கோவில் பின்புறம், கோவில் அர்ச்சகர்களுக்காக அக்ரஹார வீடு மற்றும் தபால் நிலைய அலுவலகம் ஆகியவற்றை புதிதாகக் கட்டிக் கொடுத்துள்ளார். 02.03.2025 மேற்படி கட்டிட கிரகப்பிரவேச நிகழ்ச்சியில் மேனாள் நீதி அரசர் டாக்டர் மெ. சொக்கலிங்கம் அவர்கள் பங்கேற்று தபால் நிலையக் கட்டிடத்தைத் திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

# நகரத்தார் திருமகள் இல்லத் திருமணம்



ஈரோடு நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத் தலைவர் NSS சிவசுப்ரமணியம் செட்டியாரின் பேரனும், SO. S.சொக்கலிங்கம் – SO. வள்ளியம்மை மகன் அழகுவயிரம் B.Tech, கீழச்சிவல்பட்டி நகரத்தார் திருமகள் அ.நாகராஜன் – நா.வள்ளிக்கண்ணு மகள் அழகு ரோஜா M.Tech ஆகிய இருவருக்கும் 31.01.2025 அன்று கீழச்சிவல்பட்டி ASV திருமண மண்டபத்தில் கோலாகலமாக திருமணம் நடைபெற்றது. இரவு பெண் அழைப்பும் கண்டவராயன்பட்டி மீனாட்சி நிலையத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் டாக்டர் மெ.சொக்கலிங்கம் அவர்கள் அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், முக்கிய பிரமுகர்கள், நகரத்தார் பெருமக்கள் என திரளாக கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

# கோலாலம்பூர் செந்தூல் தண்டாயுதபாணி ஆலய மகா கும்பாபிஷேகம்



நூறு ஆண்டுகளுக்கு மேல் வரலாற்று சிறப்புமிக்க கோலாலம்பூர் செந்தூல் தண்டாயுதபாணி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் 03.02.2025 திங்கட்கிழமை காலை 10.45 மணியளவில் விமரிசையாக நடைபெற்றது. தமிழ்நாடு ஸ்ரீகற்பக விநாயகர் கோவில், பிள்ளையார்பட்டி, தலைமை குருக்கள் விகாஷ் ரத்னா Dr. பிச்சை சிவாச்சாரியார் அவர்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. 1893-ம் ஆண்டு இந்த ஆலயத்தை கோலாலம்பூர் நகரத்தார் கட்டி, 1902-ம் ஆண்டு முதல் கும்பாபிஷேகம் செய்தார்கள். நாளது வருடம், வைகாசி மாதம், 27 (09.06.2024) ஞாயிற்றுக் கிழமை அன்று பாலாலயம் செய்யப் பெற்று, திருப்பணி வேலைகள் துவங்கி கோலாலம்பூர் நகரத்தார்களால் ஏழாவது கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. நடப்பு காரியக்காரர் பழ. சிதம்பரம் செட்டியார், தலைவர் சிங்காரம் செட்டியார், செயலாளர் மெய்யப்ப செட்டியார் அறங்காவலர்கள் நிர்வாகத்தின் சிறப்பான ஏற்பாட்டில் இந்த கும்பாபிஷேகம் விமரிசையாக நடைபெற்றது. மலேசிய துணை அமைச்சர் திருமதி சரசுவதி கந்தசாமி அவர்கள், டத்தோ ஸ்ரீ மு. சரவணன் MP அவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களும் 5000-க்கு மேற்பட்ட பக்தர்களும், கலந்து கொண்டு மகா கும்பாபிஷேகம் மிக சிறப்பாக நடைபெற்றது. ♦









Brammah Sri Swami Sarahana Bhavanatha

## அற்புதங்கள் நிறைந்த

# அலோர் ஸ்டார் தண்ணீர்மலை பாதயாத்திரை



Thannirmalaiyan



மணிமேகலை சரவணன்

பினாங்கு நகரில் 1818 இல் தன வணிகம் செய்ய வந்த நகரத்தார் 1880 ஆம் வருடம் ஆகஸ்ட், 9 அன்று பினாங்கு வீதியில் எண் 138 இல் உள்ள வீட்டில் முருகப் பெருமானை நிறுவி வழிபடத் தொடங்கி அதன் பின்னர் 1854 இல் வாட்டர் பால் ரோட்டில் 5 ஏக்கர் நிலம் வாங்கி தண்ணீர்மலை ஆலயம் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

செட்டி மக்கள் குலவிளக்காக விளங்கும் பழநி தண்டாயுதபாணி மலேயாவில் பினாங்கு நகரில் குடி கொண்டு அருள் புரிந்து வருகிறார். இந்தியாவில் நகரத்தார் பழநி பாதயாத்திரை செல்வதும், காவடிகள் எடுப்பதும், பால் குடம் செலுத்துவதும் போல பினாங்கு தண்ணீர் மலை கோயில் தை பூசத்துக்கும் நமது நகரத்தார் காவடி எடுத்து, பால் குடங்கள் செலுத்தி வழிபட்டு முருகன் அருள் பெற்று வருகின்றனர்.

அற்புதங்கள் நிகழ்த்தும் தண்டாயுதபாணி பழநி பாதயாத்திரை போல தன்னையும் பாத யாத்திரையாக மக்கள் வந்து வழிபட திருவுளம் கொண்டார். வழக்கமாக பினாங்கு கோயில் வீட்டில் இருந்து வெள்ளி ரதத்தில் முருகன் தண்ணீர் மலை கோயிலுக்கு வருகையில் நகரத்தார் காவடியும், நகரத்தார் பெருமக்களும் ரதத்தின் பின்னே நடந்து வருவார்கள்.

1980 ஆம் வருடத்தில், காரைக்குடியில் பிறந்து மலேசியாவில் அலோர் ஸ்டார் கெடாவில் வசித்து வரும் இளையாத்தக்குடி, ஒக்கூர் பிரிவைச் சேர்ந்த மருத்துவர் K.M.S.இராமசாமி அவர்கள், முதன் முதலாய் அலோர் ஸ்டாரில் இருந்து தண்ணீர் மலை நகரத்தார் ஸ்ரீ தண்டாயுதபாணி கோயிலுக்கு பாதயாத்திரையாக வந்து இந்த பாதயாத்திரைக்கு முதன் முதலில் வித்திட்டார்கள்.

தனது மருத்துவப் படிப்பை முடித்து, 1979 இல் அவர் மலேசியா திரும்பிய போது, ஏற்பட்ட ஒரு பிரச்சினை நல்ல விதமாக முடிந்து மருத்துவப் பணியில் சேர வேண்டும் என முருகனை வேண்டி, பாதயாத்திரையாக வருவதாக பிரார்த்தித்துக் கொண்டார். முருகன் அருள் கிட்ட, அதற்கு முன் மூன்று ஆண்டுகள் பழநி பாதயாத்திரை செய்து வந்த இராமசாமி அவர்களை அவரது தமையனார் மயில் அண்ணாமலை செட்டியார் அவர்கள் கண்டனூர் பெரிய சாமியாடி செட்டியார் அவர்களிடம் அழைத்துச் சென்று அலோர் ஸ்டார் தண்ணீர்மலை பாதயாத்திரை செல்வதாகச் சொல்ல அவர்களும் ஆசி வழங்கி இந்த நடை பயணத்தை குரு சரஹணபவானந்தர் வழிகாட்டுதலுடன் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று அருளாசி வழங்கினார்கள்.

அதன் படி முருகன் வழியில் உபதேசம் பெற்று பரஞ் சோதி மகானிடம் குண்டலினி யோகம் பயின்று சிவானந்த பரமஹம்சரிடம் சிவயோகம் பயின்ற நம்பியார் சுவாமிகள் எனும் சுவாமி சரஹண பவானந்தா அவர்களை குருவாக ஏற்று தொடங்கிய இந்த பாதயாத்திரை தொடர்ந்து நடை பெறுகிறது.

சுங்குரும்பை நகரத்தார் கோயில் முருகனும், சுங்கைப் பியூ மாரியம்மனும் பிரத்யட்சமாக (நேரடியாக)குரு முன் தோன்றி அருள் செய்ய, அவர்கள் சொல் பலிதம் நிகழ, பக்தர்கள் வேண்டுதல் தண்ணீர்மலை முருகன் அருளால் நிறைவேற வேண்டியவை வேண்டியபடி நடக்க வேண்டி வருடா வருடம் குருவின் துணையோடு நடை பயணம் மேற்கொள்ளும் பக்தர்கள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகிறது.

வழி நெடுக 29 கோயில்களில் தரிசனம் செய்து 7 நாட்கள் தொடரும் நடைபயணத்தில் முருகனும், 1995 இல் ஜீவ சமாதி அடைந்த குருவும் கூடவே துணையாக வருவது, சிலரால் அறியக்கூடிய உண்மை என்று திரு இராமசாமி அவர்கள் கூறுகிறார்கள்.

வழி நெடுக ஆலயங்களில் இருந்து கிளம்பும் போதும் கட்டியம் கூறி கிளம்பி நடக்கிறார்கள். பினாங்கு கிட்டங்கி கோயில் வரை வந்து பின் வெள்ளி ரதத்துடன் நடந்து புனர்பூசத்தன்று செட்டியார் காவடியுடன் சென்று, தண்ணீர்மலையானை தரிசித்து நடை பயணத்தை நிறைவு செய்கிறார்கள். ஆரம்பத்தில் மயில் இறகை புத்தகத்தில் வைத்தும், பின் மரப் பெட்டியில் வைத்தும் எடுத்து நடை



பயணம் தொடங்கப் பெற்றது. பல வருடங்களாக வெள்ளிப் பெட்டியில் மயில் இறகும், தங்க வேலும், குருவின் திருவுருவமும், பெட்டியின் மேல் வெள்ளி வேலும் வைத்து ஏந்தி வருகிறார்கள்.

முதல் முதலில் நடக்கையில் இராமசாமி அவர்களின் தாயார் மற்றும் மனைவியுடன் வந்த திரு பத்மநாதன் செட்டியார் JP மதிய உணவு தர வழியில் இரண்டு ஆலயங்களில் பிரசாதத்துக்கு சொல்லி வைத்து, மூன்று நாட்கள் சென்ற பயணம் இப்போது 7 நாட்களாக தொடர்கிறது. இப்பயணம், வழி நெடுகிலும் நடப்பவர்களுக்கு உணவு முருகன் திருவருளால் அன்னதானமாக வழங்கப்படுகிறது.

முதன் முதலில் திரு இராமசாமி அவர்கள் நடந்து வந்து கோயிலை அடைந்த போது கோயில்திருச் சுற்றில் பிரகாரம் வருகையில் இது ஜென்மப் பிரார்த்தனை என்று அவரையும் அறியாமல் அருள் வந்து சொல்ல இது நாள் வரை முருகன் அருளால் தொடர்ந்து,மேலும் பலரோடு இந்த நடைப் பயணம் நடைபெற்று வருகிறது.

முதல் இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு திரு இராமசாமி அவர்களின் துணைவி விசாலாட்சி அவர்கள் உட்பட மூன்று பெண்கள் மற்றும் இரண்டு ஆண்களுடன் தொடங்கிய பாத யாத்திரை 200 நபர்கள் வரை நடக்க ஆரம்பித்து உள்ளனர்.

இந்த பாதயாத்திரையில் 8 வயது முதல் 80 வயது வரை உள்ளவர்கள் நடந்திருக்கிறார்கள். திரு இராமசாமி அவர்களின் மனைவி விசாலாட்சி, மகள் மருத்துவர் நாச்சம்மை, மகன்கள் சொக்கலிங்கம், அண்ணாமலை, மருமகள்கள் நித்யா, லஷ்மி, மகள் வழிப் பெயரன் இராமு முத்து வெங்கடாச்சலம் அனைவரும் இப்பாதயாத்திரை மேற்கொண்டு உள்ளார்கள்.

இராமசந்திராபுரம் ஏர் இந்தியா நாகப்ப செட்டியார், அவர் மனைவி, பல வருடங்கள் நடந்திருக்கிறார்கள். டத்தோ அழகு சுந்தரம், அவரது மகள் சோலை ராணி, W/o மருத்துவர் வெங்கட், கண்ணப்பன் தியாகராஜன், சுப்ரமணியம், மற்றும் 80 வயது நிரம்பிய தமிழகத்தில் உள்ள நாராயணன் செட்டியார் என்று பலரும் இப் பாதயாத்திரையில் கலந்து கொள்ளும் மெய்யன்பர்கள் ஆவர்.

48 நாட்கள் விரதம் அல்லது அனுமதியுடன் குறைந்தது இரு வாரங்கள் விரதம் இருந்து 130 கிலோ மீட்டர் நடந்து 29 ஆலயங்கள் தரிசித்து வருவர். இடையில் சுங்கைப் பட்டாணியில் இருந்தும் சேர்ந்து 70 km தூரம் நடக்க அனுமதி உண்டு. சேர்ந்து நடந்து வந்து எல்லாம் வல்ல தண்ணீர் மலையானை தரிசிக்கும் போது இந்த பிறவி எடுத்த பயன் இதுவே எனத் தோன்றும்.

இந்த பாத யாத்திரையை குரு குடும்பத்தாரும், திரு. இராமசாமி அவர்கள் குடும்பத்தாரும், சேர்ந்து நடத்தி வருகிறார்கள். அதற்கு வாட்ஸ்அப் குழுவில் இணைந்து ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும்.

பேராசிரியர் சொ.சொ.மீ. சுந்தரம் அவர்கள் தமிழகத்தில் இருந்து வந்து ஆசிர்வாதம் பெறுபவர்களில் குறிப்பிடத் தகுந்தவர். இந்த பாதயாத்திரைக்கு முதல் வருடத்தில் மலேசிய இந்தியக் கவிஞர் பேராசிரியர் மா.கண்ணப்பன் 2 பாடல்களும், கவிஞர் அரசி பழனியப்பன், கண்ணம்மை அரங்கநாதன், கல்லல் மீ.மணிகண்டன், பொன் முடி ஆச்சி, அரிமளம் பா. செல்லப்பா, மணிமேகலை சரவணன் முதலியோர் ஒரு பாடலும் எழுதித் தந்து உள்ளார்கள்.

அந்த பாடல்களை அரசி.பழனியப்பன் மீ.மணிகண்டன், கமலா பழனியப்பன், மீனாட்சி பெரிய கருப்பன், தேனம்மை முத்துகுமார் ஆகியோர் பாடித் தந்துள்ளார்கள்.

நடைபயணத்தின் போது வழி நெடுக சமரசி குழுவினர் பஜனை பாடல்கள் பாடி உடன் வருவார்கள். உக்ரமான அருள்நிறைந்த விருத்த பாடல்களை பாலுசாமி பாடி வந்தார்கள். இன்னும் சிலர் பாடுவார்கள்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த அலோர் ஸ்டார் தண்ணீர்மலை தைப்பூச நடைபயணத்தில் மேன் மேலும் அதிக பக்தர்கள், நகரத்தார்கள் நடக்கவும் அனைவரின் பிரார்த்தனைகளையும் முருகன் தொடர்ந்து நடத்தி வைக்கவும் எல்லாம் வல்ல தண்ணீர்மலை ஆண்டவனின் அருளை எப்போதும் வேண்டும் திரு இராமசாமி அவர்களின் இறை தொண்டு இன்னும் பல ஆண்டுகள் தொடர நாமும் இறைவனை வேண்டுகிறோம்.

தொடர்புக்கு Dr.S. Ramasamy +60124126594. மலேசியா. R.Chockalingam மலேசியா +60124936492, Dr. Nachammai, Muthu Venkatachalam +6581891024. Singapore.



# 5 உங்களுடன் உரையாடுங்கள்



எம். சிதம்பரம்

சோகமே உருவாக ஒருவன் தன் கன்னத்தில் கை வைத்தபடி அமர்ந்திருந்தான். அப்பொழுது அங்கு வந்த ஒருவர் ஏன் இப்படிக் கன்னத்தில் கை வைத்துக் கொண்டிருக்கிறாய்? என வினவினார். அதற்கு அவன், “லாட்டரியில் பத்து கோடி பரிசு விழுந்துள்ளது”, என்றான்.

10 கோடி தான் விழுந்துள்ளதே அப்புறம் ஏன் இப்படி? என்றார். அதற்கு அவன், “இன்னொரு சீட்டு வாங்கியிருந்தேன். அதற்கு 10 ரூபாய் கூட விழவில்லை சார்”, என்றான். இப்படித்தான் சிலர், கொலம்பஸ் இந்தியாவை கண்டுபிடிக்க கிளம்பி அமெரிக்காவை கண்டுபிடித்ததைப் போல் கவலைப்படுவதற்கான காரணத்தை, ஆராய்ச்சி செய்து தேடிக் கண்டுபிடிப்பார்கள். Phd. கூட வாங்குவார்கள்.

ஆனால், ஒரு குழந்தையோ எப்பொழுதும் மகிழ்ச்சியாகவே இருக்கும். எப்பொழுதுமே சந்தோஷமாக இருப்பதற்கு என்ன காரணம்? என ஒரு குழந்தையை பார்த்துக் கேட்டார்களாம். அதற்கு அந்தக் குழந்தை சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கு காரணம் வேண்டுமா? என்றதாம்.

பயம் தான் மகிழ்ச்சியின் முதல் எதிரி. எதைக் கண்டும் பயப்படாதே? பயத்தைக் கண்டு மட்டும் பயப்படு என்கிறார்கள், வல்லுனர்கள். என்னை கேட்டால் பயத்தைக் கண்டு கூடப் பயப்படாதே என்பேன். உங்கள் மனதில் எந்தவிதமான பயமாக இருந்தாலும் அதை சுக்கு நூறாக நொறுக்கி அதை இருந்த இடம் தெரியாமல் செய்து விடுங்கள். மனதில் பயம் இருந்த இடத்தில் மகிழ்ச்சி வந்து நல்லாட்சி செய்யும். உனக்குள் உள்ள ஒரு சக்தி, வெளியே உள்ள சக்தியை விட பன்மடங்கு வலிமையானது என்பதனை நீ உணர்ந்தாலே தலை விரித்து ஆடிய பயங்களும், துன்பங்களும், துயரங்களும் தவிடு பொடியாகி விடும்.

அஞ்சி நடுங்கிப் பின் வாங்குவது அல்ல வாழ்க்கை. வாழ்க்கை தரும் சவால்களை நேருக்கு நேர் எதிர் கொண்டு வெற்றி காண்பதே வாழ்க்கை. வென்றே பிறந்தோம்! வெல்வதற்கே வாழ்வோம்!! கவலைப்படுவதற்கான காரணங்களை ஆராய்ச்சி செய்வதற்கு பதில் எப்படி எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கலாம் எப்பொழுதெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்ற கோணத்தில் எண்ணிப் பாருங்கள். பிறகு புரியும் வாழ்க்கை எவ்வளவு அற்புதமானது என்று. எப்பொழுது எல்லாம் மகிழ்ச்சியாக இருக்கலாம்? அதற்காக, யோகா காலை 5 to 6, உடற்பயிற்சி 6 to 7, மகிழ்ச்சிக்காக காலை 7 to 7.03 என டைரியில் குறித்து வைத்துக் கொண்டு டைம் டேபிள் எல்லாம் போட்டு மகிழ்ச்சியாக இருக்க வேண்டியதில்லை. டைம் டேபிள் போட்டா மூச்சு விடுகிறோம். வாழ்வதற்கு, மூச்சு விடுவது எவ்வளவு இயல்போ, மகிழ்ச்சியாக இருப்பதும் அவ்வளவு இயல்பு. மூச்சு விடுவது பலர் அவ்வளவாக அவர்கள் அறியாமலேயே நடக்கின்றது. ஆனால், மகிழ்ச்சியாக இருக்க நாம் முயற்சி செய்ய வேண்டும், விடா முயற்சி செய்ய வேண்டும்.

இன்று தான் என் வாழ்க்கையின் மிகச் சிறந்த நாள் என்கிற உற்சாகத்தோடு மகிழ்ச்சியோடு எழ வேண்டும். பல் துலக்கும் போது எனக்கு பல் இருக்கிறதே என மகிழ வேண்டும். பல் வரிசை இவ்வளவு சீராக உள்ளதே என நெகிழ வேண்டும். என் பல்லை என்னாலேயே தேய்க்க முடிகின்றதே என சந்தோஷப்பட வேண்டும். பசியாறும் போது, பசியாற நமக்கு உணவு கிடைத்திருக்கின்றதே என திருப்தி அடைய வேண்டும். அவ் உணவை உட்கொள்ளும் போது, சே!, சாப்பாடா இது என அலுத்துக் கொள்ளக் கூடாது. பருக்கை பருக்கையாய் ரசித்து ருசித்து சாப்பிட வேண்டும். நம்மால் உணவினை ருசிக்க முடிகின்றதே என ஆனந்தப்பட வேண்டும். இப்படி வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் அணு அணுவாய் மகிழ்ச்சியோடு அணுக வேண்டும்.

என் மகிழ்ச்சிக்கு தடையாய் பல பிரச்சனைகள் உள்ளன. எனக்கு மட்டும் ஏன் இத்தனை பிரச்சனைகள் வரணும் என பலர் கேட்கலாம். பிரச்சனைகள் உங்களுக்கு மட்டும் தான் வருகின்றது என நொந்து கொள்ளாதீர்கள். எல்லோருக்குமே பிரச்னைகள் வரும். எல்லோரும் அதை எதிர் கொண்டு தான் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். உங்கள் வாழ்க்கையில் எத்தனையோ சிறப்பான விஷயங்கள் நடந்துள்ளன அல்லவாஅவற்றை எல்லாம் மறுக்காமல் ஏற்றுக் கொண்டீர்கள் அல்லவா? அதே போல் பிரச்சனைகளையும் ஏற்றுக் கொள்ளுங்கள். பிரச்சனைகளும் வாழ்வின் ஒரு அங்கமே. இதை உணர்ந்து கொண்டால் நீங்கள் உங்கள் வாழ்க்கையை அணுகும் முறையே முற்றிலுமாக மாறிவிடும்.

வாழ்க்கையில் பிரச்சினைகள் அதிகமே. இதில் மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், தீர்வுகள் பிரச்சனைகளை விட அதிகம். மரம் வைத்தவன் தண்ணீர் விடாமலா விட்டுவிடுவான், என இருந்து விடலாம். பிரச்னைகளை தீர ஆராய்ந்து சிறந்த தீர்வோடு பிரச்சனைகளை அணுகலாம். சிறந்த ஆலோசகர்கள், நூல்களின் உதவியை நாடலாம். தீர்வு தெளிவாகும். தெளிவானால் பிரச்சனைகள் நம்மை கண்டு பயந்து ஓடும். வாழ்க்கையே மகிழ்ச்சி தான். தினந்தோறும் கொண்டாட்டம் தான்.



# தொழில் தொடங்கலாம் வாங்க 75

சேதுராமன் சாத்தப்பன்

## ஸ்டார்ட் அப் உலகம்

## மூன்ரைடர் (Moonrider) ஸ்டார்ட் அப்

ஆட்டோமொபைல் துறையில், கமர்ஷியல் துறையில் எலக்ட்ரிக் வாகனங்கள் தற்போது அதிகரித்து வருகிறது. முன்னாள் வோல்வோ நிர்வாகிகள் அனுப் ஸ்ரீகாந்தசுவாமி மற்றும் ரவி குல்கர்னி ஆகியோர் தங்கள் ஸ்டார்ட் அப், மூன்ரைடர் (Moonrider) மூலம் இந்த தொழில்நுட்பத்தை விவசாயத் துறைக்கு கொண்டு வரும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிறுவனம் விவசாயிகள் மற்றும் fleet ஆபரேட்டர்களுக்கு விவசாய செலவுகளைக் குறைக்கவும், செயல்திறனை மேம்படுத்தவும் வடிவமைக்கப்பட்ட கனரக எலக்டிரிக் டிராக்டர்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

### எப்படி இந்த ஸ்டார்ட் அப் தொடங்கப் பெற்றது?

ஃபில்டர் காபியை விரும்பும் பெங்களூருவைச் சேர்ந்த இந்த ஸ்டார்ட் அப் நிறுவனர்கள் ஒரு நண்பரை அவரது பண்ணையில் சந்திக்கச் சென்றார்கள். அவர் இவர்களிடம் ஒரு எளிய கேள்வியைக் கேட்டார், “பண்ணைக்கு மின்சாரம் இலவசம் அரசாங்கம் தருகிறது, ரோடுகளில் எலக்டிரிக் வாகனங்கள் அதிகமாக ஓடுகின்றன, நம்மிடம் எலக்டிரிக் டிராக்டர்கள் ஏன் இல்லை? இது நிச்சயமாக எங்களுக்கு பயனளிக்கும் என்று கூறினார்கள்”. இந்த கேள்வியில் தோன்றியது தான் மூன்ரைடர் என்ற இந்த ஸ்டார்ட் அப் கம்பெனி. இதன் நோக்கம் விவசாயிகள் அதிகம் சம்பாதிக்க, அதிகம் சேமிக்க மற்றும் அதிகம் உற்பத்தி செய்ய உதவுவதாகும்.சேமிப்பு என்று பார்த்தால் - 75 HP டிராக்டருக்கு, விவசாயிகள் தற்போது டீசலுக்கு மணிக்கு ரூபாய் 1,000 - 1,500 செலவிடுகிறார்கள், அதேசமயம் இந்த எலக்ட்ரிக் டிராக்டரில் சுமார் 300 ரூபாய் மட்டுமே செலவாகிறது.

2023-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மூன்ரைடர் என்ற இந்த ஸ்டார்ட் அப், உலகின் முதல் எண்ணெய்-குளிரூட்டப்பட்ட வெப்ப தீர்வைக் (oil cooled thermal solution) கொண்ட இரண்டு எலக்டிரிக் டிராக்டர்களை உருவாக்கியுள்ளது. அவை ஹைஃபோர்ஸ் 50HP மற்றும் மேக்ஸ்ஃபோர்ஸ் 75HP என அழைக்கப்படுகின்றன.

வோல்வோ குழு, ஓலா எலக்ட்ரிக் மற்றும் ஓலெக்ட்ரா போன்ற நிறுவனங்களில் வாகனப் பொறியியல் மற்றும் மின்சார வாகன ஆராய்ச்சி மேம்பாட்டில் 30




ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தை கொண்டு இந்த டிராக்டர்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த ஸ்டார்ட்அப்பின் பேட்டண்டட் டெக்னாலஜியில் இன்-ஹவுஸ் பேட்டரி பேக்குகள் மற்றும் ஆக்டிவ் பாலன்சர் தொழில்நுட்பம் அடங்கும். இது செயல்திறன், மலிவு விலை மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மூன்ரைடர் தங்கள் மின்சார டிராக்டர்கள் நவீன விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமல்லாமல், இயக்க செலவை 75% குறைக்கும் என்றும், அதே நேரத்தில் விலை என்று பார்க்கும் போது சாதாரண டிராக்டர் விலை அளவில் தான் இருக்கும் என கூறப்படுகிறது. அதாவது டீசல் டிராக்டர்களின் விலையுடன் சமமாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த வகை டிராக்டர்கள் விவசாயம் மற்றும் பிற தொழில்களுக்கு ஜீரோ எமிஷன் அவற்றின் கார்பன் பாதிப்பை குறைக்கும்.

வெளிநாடுகளிலும் தங்கள் டிராக்டரை விற்க தொடங்கியிருக்கிறார்கள். ஆப்பிரிக்காவில் தங்களது முதலாவது டிராக்டரை விற்று இருக்கிறார்கள்.

### சிறப்பு அம்சங்கள்

மூன்ரைடரின் டிராக்டர்கள், மிகுந்த சவாலான சூழல்களில் நீண்ட நேரம் வேலை செய்ய வடிவமைக்கப்பட்ட அதிநவீன பேட்டரி தொழில்நுட்பத்துடன் கட்டமைக்கப்பட்டுள்ளன. வயல்களில் நம்பகத் தன்மையை உறுதி செய்கிறது. சாதாரண சார்ஜிங்கில் டிராக்டரை 7 மணி நேரம் இயக்க முடியும். 30 நிமிட விரைவு சார்ஜிங்கும் இருக்கிறது. வாகன மேலாண்மைக்கான மொபைல் ஆப் பயன்பாடும் இருக்கிறது. இவர்கள் சமீபத்தில் 20 கோடி ரூபாய் பண்டிங் பெற்றிருக்கிறார்கள்.

மேலும் விபரங்களுக்கு இந்த கம்பெனியின் இணையதளத்தை சென்று பாருங்கள். www.moonrider.ai. ஈமெயில் info@moonrider.ai.

# இந்த மாத வழிகாட்டி சுப. பழநியப்பன் (திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்)



நிதித் துறையில் நம்மவர்கள் காலங்காலமாக கோலோச்சி வருவது நாம் எல்லோரும் அறிந்ததே. அதில் வங்கி, என்.பி.எப்.சி., வட்டிக் கடைகள் என்று நாம் சிறப்பாக பரிணமித்து வந்திருக்கிறோம் / வருகிறோம். அந்த நிதித்துறையில் சிறுவணிகர்களுக்கு பெரிதும் உதவியாக இருப்பது சிட்பண்ட் நிறுவனங்களாகும். இந்தத் துறையில் பல காலமாக ஸ்ரீ ராம், மார்க்கதர்சி போன்ற நிறுவனங்கள் இருந்தாலும், நம் நகரத்தார்களில் முதன் முதலில் ஆரம்பித்தது ஸ்ரீ விசாலம் சிட்பண்ட் எனலாம். அந்த வகையில் அவர்களின் வழியை பின்பற்றி நகரத்தார்கள் பலர் சிட்பண்ட் நிறுவனங்கள் ஆரம்பித்துள்ளார்கள். அதில் சிறப்பாக பரிணமித்து வரும் நிறுவனங்களில் ஒன்று தான் திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் நிறுவனமாகும். அந்த நிறுவனத்தின் நிறுவனர் குழிபிறை பழநியப்பன் சுப்ரமணியன் அவர்களை இந்த மாத வழிகாட்டி பகுதிக்காக பேட்டி கண்டோம்.

**சிட்பண்ட் துறையில் குறிப்பிட்ட சில நகரத்தார் நிறுவனங்களே இருக்கின்றன. அந்த துறைக்கு எப்படி வந்தீர்கள் என்று கூறுங்களேன்?**

உலகளவில் சிட்பண்ட் பிசினஸ் Rotating Savings and Credit Association (ROSCA) என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் சிட்பண்ட் என்றாலே நமக்கெல்லாம் ஞாபகத்திற்கு வரும் கம்பெனிகள் மார்க்கதர்சி, ஸ்ரீராம் சிட்ஸ், ஸ்ரீவிசாலம் சிட்பண்ட் ஆகியவை தான். மற்றவர்கள் எல்லாம் சுமால் ப்ளேயர்ஸ். ஆயிரக்கணக்கான சுமால் ப்ளேயர்ஸ் மார்க்கெட்டில் இருக்கிறார்கள். அவர்களில் பலர் எங்களைப் போன்று அரசாங்க சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு லைசென்ஸ் பெற்று நடத்துபவர்கள். பலர் அன்-ஆர்கனைஸ்டு அதாவது ஒரு ஆபீசிற்குள் சிட் நடத்துவது அல்லது குடும்ப நண்பர்கள், தெரிந்தவர்கள் சேர்ந்து நடத்துவது போன்றவை.

இந்த துறை நிதித்துறையில் பலருக்கு ஆபத்பாந்தவனாக முக்கிய பங்காற்றி வருகிறது. அதாவது மீடியம் வசதி படைத்தவர்கள் அல்லது அதற்கு கீழ் இருப்பவர்களுக்கு இது மிகவும் உதவியாக இருக்கிறது.

நான் லெதர் டெக்னாலஜி படித்தேன். அந்த துறையில் வேலை மற்றும் தொழில் செய்து கொண்டிருந்தேன். பின்னர் சிட்பண்ட் தொழில் ஆரம்பித்தேன்.

2005-ம் ஆண்டு திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் ஆரம்பித்த பிறகு இரண்டு சிட்பண்ட் நிறுவனங்கள் ஆரம்பித்தோம். அவை, வளத்தி ஸ்ரீ சிட்பண்ட்ஸ் மற்று ஸ்ரீ முத்து மீனா சிட்பண்ட்ஸ் ஆகும். எங்களுக்கு திருச்சியில் தலைமை அலுவலகமும், சென்னை, மதுரை ஆகிய இடங்களில் கலெக்ஷன் சென்டரும் இருக்கின்றன. இன்னும் சில கிளைகள் / கலெக்ஷன் சென்டர்கள் ஆரம்பிக்க எங்களை தயார் செய்து கொண்டிருக்கிறோம்.

இது போன்று மூன்று நிறுவனங்களாக இருப்பதால் எங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவை செய்ய, சார்ஜ் (ஜி.எஸ்.டி.,) போன்றவை குறைய இது வழி வகுக்கிறது. இன்றைய அளவில் இந்தியாவில் சிட்பண்ட் பிசினஸ் துறையின் மதிப்பு 90,000 கோடி ரூபாய்களாகும். ஆதலால் வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. கடந்த 20 ஆண்டுகளில் தமிழ்நாடு மற்றும் பல நாடுகளிலும் உள்ள வாடிக்கையாளர்கள் மூலமாக சிறப்பான சிட்பண்ட் என்று பெயர் எடுத்துள்ளோம் என்பதில் எங்களுக்கு ஒரு மனநிறைவு இருக்கிறது.

**சிட்பண்ட் அசோஷியேஷனில் பொறுப்பு ஏற்று பங்காற்றி வருகிறீர்கள் அது பற்றி கூறுங்களேன்?**

தற்போது திருச்சிராப்பள்ளி மாவட்ட பைனான்சியர்ஸ் மற்றும் சிட்பண்ட் அசோஷியேஷன் அமைப்பின் தலைவராக இருக்கிறேன். இதற்கு முன்பு 6 வருடங்கள் செகரட்டரியாக இருந்திருக்கிறேன். இந்த அசோஷியேஷன் 25 வருடங்களை கடந்தது ஆகும். செகரட்டரியாக இருக்கும் போது பல பழைய முடிக்கப்படாமல் வைத்திருந்த pending items முடித்தது ஒரு சிறப்பான செயலாகக் கருதுகிறேன்.

அது போல நாங்கள் தமிழ்நாடு மற்றும் ஆல் இந்தியா சிட்பண்ட் அசோஷியேஷனிலும் மெம்பராக இருக்கிறோம்.

**சிட்பண்ட் என்பது சிறு வணிகர்களுக்கு அவசரத்திற்கு உதவும் ஒரு கருவியாக இருக்கிறது என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. அதைப் பற்றி கூறுங்களேன்?**

நீங்கள் கூறுவது உண்மை. ஆனால் அது பரவலாக மாறி வருகிறது. தற்போது chit போடுபவர்கள் வணிகர்கள் தவிர, அரசாங்க ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள், சேமிப்பை நோக்கமாக கொண்டவர்கள் என்று விரிந்து செல்கிறது.

சிட்பண்ட் தொழிலை வணிகர்களுக்கு மட்டும் உதவும் ஒரு கருவியாக மட்டும் பார்க்காமல், மற்றவர்கள் சேமிப்பு என்ற வகையிலும் பார்க்கலாம் அதில் 12 முதல் 16 சதவீதம் வரை வருமானம் கிடைக்க வாய்ப்புகள் இருக்கிறது. இதை விரிவாக எடுத்துக் கூறி தனியார் சேமிப்புகளில் ஒரு சிறிய பகுதி எங்களிடம்

# மதுரையில் ஏற்றுமதி, ஸ்டார்ட் - அப் கருத்தரங்கம்: சேதுராமன் சாத்தப்பன் நடத்துகிறார்

மதுரை: தவறில்லாமல் ஏற்றுமதி செய்வது, ஸ்டார்ட் – அப் தொடங்குவது, அதற்கு நிதி பெறுவதற்கு வழிகாட்டும் கருத்தரங்கை மதுரையில், ஏப்ரல், 27–ஆம் தேதி ஞாயிறன்று 'தினமலர் நாளிதழில் ஸ்டார்ட்–அப், ஏற்றுமதி தொடர் எழுதி வரும்' மும்பையைச் சேர்ந்த வங்கியாளர் சேதுராமன் சாத்தப்பன் நடத்துகிறார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

ஏற்றுமதி தொழிலின் புதிய நடைமுறைகள் தெளிவாக தெரிந்து கொண்டால், தவறில்லாமல் ஏற்றுமதி செய்யலாம். கல்லூரி மாணவர்கள் பலருக்கும் ஸ்டார்ட்–அப் தொடங்குவதில் ஆர்வம் உள்ளது. 'ஸ்டார்ட் அப்' தொடங்க நிறைய விதிமுறைகள் உள்ளன. அவற்றை எளிமையாக கற்றுக் கொள்ளவும், ஏற்றுமதி குறித்து தெளிவாக தெரிந்து கொள்ளவும் தமிழில் நடக்கும் இந்த நிகழ்ச்சி உதவும். ஸ்டார்ட்–அப் நிதி திரட்டுவது பற்றியும், ஏற்றுமதிக்கு மார்க்கெட்டிங் செய்வது குறித்தும் இந்த கருத்தரங்கில் விடை கிடைக்கும். நிகழ்ச்சியின் இடையே, பங்கேற்பவர்களின் தனிப்பட்ட சந்தேகங்களுக்கும் விடை அளிக்கப்படும். தொழில்முனைவோர் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பயனுள்ள நிகழ்ச்சி இது.

என்னென்ன புத்தகங்கள் வழங்கப்படும்?

400 ஸ்டார்ட் அப் தொழில்கள் அடங்கிய ரூபாய் 1200 மதிப்புள்ள 4 புத்தகங்கள், 'வெற்றிகரமாக ஏற்றுமதி செய்வது எப்படி, ஏற்றுமதிக்கு டாக்குமெண்டேஷன் செய்வது எப்படி?' உட்பட ரூபாய் 1500 மதிப்புள்ள ஏற்றுமதி சம்பந்தப்பட்ட 4 புத்தகங்கள், ரூபாய் 500 மதிப்புள்ள ஈ–புத்தகங்கள் சேர்த்து மொத்தம் ரூபாய் 3200 மதிப்புள்ள புத்தகங்கள் வழங்கப்படும். மதிய உணவு வழங்கப்படும். இந்த நிகழ்ச்சிக்கு Venue Sponsor ஆக தியாகராஜர் கலைக் கல்லூரி இருக்கிறது. தினமலர் ஊடக உதவி அளிக்கிறது. தமிழ் பிசினஸ் நியூஸ் மீடியா இந்த நிகழ்ச்சியை நடத்துகிறது. காலை 9:30 மணி முதல் மாலை 5:00 மணி வரை சேதுராமன் சாத்தப்பன் நடத்தும் இந்த நிகழ்ச்சி மதுரை தியாகராஜர் கலைக் கல்லூரியில் இந்த கருத்தரங்கம் நடக்கிறது. முன்பதிவு விபரங்களுக்கு 98197 50966, 99940 29969 என்ற எண்களில் பேசலாம். இவ்வாறு அவர் கூறினார்.

வையுங்கள் என்ற வகையில் பலருக்கு எடுத்துக் கூறி பலரிடம் chit- கள் பெற்றிருக்கிறோம். வங்கிகளில் 8 சதவீதம் அளவில் வருமானம் கிடைக்கும் நிலையில் 12 முதல் 16 சதவீதம் என்பது நிச்சியம் அவர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும் ஒரு வழியாகும்.

எல்லா முட்டைகளையும் ஒரே கூடையில் போடாதே என்ற பழமொழிகேற்ப சிட்பண்டையும் ஒரு கூடையாக சேர்க்க, அது பற்றிய தகவல்களை மக்களிடம் எடுத்துச் செல்ல நிறைய முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

குடும்பம் பற்றி...

தந்தையார் குழிபிறை திரு. சுப்ரமணியன் செட்டியார். தாயார் மறைந்த திருமதி ராஜாமணி ஆச்சி. மனைவி திருமதி முத்து மீனா. எனக்கு இரண்டு குழந்தைகள். மகன் P.M. முத்து சுப்ரமணியன் MBBS., தற்போது முடிக்கவிருக்கிறார். மருத்துவ மேல் படிப்பிற்காக தயார் செய்து கொண்டிருக்கிறார். மகள் P.M. ராஜாமணி தற்சமயம் MBBS., இரண்டாவது வருடம் படித்துக் கொண்டிருக்கிறார். குழந்தைகளுக்கும் சிட்பண்ட் தொழில் பற்றி விபரங்களை கூறி அவர்களை வளர்த்துள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது.

உங்கள் இல்லத்தரசி உங்களுடைய பிசினஸில் மிகவும் உறுதுணை என்று கேள்விப்பட்டுள்ளோம். அதைப் பற்றிக் கூறுங்களேன்?

எங்களைப் போன்ற வளர்ந்து வரும் சிட்பண்ட் பிசினஸில் நிறுவனர் பீல்ட் ஒர்க்கில் இருக்க வேண்டும். அது தான் வெற்றிக்கு வழிவகுக்கும். நாங்கள் இருவர் இணைந்து இந்த நிறுவனங்களை நடத்துவதால் மனைவி அலுவலக வேலைகளை திறம்பட பார்த்துக் கொள்கிறார்கள். எனது மனைவிக்கும், எனது அலுவலக பணியாளர்களுக்கும் சிட்பண்ட் சட்ட திட்டங்களை நாமும், டிரெய்னர்கள் மூலமும் எடுத்துக் கூறி அலுவலகத்தை திறம்பட நடத்துகிறோம்.

புதிதாக தொழில் செய்ய விரும்புபவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று கேட்ட போது.......


உழைப்பை அதிகம் நம்புங்கள். அது மிகவும் கடினமான உழைப்பாக இருக்க வேண்டும். வியாபாரத்தில் வெற்றி பெற இது மிகவும் முக்கியம். கடவுளின் அனுக்கிரணமும் நமது முன்னேற்றத்திற்கு தேவை. குடியை உயரச் செய்வேன் என்று கருதி முயலுகின்ற ஒருவனுக்கு தெய்வமே ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு வழிகாட்டி முன் செல்லும் என்ற திருக்குறளை மனதில் கொள்வது சாலச் சிறந்தது.

நாம் நம்முடைய ப்ளஸ், மைனஸ் குணங்களை தெரிந்து வைத்திருக்க வேண்டும். அந்த மைனஸ் குணங்களை ப்ளஸ் ஆக மாற்றுவதில் தான் உங்கள் வெற்றி இருக்கிறது.

தொடர்பிற்கு: திரு. சுப. பழநியப்பன் - 94439 86143 / 0431 2760064.

ஈமெயில் Sethuraman.sathappan@gmail.com,
மொபைல் 9820451259,
இணையதளம்
www.startupandbusinessnews.com


மகன்லால்
வைரம் & தங்கம்
We Offer Diamonds
Grade by
GIA
Authorised
Forevermark Jeweller
FOREVERMARK


Maganlal
a precious legacy
Be Your Own Shine...
88 வருடங்களாக பாரம்பரியமிக்க வைரம் மற்றும் தங்க நகைகள் வாங்க நம்பிக்கை பெற்ற கைராசியான ஸ்தாபனம்
MAGANLAL MEHTA & CO
மகன்லால் மேத்தா & கோ
Diamond & Gold Jewellery Private Limited
88 YEARS
#51, AVM Building, Kallukatti North, Karaikudi - 630 001
# 27/43, North Usman Road, T.Nagar, Chennai - 600 017
we@maganlalmehta.com
www.maganlaldiamonds.com
CUSTOMER CARE
+91 888 111 5555
+91 888 111 4555

# இஸ்ரோவின் சாதனைகளில் நகரத்தாரின் பங்களிப்பு – 17



லெ. முத்து
இணை இயக்குனர்
(ஓய்வு) இஸ்ரோ.

## டாக்டர் சொ.சொ.மீனாட்சிசுந்தரம்



இஸ்ரோ நகரத்தார்களைப் பற்றி நகரத்தார் சமூகத்திற்கு அறிமுகம் செய்யும் வகையில் நான் எழுதி வரும் தொடர் கட்டுரைகளில் இந்த இதழில் என் சீனியராக இருந்து இஸ்ரோவில் மட்டுமல்லாது பல அரசு துறைகளிலும் அரும்பணியாற்றி ஓய்வு பெற்ற முனைவர் சொ.சொ.மீனாட்சி சுந்தரம், ஐ.ஏ.எஸ் அவர்களைக் குறித்து எழுத விழைகிறேன்.

திரு. மீனாட்சிசுந்தரம் தேவகோட்டை தந்த நல் முத்து. தேவகோட்டையின் முதல் ஐ.ஏ.எஸ் அதிகாரி என்ற பெருமைக்குரியவர். வெகுகாலம் கர்நாடக மாநிலத்தில் உயர் அதிகாரியாக பணியாற்றியவர். இவருடைய தகப்பனாரும், ஐயாவும் பர்மாவில் வியாபாரம் மேற்கொண்டவர்கள். இவருடைய தமையனார் தமிழ் கூறும் நல்லுலகம் முழுவதும் அறிந்த சொ.சொ.மீ ஐயா அவர்கள். சிறந்த குடும்பத்தில் பிறந்த பேறு பெற்றவர்.

இவர்களுடைய பள்ளிப்படிப்பு தேவகோட்டை என்.எஸ்.எம்.வி.பிஎஸ் பள்ளியில். 1959-ம் ஆண்டு பள்ளி இறுதித் தேர்வில் மாவட்ட அளவில் முதல் மாணவர். 1959 - 63 காலகட்டத்தில் அழகப்பா கலைக் கல்லூரியில் பி.எஸ்சி (கணிதம்) படிப்பில் சென்னை பல்கலைக்கழக அளவில் இரண்டாவது ரேங்கில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். சென்னை லயோலா கல்லூரியில் 1963 - 65 காலகட்டத்தில் எம்.எஸ்சி பட்டம் பெற்றுள்ளார்கள். ஆரம்பத்தில் லயோலா கல்லூரியில் டியூட்டராகவும், பின்னர் கோவை பி.எஸ்.ஜி கல்லூரியில் உதவிப் பேராசிரியராகவும் பணி செய்திருக்கிறார்கள். தந்தையாரின் விருப்பத்திற்கிணங்க முனைவர் பட்டம் பெறவேண்டும் என்ற ஆசையை துறந்து, ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதி முதல் முறை ஐ.பி.எஸ் கிடைத்ததால், மறுமுறை தேர்வு எழுதி 1968-ல் ஐ.ஏ.எஸ் கிடைக்கப் பெற்றிருக்கிறார்கள். 1968-ம் ஆண்டு ஐ.ஏ.எஸ்.ஸில் மைசூர் Cadre (தற்போது கர்நாடகா)-ல் சேர வாய்ப்பு. முசோரியில் ஓராண்டு பயிற்சி. கர்நாடகா மாநிலத்தில் ஹாசன் மாவட்டத்தில் பயிற்சி கலெக்டர், சிக்பலாப்பூர் சப் கலெக்டர், தும்கூர் கலெக்டர், பெங்களூரு மாவட்டக் கலெக்டர் ஆகிய பதவிகளை வகித்து இருக்கிறார்கள்.

அங்கு கன்னடம் பேச, எழுத, பழக வாய்ப்பு. கர்நாடகா மில்க் பெடரேஷன் (KMF) நிறுவனத்தை தொடங்கி பால்வளம் பெருக்கும் வாய்ப்பு. ஊரக வளர்ச்சி துறையில் செயலர். Coffee Board of India-ல் Chief Marketing officer ஆக 1978 - 81 காலகட்டத்தில் பணிபுரிய வாய்ப்பு. பின்னர் கர்நாடகா முதல்வர் தேவகவுடாவின் முதன்மை செயலர். பின்னர் இந்தியப் பிரதமர்கள் தேவகவுடா, ஐ.கே.குஜ்ரால், ஏ.பி. வாஜ்பாயி அலுவலகத்தில் இணைசெயலர். பின்னர் புதுதில்லியில் மத்திய திட்டக் கமிஷனில் பணி. இந்த பணிகளுக்கிடையில் தில்லியில் உள்ள ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலையில் முனைவர் பட்டம்.

திரும்ப பெங்களூரு வந்து விண்வெளித்துறையில் (Department of Space) நிர்வாகத் துறையின் கூடுதல் செயலர் (Additional Secretary) ஆக பணி புரியும் வாய்ப்பு. இங்கு இஸ்ரோவின் நிர்வாகத் துறையின் முக்கியத்துவம் பற்றி சில வரிகள். இஸ்ரோவில் இரண்டு முக்கியமான துறைகள் இருக்கின்றன. ஒன்று பொறியியல் துறை (Technical Wing). மற்றது நிர்வாகத்துறை. பொறியியல் துறையின் சாதனைகள் குறித்து முன் கட்டுரைகளில் மிக எழுதி இருக்கிறேன். ஆனால் இஸ்ரோவின் வளர்ச்சியிலும், வெற்றிகளிலும் இந்த இரண்டு துறைகளும் சமபங்கு ஆற்றியிருக்கும் விபரங்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இந்தத்துறைகள் இரண்டும் இஸ்ரோவின் இரண்டு கண்கள் போன்றவை என்றால் அது மிகையாகாது. இரண்டு துறைகளும் ஒன்றாக பயணிப்பதால் தான் இஸ்ரோவின் அபரிமிதமான தேவைகளும் வெற்றிகளும் நிறைவேறி வருகின்றன.

நிர்வாகத் துறையில் பல பிரிவுகள் இருக்கின்றன. பொது நிர்வாகப்பிரிவு (General Administration), கணக்கு பிரிவு (Accounts and Finance), பொருள்கள் வாங்குதல் மற்றும் அவைகளை பேணிக்காத்தல் பிரிவு (Purchase and Stores), உள் தணிக்கைப் பிரிவு (Internal Audit) ஆகியவை இதில் அடங்கும். இஸ்ரோவின்



டாக்டர் சொ.சொ.மீனாட்சி சுந்தரம் உடையம்மை ஆச்சி

**குடும்பம்**

| | |
|---|---|
| பெயர்: | சொ.சொ.மீனாட்சிசுந்தரம் |
| பிறந்த தேதி: | 01-11-1944 |
| ஊர்: | தேவகோட்டை |
| குடும்பப்பெயர்: | ரெண்டு வண்டிக்கார வீடு |
| கோயில்: | வைரவன் கோயில் |
| பிரிவு: | பெரிய வகுப்பு |
| துணைவி: | உடையம்மைஆச்சி(தேவகோட்டை), Pre University, House Wife |
| பெற்றோர்: | லேட் சொர்ணலிங்கம் செட்டியார்<br>லேட் மீனாட்சி ஆச்சி |
| மகன்: | ரவி சுந்தரம், B.A., NIIT, Senior Vice President, BNY Technologies, Chennai |
| மருமகள்: | சிவகாமி, B.Com., (தேவகோட்டை), Housewife. |
| பேரன்: | ஹரிகிரண் சுந்தரம்,13 years old, Studying Class 9 at Chettinad Vidyashram, Chennai |
| மகள்: | சுதா, M.B.B.S., DNB, (Ophthalmology), Now working in Aravind Hospital in Puducherry. |
| மாப்பிள்ளை: | பழனியப்பன், B.E., Working as a Consultant in Printing Technology and Solar Energy. |
| பேத்தி: | அழகம்மை என்ற கீதாஞ்சலி, Now doing her L.L.M in Technology Law at National Law School of India at Bengaluru. Lives with Grand Parents. |
| பேரன்: | கார்த்திக், Pursuing Gaming Technology. |



ஹரிகிரண் சுந்தரம், ரவி சுந்தரம், சிவகாமி

ஒவ்வொரு சென்டரிலும் இந்தப் பிரிவுகளும் ஒவ்வொரு பிரிவுக்கும் அதன் தலைமை அதிகாரியும் இருப்பார்கள். இந்த அதிகாரிகளுக்கு மேல் ஒரு நிர்வாக அதிகாரி (Controller) இருப்பார். எல்லா சென்டர்களின் நிர்வாக அதிகாரிகளுக்கும் மேல் பெங்களூருவில் அமைந்துள்ள இஸ்ரோ தலைமையகத்தில் (ISRO Headquarters) ஒரு தலைமை அதிகாரி (Additional Secretary) இருப்பார். இவர் Department of Space-ன் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் இருப்பார். இங்கு மேல் என்று நான் குறிப்பிட்டாலும் இஸ்ரோவின் சமநிலை நிர்வாக கொள்கையின்படி (Horizontal Matrix Management Philosophy) சமநிலையிலேயே இவர்கள் அனைவரும் இணைந்து பணிபுரிவார்கள்.



கார்த்தி, சுதா, பழனியப்பன், அழகம்மை என்ற கீதாஞ்சலி

இஸ்ரோவின் தேவைகள் மிக அதிகம். ஊழியர்களின் தேவைகளை பூர்த்தி செய்தல், செலவுகளை குறைத்து அதைக் கட்டுப்படுத்துதல், பல Hitech சாதனங்களை வாங்குதல், சாதனங்களை நிர்மாணித்த அளவில் பேணிக்காத்தல் ஆகியவை இவர்கள் ஆற்றும் இன்றியமையாத பணிகள். திரு. மீனாட்சிசுந்தரம் இந்த உயரிய பதவியை இரண்டு ஆண்டுகள் வகித்து இஸ்ரோவின் வளர்ச்சியில் அரும்பணி ஆற்றியிருக்கிறார். பின்னர் மைய அரசின் குடிநீர் விநியோகம் மற்றும் ஊரக வளர்ச்சி துறையின் செயலராக இருந்து, திரும்பவும் விண்வெளி மற்றும் அணுசக்தி துறையின் செயலராக பெங்களூருவில் பணி மாற்றம் அடைந்திருக்கிறார். அக்டோபர் 31, 2004-ல் பணி ஓய்வு பெற்று தற்சமயம் பெங்களூருவில் வசித்து வருகிறார்.

ஓய்வு பெற்ற பிறகும் வானியல் துறை ஆலோசகர், கர்நாடக மாநில திட்டக் குழுவின் தலைவர் போன்ற பொறுப்பான பதவிகளிலிருந்து தன் அநுபவத்தின் பயனை நாட்டுக்கு வழங்கி இருக்கிறார். பதவி காலத்தில் பணி நிமித்தம் 34 நாடுகளுக்கு சென்று வர வாய்ப்பு, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் உள்ளிட்ட விண்வெளி விஞ்ஞானிகளுடன் நெருங்கிப் பழக வாய்ப்பு இவை தன் வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவங்கள் எனப் பெருமிதம் கொள்கிறார். இடையில் நிறைய கட்டுரைகள், புத்தகங்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார். கண்ணதாசன் கவிதைகளிலும், திருக்குறளின் நெறிமுறைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இளைஞர்களுக்கு மிகச்சிறந்த ரோல் மாடல்.

தற்போது பெங்களூருவில் உள்ள National Institute of Advanced Studies-ல் Visiting Professor, தன்னார்வ தொண்டு நிறுவனமான MYRADA என்ற அமைப்பின் தலைவர் (Chairman). புதுதில்லியில் உள்ள Institute of Social science-ல் Honorary Professor, திண்டுக்கல்லில் உள்ள Gandhigram Rural University-ல் Visiting Professor போன்ற பதவிகளை வகித்து வருகிறார். துணைவியார் உடையம்மை ஆச்சி இவர் பணிக்கு உறுதுணையாக இருந்து குழந்தைகளை நல்ல குடிமக்களாக வளர்த்திய பெருமைக்கு உரியவர்.

திரு மீனாட்சிசுந்தரம் அவர்களின் சிறப்பு அம்சங்கள் எளிய தோற்றம், தெளிவாக எடுத்துரைக்கும் மாண்பு, நேரக் கட்டுப்பாடு, உணவுக் கட்டுப்பாடு, 80 வயதிலும் சுறுசுறுப்பு போன்றவை அனைவரும் கடைபிடிக்க வேண்டிய ஒன்றாகும்.

இளைஞர்களுக்கு முன்மாதிரியாக இருந்து அவர்களும் ஐ.ஏ.எஸ் தேர்வில் வெற்றி பெற்று அரசு பணியில் உயரிய பதவிகள் வகிக்க வேண்டும் என்பது இவருடைய பேராவலாக இருந்து வருகிறது. ♦

# நானிலம் போற்றும் நகரத்தார் வரலாறு 44



# கலம் செலுத்தக் காத்திருந்தனர்



மா.இளங்கோ, குழிபிறை, 9842260955

சென்ற இதழில் 16-ஆம் நூற்றாண்டின் முக்கிய நிகழ்வுகள் மேலோட்டமாக தரப்பட்டிருந்தன. கலம் செலுத்தும் கலையில் வல்லவர்களான நம்மை வீழ்த்தினர் ஐரோப்பியர்கள். அவர்கள் நிகழ்த்தியவற்றில் நன்மை தீமை என இரண்டும் கலந்தே இருந்தன. அதன் தொடர்ச்சி இந்த இதழிலும்.

### மலாக்கா மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் செட்டிகள் வணிகம்

15, 16-ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த கல்வெட்டுகள் குறிப்பாக நகரத்தார்கள் பற்றிய கல்வெட்டுகள் குறைவான எண்ணிக்கையில் உள்ளன. அந்நிலையில் பழவேற்காடு கல்வெட்டு சொல்லும் செய்திகளின்படி குழப்பங்கள் நிறைந்த 15, 16-ஆம் நூற்றாண்டுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் உயிர்ப்போடு செயல்பட்டனர் என நாம் உறுதி செய்து கொள்ளலாம். பழவேற்காட்டில் பரவலான பகுதிகளிலிருந்து வணிகர்கள் வந்து குழுமி உள்ளனர். ஏனென்றால் பழவேற்காட்டில் இருந்து தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் செட்டிகள் வணிகம் செய்திருக்கின்றனர். மலாக்காவில் நிலையான குடியிருப்பும் இருந்தது (பக். 137, எஸ்.ஜெயசீல ஸ்டீபன்) திரு. ஸ்டீபன் குறிப்பிடும் 'குடியிருப்பு' நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் குடியிருப்பே என்பதை எளிமையாகப் புரிந்து கொள்ளலாம். ஏனெனில், நகரத்தார்கள் மலாக்காவுடன் கொண்ட தொடர்பு நெடியது, இன்று வரையில் தொடர்கிறது.

கி.பி.1511-ல் போர்த்துக்கீசியர்கள் மலாக்காவைக் கைப்பற்றினர். 1520-ஆம் ஆண்டளவில் சோழ மண்டலக் கரைகளில் இருந்த வணிகர்கள் மலாக்காவுடன் வணிகம் செய்தனர். செட்டிகளின் ஆதிக்கமே இந்தக் கடல் வழியில் இருந்தது. செட்டிகள் செய்த உதவியால்தான் போர்த்துக்கீசியர்கள் மலாக்காவைக் கைப்பற்ற முடிந்தது. (பக். 143) மலாக்காவுடன் நடந்த வணிகத்தில் பழவேற்காட்டின் பங்களிப்பு 1530 வரை இருந்தது. 1540-ஆம் ஆண்டுகளில் சாந்தோம் துறை அந்த இடத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

போர்த்துகீசியர்களின் காலத்தில் நகரத்தார்கள் அல்லாமல் பிற சமூகத்தினரும் மலாக்கா வணிகத்தில் ஈடுபட்டனர். தெலுங்கு பேசிய கோமட்டி, கவரைச்செட்டிகள், குதிரைச் செட்டிகள், வெள்ளாள முதலியார்கள் ஆகியோர் ஆவர். பழவேற்காட்டில் இருந்து அரிசி, துணிகள் அனுப்பப்பட்டன. இங்கிருந்து கொண்டு செல்லப்பட்ட பொருட்களை மலாக்காவில் தங்கமாக மாற்றிக் கொண்டனர்.

செட்டிகள் மற்றும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கும் போர்த்துக்கீசியர்களுக்கும் இடையே இருந்த உறவு சிறப்பானதாக இருந்திருக்கிறது. ஆனால், இதே நேரத்தில் இப்பகுதியில் இருந்து செயல்பட்ட மரைக்காயர்களுக்கும் போர்த்துகீசியர்களுக்கும் இடையே முட்டல்களும் மோதல்களும் நிலவி வந்தன.

கி.பி.1547-ல் சில போர்த்துக்கீசியக் கப்பல்கள் செட்டிகளிடம் அடகு வைக்கப்பட்டன (பக். 137) என திரு ஜெயசீலன் பதிவு செய்கிறார். வணிகக் குடிகள் 16-ஆம் நூற்றாண்டிலும் பொருள் வலிமையுடையவர்களாக இருந்தனர் எனக் கொள்ளலாம். கி.பி.1506-ல் மலேசியாவிற்குச் செல்லும் கப்பல்கள் கூனிமேடு துறையில் இருந்தும் புறப்பட்டிருக்கின்றன (சாந்தோம் அருகில் உள்ளது கூனிமேடு)

### மலாக்காவுடன் வணிகம் தளர்ச்சியை நோக்கி:

காலம் செல்லச்செல்ல போர்த்துக்கீசியர்கள் விதித்த கட்டுப்பாடுகள், விதிகளில் மாற்றங்கள் போன்றவை மலாக்கா கடல்வழிகளை இயல்பாகப் பயன்படுத்திக் கொள்ள வணிகர்களால் இயலவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

1. தலைக்கோட்டைப் போரில் விஜயநகரப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. பழவேற்காடு துறைமுகத்தின் அழிவும் தொடங்கியது.
2. சோழமண்டல வணிகர்கள் மலாக்கா செல்வதற்கு இருவழிக் கட்டணத்தை முதலிலேயே செலுத்த வேண்டியிருந்தது. அதாவது மலாக்கா கொண்டு செல்லும் சரக்குகள் மற்றும் கொண்டு வரப்படும் சரக்குகள் இரண்டிற்கும் முதலிலேயே கப்பல் கட்டணத்தைச் செலுத்துமாறு வலியுறுத்தப்பட்டனர். இந்த முறை ஏற்புடையதாக இல்லை என வணிகர்கள் கருதினர். மலாக்காவைத் தவிர்த்தனர் (பக். 147)
3. மலாக்காவில் இருந்த போர்த்துக்கீசிய தலைவரின் செயல்கள் வணிகர்களுக்கு எதிராக அமைந்தன.
4. மலாக்கா போர்த்துக்கீசியத் தலைவருக்குச் சொந்தமான பழுதடைந்த கப்பலில் வணிகர்கள் தமிழகம் திருப்பி அனுப்பப் பட்டனர்.
5. 1570-களில் மலாக்கா கடல் பயணங்கள் செல்லக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஒருவருக்கு இரண்டு பயணங்கள் என வணிகர்களின் பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டன. இரண்டு பயணங்களும் அவர்கள்

சொன்ன கடல்வழியில் தான் செல்ல வேண்டும் என அந்தக் கட்டுப்பாடு இருந்தது. இதனால் சிக்கல்கள் தாம் வளர்ந்தனவே தவிர வணிகம் வளரவே இல்லை.

6. கி.பி.1574-ல் மலாக்காவில் சுங்கக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. அதிக வரிகள், அதிகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் வணிகத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாயின.

7. இந்திய வணிகர்களுக்கு ஏற்பட்ட சிக்கல்களே ஜாவா வணிகர்களுக்கும் ஏற்பட்டன. தென்னிந்திய வணிகமும் ஜாவா வணிகமும் வீழ்ந்தன. மலாக்கா துறைமுகத்தின் வருவாயும் வீழ்ந்தது.

திரு.ஜெயசீலன் குறிப்பிடும் மேற்கண்ட காரணங்களால் நகரத்தார், மரைக்காயர் உள்ளிட்ட அனைத்து வணிகச் சமூகங்களையும் பாதித்திருக்கும் எனக் கொள்ளலாம். 16-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் போர்ச்சுக்கல் மன்னரின் தலையீட்டால் வணிகம் வளர்ச்சியடையத் தொடங்கியது. நாகப்பட்டினம் செல்லும் கப்பல்களுக்குப் போர்த்துக்கீசிய அரசு கடற்படை மூலம் பாதுகாப்பு வழங்கியது.

### இலங்கை, சீயாம் (தாய்லாந்து) சீனா வணிகம் – 1600க்குப் பின்:

சீயாம் கடற்கரைத் துறைமுகங்களையும் அங்கு கிடைத்த தங்கம், வெள்ளி பென்சோயின், அரக்கு மற்றும் தகரம் போன்ற விலையுயர்ந்த வணிகப் பொருட்களையும் போர்த்துக்கீசிய வரலாற்றாய்வாளர்கள் விவரிக்கின்றனர். சோழ மண்டல மரைக்காயரும், செட்டிகளும் தாய்லாந்திற்கு அடிக்கடி சென்று வந்தனர் (பக். 161) 1600-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் செட்டிகள் (நகரத்தார்கள் உட்பட) தாய்லாந்து வணிகத்தில் ஆதிக்கம் செலுத்தியுள்ளனர் என்பது தெரிய வருகிறது. நாகபட்டினத்தில் இருந்து இந்த வணிகங்கள் நடை பெற்றுள்ளன. ஆனால், போர்த்துக்கீசியர்களின் கட்டுப்பாட்டில் தான் நடந்துள்ளன.

இலங்கையுடன் நடைபெற்ற வணிகத்தில் அரிசி ஏற்றுமதிப் பொருளாக இருந்திருக்கிறது. இலங்கையில் இருந்து இலவங்கப்பட்டை, யானைகள் இறக்குமதி செய்யப்பட்டன (பக். 164) சோழமண்டலம் மேற்காசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது (பக். 166).

### மலாக்காத் தங்கம்:

மலாக்கா மிகப் பெரிய தங்க மையமாக இருந்ததாகவும் அங்கிருந்து தங்கம் சோழ மண்டல கடற்கரைக்கு வந்ததாகவும் இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார். (பக்.169) போர்னியோ சுமத்ராவில் இருந்தும் வந்திருக்கிறது. தமிழகத்தின் பெரும்பாலான கோயில்களில் ஏராளமான தங்கம் இருந்ததாகவும் இந்நூலாசிரியர் பதிவு செய்கிறார்.

1500-1600-க்கு இடையிலான காலம் போர்த்துக்கீசியர்களின் ஆதிக்கம் அதிகரிக்கத் தொடங்கிய காலம். (பக்.171) உள்ளூர் செட்டிகளுடன் அனுசரித்துச் செல்வது போர்த்துக்கீசியர்களுக்குக் கட்டாயமாகி விட்டது. சோழ மண்டலத்தில் அதிகரித்த போர்ச்சுக்கீசியரின் ஆதிக்கத்தை மரைக்காயர் தீவிரமாக எதிர்த்தனர். சாந்தோம், தேவனாம் பட்டணம் மற்றும் நாகபட்டினத்தில் இருந்து நடத்தப்பட்ட கடல்வழி வணிகத்தை இத்துறைமுகங்களில் இருந்த போர்த்துகீசியத் தலைவர் கட்டுப்படுத்தினார்.


உ சிவமயம் ஸ்ரீராமஜெயம்

**செட்டிநாடு வத்தல்கள் கிடைக்கும்**

எங்களிடம் தேன்குழல் வத்தல், கிள்ளு வத்தல், கரண்டி வத்தல், சின்ன வெங்காய வடகம் (கரிவடகம்), பிரண்ட (முறுக்கு வத்தல்), கத்திரி வத்தல், மாவத்தல், அவரை வத்தல், கேப்பை வத்தல், கேரட் வத்தல், பீட்ரூட் வத்தல், தக்காளி வத்தல், கறிவேப்பிலை வத்தல் ஆகிய சுவைமிகு வத்தல்களும், எல்லா வகை பொடி வகைகளும், வேங்கரிசி மாவு, உப்புக்கண்டம், மற்றும் தடுக்கில் பின்னிய நடுவீட்டுக் கோலம் கிடைக்கும்.

தொடர்பிற்கு: லட்சுமி மணிகண்டன், காரைக்குடி
8508392087 / 8778527165 / 8760742590
ADVT


பதினாறாம் நூற்றாண்டு தொடங்கி அதன் இறுதிக்குள் சோழ மண்டல வணிக அமைப்பில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. போர்த்துக்கீசியக் குடியிருப்புகளில் இருந்து பிற நாடுகளுக்கு புதிய கடல் வழிகள் அறிமுகமாயின. பாதுகாப்பான கடற்பகுதியாக நாகப்பட்டினம் விளங்கியதால், சீனர்கள் நாகப்பட்டினத்துடன் வணிகம் செய்ய விரும்பினர் என்ற செய்தியினை திரு.ஸ்டீபன் பதிவு செய்கிறார். சோழ மண்டலம் சீனா இடையே பயன்பாடற்றுப் போன கடல் வழிகள் மீண்டும் உயிர் பெற்றன. போர்த்துக்கீசியர்களின் கடல் ஆதிக்கம் இந்தியப் பெருங்கடலிலும், அரபிக்கடலிலும் பரந்து விரிந்தது. இந்தியத் துறைமுகங்கள் மட்டுமல்லாமல் ஹோர்முஸ், ஏடன், மலாக்கா வரை ஆதிக்கம் செலுத்தினர் (Essays in Maritime Studies - Edited by B.Arunachalam, Maritime History Society, Mumbai 1998 2nd imprint - 2016 Page IX An Introduction) இந்திய, அரபுநாட்டு வணிகர்களின் வணிகம் மட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறு பதினாறாம் நூற்றாண்டில் சோழ மண்டலத்தில் போர்ச்சுக்கீசியரின் வணிகச் செயல்பாடுகளும் நாளடைவில் டச்சுக்காரரும் ஆங்கிலேயரும் பிற ஐரோப்பியரும் இங்கே வருவதற்கு வழிவகுத்தன.

கி.பி.1540-களில் தமிழக சோழமண்டலப் பகுதியில் வாழ்ந்த போர்ச்சுக்கீசியர்களின் எண்ணிக்கை 600 பேர்கள் தாம். அன்றைய நாளில் தமிழகத்தில் ஏறத்தாழ 1 கோடி என்ற அளவில் மக்கள் தொகை இருந்திருக்கலாம். எந்த எண்ணிக்கையில் இருந்தாலும் ஒப்பீட்டளவில் தமிழக மக்கள் தொகையுடன் ஒப்பிடவே முடியாத அளவிற்கு சிறு எண்ணிக்கையிலேயே போர்த்துகீசியர்கள் உள்ளிட்ட ஐரோப்பியர்கள் இருந்திருக்கின்றனர். ஆனால் தமிழகம் அன்றைய நாளில் அவர்களிடம் வீழ்ந்து விட்டது.

கடலிலே வழிதேடி இந்தியாவை அடைந்த ஐரோப்பியர்கள் ஒரு சிலராகத்தான் இருந்தனர். ஆனால் காலங்கள் செல்லச் செல்ல இந்த நாடு அவர்களின் ஆணைக்கிணங்கவே நடந்தது. எண்ணிக்கையில் பல இலட்சம் பேர்களாக இருந்த இந்தியர்கள், சிலநூறு பேர்களின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்தனர் என்பதே வரலாறு.

பல நூற்றாண்டுகள் கடலில் காற்று வீசும் திசையெல்லாம் சென்று வந்தவர்கள், பிறரின் அனுமதிக்காகக் காத்திருந்து கலம் செலுத்தும் நிலைக்கு ஆளானார்கள். இந்த நிலை ஏன் நேர்ந்தது?

(வரலாறு வளரும்)



### இளம் நகர நட்சத்திரம்

## கயிலாய வாத்தியக்குழு நடத்தும் பள்ளி மாணவி

# பிருந்தா பெரியண்ணன்

கயிலாய வாத்தியக் குழுவில் இணைந்து, கோயில் நிகழ்வுகளில் வாசிக்கும் நகரத்தார் ஒருவரைப் பற்றி ஏற்கெனவே நம் இதழில் கட்டுரை வெளியிட்டிருந்தோம். அவரைப் போலவே கயிலாய வாத்தியம் இசைப்பது மட்டுமல்லாமல், இளம் வயதில் கயிலாய வாத்தியக் குழுவையே நடத்தி வரும் 15 வயதே ஆன பள்ளி மாணவி பிருந்தாவைப் பற்றிக் கேள்விப்பட்டதும் ஆச்சர்யத்தின் உச்சிக்கே சென்று விட்டோம். கயிலாய வாத்தியம் இசைப்பது மட்டுமல்லாமல் ஓவியம் வரைவதிலும் வல்லவர் பிருந்தா. சென்னையில் பல சுவர்களை இவருடைய ஓவியங்கள் அலங்கரிப்பது இவருக்கான தனிப் பெருமை. பிருந்தாவைப் பற்றிக் கேள்விப்பட்ட பிறகு அவரைப் பேட்டி எடுக்காமல் விட முடியுமா? பொதுத் தேர்வுகள் நடைபெற்றாலும் நமக்காக நேரம் ஒதுக்கி பேசினார் பிருந்தா.

சென்னையில் 10-ஆம் வகுப்பு படிக்கிறார் பிருந்தா பெரியண்ணன். தந்தை – வீர. பெரியண்ணன் செட்டியார், தாய் – சாந்தி ஆச்சி. காரைக்குடியைச் சேர்ந்த வீரப்பன் செட்டியார் – வள்ளியம்மை ஆச்சியின் மகன் வழிப் பேத்தி பிருந்தா. ஆயா – விஜயகுமாரி ஆச்சி, அய்யா – கணேசன் செட்டியார். இவர்களுடைய கோயில் நேமம் கோயில்.

**"ஓவியம் வரைவதில் எப்போதிலிருந்து ஆர்வம் வந்தது? சுவர் ஓவியம் வரைய ஆரம்பிச்சது எப்படி?"**

"சின்ன வயதில் இருந்தே ஓவியம் வரையறதுன்னா எனக்கு ரொம்பப் பிடிக்கும். அடிக்கடி படங்கள் வரைந்து வண்ணம் தீட்டுவேன். நான் ஐந்தாம் வகுப்பு படிச்சிட்டிருக்கும் போது, ஒரு முறை அப்பாவுடன் பைக்கில் தாம்பரத்துக்குப் போய்கிட்டிருந்தேன். அப்போது மீனம்பாக்கம் விமான நிலைய சுவரில் சில பேர் 'சர்வதேச சுற்றுலா தின'த்துக்காக ஓவியங்கள் வரைந்து, வண்ணம் தீட்டுவதைப் பார்த்தேன். அதைப் பார்க்க எனக்கு மிகவும் ஆர்வமாக இருந்தது. பக்கத்தில் போய் அவங்க வரைவதைப் பார்த்துக்கிட்டே இருந்தேன். அப்போது ஏர்போர்ட் அதாரிட்டி ஆபீஸில் இருந்து திடீர்னு ஒருத்தர் வந்து, எனக்கும் சுவர் ஓவியம் வரையறதில் விருப்பம் இருக்கான்னு கேட்டார். என் அப்பா அம்மாவுக்கு நான் அந்த அளவு வரைஞ்சுடுவேனான்னு சந்தேகம்தான். ஆனால். நான் யோசிக்காமல் உடனே ஓகே சொன்னேன். அவங்க ஒரு சுவரைக் காண்பித்து அதில் வரையச் சொன்னாங்க. அதில் ஏற்கெனவே யாரோ வரைந்து பாதியுடன் இருந்தது.. நான் முழு சுவர்தான் வேண்டும் என்றேன். உடனே அதைச் சுத்தம் செய்து, வெள்ளையடிச்சுக் கொடுத்தாங்க. அதுதான் என்னுடைய முதல் சுவரோவியம்.




பிரேமா நாராயணன்

அதைத் தொடர்ந்து அடுத்த முறையும் சுவரோவியம் வரையறதுக்கு எனக்கு ஏர்போர்ட் அதாரிட்டி ஆஃப் இந்தியா வாய்ப்பு கொடுத்தது. அதன் பிறகு, 1415 நபர்கள் சேர்ந்து மிக நீண்ட சுவரோவியம் வரைந்து, உலக சாதனை







*"சிவகங்கை மாவட்டத்தில், நேமம் கோயில் அருகே ஆற்காடு என்ற கிராமத்தில் அமைந்திருக்கும் அருள்மிகு வடிவுடைய அம்பாள் சமேத மது நந்தீஸ்வரர் கோயில், பராமரிப்பில்லாமல் மிகவும் சிதிலமடைந்து இருந்தது. நாங்கள் நேமம் கோயிலுக்குச் செல்லும் போதெல்லாம் அதைப் பார்ப்போம். மிகவும் பழமையான இந்தக் கோயிலைப் புதுப்பித்து, புனரமைக்க எல்லோரும் நன்கொடை கொடுத்து உதவ வேண்டும் என்று பிருந்தா ஒரு யூட்யூப் பதிவு வெளியிட, அது அறநிலையத் துறை ஆணையர் வரை சென்றதுடன், பலரிடமிருந்து நன்கொடையும் வந்தது. நகரத்தாரின் கோயிலான அக் கோயிலின் அறங்காவலர்களைக் கண்டறிந்து, பிருந்தா குழுவினர் உழவாரப்பணி செய்ய, பலரின் ஒத்துழைப்புடன் திருப்பணி சிறப்பாக நடந்து, சென்ற வருடம் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. குடமுழுக்கு விழாவில் பிருந்தா குழுவினர் கயிலாய வாத்தியம் வாசித்தனர். இப்போது கோயிலுக்கு அர்ச்சகர் நியமிக்கப்பட்டு இரு வேளை பூஜை நடைபெறுகிறது" என்று பிருந்தாவின் தந்தை பெரியண்ணன் குறிப்பிட்ட போது, பிருந்தாவின் ஆன்மிக ஈடுபாட்டையும், அர்ப்பணிப்பு உணர்வையும் பாராட்ட வார்த்தைகளே இல்லை.*

படைத்தோம். அதைத் தொடர்ந்து, சென்னையில் 30-க்கும் மேற்பட்ட அரசு பள்ளிச் சுவர்களில் விழிப்பு உணர்வு ஓவியங்கள் வரைந்திருக்கிறேன்".

**"வாழ்த்துக்கள் பிருந்தா. ஓவியக் கலைஞரான நீங்கள் கயிலாய வாத்திய இசையைக் கற்றது எப்படி?"**

"ஒரு தடவை கங்கை கொண்ட சோழபுரம் போயிருந்த போது, அங்கே 'கயிலாய வாத்தியம்' என்னும் சிவ வாத்தியத்தை வாசித்துக் கொண்டிருந்தாங்க. அந்த இசை என்னை மிகவும் ஈர்த்தது. அங்கே வாசிச்சவங்க காஞ்சிபுரம் பக்கத்தில் வாலாஜாபாத்தில் இருந்து வந்திருந்தாங்க. அவங்ககிட்ட இரண்டு வருட காலம் காஞ்சிபுரத்துக்குப் போய், அந்த வாத்திய இசையைக் கத்துக்கிட்டேன். சிவதினகரன் அய்யா, சிவசுப்பிரமணியன் அய்யா, சிவதண்டபாணி அய்யா ஆகியோர் என் குருமார்கள். அதன் பின்னர் சென்னையில் எங்கள் வீட்டுக்கு அருகே இருக்கும் கோயிலில் பயிற்சியைத் தொடர்ந்தேன். 2 வருடங்கள் முன்பு 'ஸ்ரீஜெயங்கொண்ட சோழீஸ்வரர் திருக்கயிலாய வாத்தியக் குழு' என்னும் பெயரில் குழு ஆரம்பித்து, 15-க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகள் இந்த இசையை என்னுடன் பயின்று வாசித்து வருகிறார்கள். எல்லா வாத்தியங்களும் வாங்கி வைத்திருக்கிறோம். தேர்வு நேரம் தவிர்த்து, ஞாயிற்றுக் கிழமைகளில் பயிற்சி செய்கிறோம். சிறுவர்கள் மட்டுமே வாசிக்கும் கயிலாய வாத்தியக் குழு எங்கள் குழு மட்டுமே!" என்று பெருமையுடன் கூறினார்.

**"சிவ வாத்தியக் கருவிகளின் எடை அதிகமாக இருக்குமே. எப்படி தூக்கி வாசிக்கிறீர்கள். சிரமமாக இல்லையா?"**

உ ஸ்ரீ ராமஜெயம்

**சுவீகாரம்**

நாட்டரசன்கோட்டை, இளையாத்தங்குடி
கோவில் - கழனி வாசல் பிரிவு
6 மாதம் அல்லது 1 வயதிற்குள் உள்ள
ஆண் குழந்தை வேண்டும்.
சுவீகாரம் விட விரும்புவோர்.
தொடர்புக்கு : 9486905906

"இந்த வாத்தியம் இறைவனுக்காக வாசிக்கப்படுவது. இறைவனுக்காக மனம் ஒன்றி இதை வாசிக்கும் போது வாத்தியக் கருவியின் எடை பெரியதாகத் தெரியாது. இதுவரை 100-க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை எங்கள் குழு நடத்தியுள்ளோம். எடை ஒரு பிரச்னையாக இருந்ததில்லை" - மிகுந்த முதிர்ச்சியுடன் பேசுகிறார் பிருந்தா.

**"எங்கெல்லாம் வாசிக்கிறீர்கள்?"**

"கோயில்களில் மட்டுமே வாசிக்கிறோம். ஒவ்வொரு பிரதோஷ தினத்திலும், கெருகம்பாக்கம் சிவன் கோயிலிலும், அதைச் சுற்றியுள்ள 6 கோயில்களிலும் எங்கள் குழுவின் கயிலாய வாத்திய இசையைக் கேட்கலாம். அது தவிர, முருகன் கோயில் விழாக்களிலும், அய்யப்ப பூஜைகளிலும் வாசிப்பதுண்டு. காரைக்குடியைச் சுற்றியுள்ள 30 கோயில்களில் வாசித்திருக்கிறோம். கோவிலூரில் உள்ள ஸ்படிகலிங்க அபிஷேகத்தின் போது வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது மறக்க முடியாதது. எங்கள் குழுவுடன் காசிக்கு சென்று வாசிக்க வேண்டும் என்பது என் விருப்பம். அதற்கு கோவிலூர் சுவாமிகளின் ஆதரவை வேண்டியிருக்கிறோம்".

**"படிப்பு, ஓவியம், வாத்தியக்குழு - எல்லாவற்றையும் எப்படி சமாளிக்கிறீர்கள்? உங்கள் எதிர்கால லட்சியம் என்ன?"**

"சுவரோவியம் வரைதல், கயிலாய வாத்தியம் இரண்டிலுமே ஈடுபாடு இருந்தாலும், படிப்பையும் விடுவதில்லை. மூன்றிலுமே ஆர்வம் அதிகமாக இருப்பதால், என்னால் நேரம் ஒதுக்கி சமாளிக்க முடிகிறது. நமது பாரம்பரியமாக இந்த கயிலாய வாத்திய இசையை சிறுவர்கள் மூலம் உலக முழுவதும் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே என் லட்சியம். அதற்கு ஈசன் துணைபுரிய வேண்டும்!" அமைதியாகப் புன்னகைக்கிறார் அந்த இளம் கலைஞர்.

ஈசனுக்காக இசைக்கும் போது, அவர் இசைய மாட்டாரா என்ன! கண்டிப்பாக இந்தக் கலைஞரின் லட்சியம் இறையருளால் ஈடேறும்.

# உற்சாகம் ‘ஆன்’ செய்ய ஒரு ‘சுவிட்ச்’



டாக்டர் சோம வள்ளியப்பன்

ஒருவருக்கு அவரது சிறு வயது முதலே விமானப் பயணம் என்றால் பயம். பெற்றோர்களுடன் போகும் போது எதையாவது சொல்லி, “நான் வரவில்லை” என்று தவிர்த்து விடுவார். தப்பித் தவறி போனாலும், முழுப் பயணமும் கண்களை மூடிக் கொள்வார், பயந்தபடி அமர்ந்திருப்பார்.

படித்து முடித்து வேலைக்குப் போன பிறகு அவருடைய அதிர்ஷ்டம், அவருக்குக் கிடைத்த வேலையில் அடிக்கடி விமானப் பயணம் செய்ய வேண்டி வந்தது. அவரால் தவிர்க்க முடியவில்லை. பயந்து பயந்துதான் போவார். எட்டு மணி நேர பயணங்களில் படிக்காமல் தூங்காமல், கொட்டக் கொட்ட விழித்திருந்து பயணம் செய்வார்.

அவருடைய பிரச்னைக்கு ஒரு முறை அவர் சந்தித்த என்.எல்.பி. மனநல மருத்துவர் ஒரு ஆலோசனை கூறினார். அது அவருக்கு வேலை செய்தது.

அவரை தன் ‘கிளினிக்’ கிற்கு வரவழைத்து, விமான இருக்கை போன்ற ஒரு நாற்காலியில் அமர வைத்து, அவரை அமைதிப்படுத்தி, அரை உறக்க நிலைக்கு கொண்டு சென்றார். அது புற உலகை மறக்க வைக்கும் ‘டிரான்ஸ்’ நிலை. குறிப்பிட்ட விதமாகப் பேசி அப்படிச் செய்ய முடியும். செய்தார்.

பிறகு அவரிடம், “நீங்கள், விமானத்தில் போகிறீர்கள் (அப்படி நினைத்துக் கொள்ளுங்கள்). நல்ல விமானம். நல்ல விமானி. எல்லோரும் அமைதியாக இயல்பாக இருக்கிறார்கள். நீங்களும் அப்படித்தான் இருக்கிறீர்கள். அந்தப் பயணம் உங்களுக்கு அவசியம். நல்ல முறையில் நடக்கிறது என்பதில் சில விதங்களில் சொல்கிறார்.

பிறகு, அவர் கையில் ஒரு பொம்மை மாட்டியிருந்த வித்தியாசமான சாவிக்கொத்தைக் கொடுத்து, அதை இறுகப் பற்றிக் கொண்டு, மனதிற்குள் முன்பு அவர் சொன்னவற்றை நினைக்கச் சொல்கிறார்.

பிறகு, “விமானப் பயணம் முடிவுக்கு வருகிறது. நீங்கள் உங்கள் கண்களைத் திறக்கலாம்” என்று சொல்லி, சாவிக்கொத்தை வைத்திருக்கும் கையிலிருந்து மற்றொரு கைக்கு மாற்றிக் கொள்ளச் சொல்கிறார்.

சில நிமிடங்கள் கழித்து, மீண்டும், “விமானம் புறப்பட இருக்கிறது. நீங்கள் அந்த சாவிக்கொத்தை எடுத்துக் கொள்ளுங்கள். உடனடியாக கண்களை மூடிக் கொண்டு நான் முன்பு சொன்னவற்றை நினைத்துக் கொள்ளுங்கள்” என்கிறார்.

இப்படியாக சில நாட்களுக்கு செய்த பிறகு, உண்மையில் அவர் விமானப் பயணம் செய்கிற நேரத்தில், சாவிக் கொத்து பிடித்தலையும் ஆலோசகர் சொன்னவற்றை நினைத்துக் கொள்வதையும் செய்கிறார்.

என்ன ஆச்சரியம்! அவர் மனநல ஆலோசகர் அலுவலகத்தில் அமர்ந்திருந்து அவருடைய பயணம் குறித்து பாதுகாப்பாக நினைத்துக் கொண்டது அனைத்தும் அவர்கள் மனதில் வருகிறது. அந்த உணர்வும் ஏற்படுகிறது.

அதன்பின், அந்தப் பயணம் முழுக்க அவர் அந்த நினைப்பிலேயே இருக்கிறார். சாவிக்கொத்தை பிடித்துக் கொண்டே இருக்கிறார். விமான ஓடுகளத்தில் ஓடி நின்ற பிறகு, சாவிக்கொத்தை பைக்குள் போட்டுக் கொள்கிறார். முடிந்தது. அவரது அந்தப் பயணம் சிறப்பாக பயமில்லாமல் முடிந்தது. பிறகு அதையே அவரது எல்லாப் பயணங்களிலும் செய்கிறார்.

தென் இந்தியாவைச் சேர்ந்த துளு பேசுகிற ஒரு பெண்மணி. சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். பெற்றோரோடு இருந்தவர், மேற்படிப்பிற்காக அமெரிக்கா போகிறார். படித்து முடித்ததும் வேலை கிடைக்கிறது.

அவரை வேலையில் முன்னேற விடாமல் பலரும் தடுக்கிறார்கள். அவருக்கு வருத்தமாக இருக்கிறது. அவர் அவருடைய பெற்றோர் வீட்டில் இருந்த போது இருந்த ஒரு தைரியமும், நம்பிக்கையும் அவரிடம் மெல்ல மெல்ல குறைந்து போனது.

அவற்றையெல்லாம் சமாளித்து தைரியமாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்கிறார். ஆனாலும், அந்தச் சூழ்நிலைக்கு மேல் மேலதிகாரிகள் அவரை விடவில்லை.

ஒரு நாள் அதீத வருத்தத்தில், விடுப்பு எடுத்துக் கொண்டு அலுவலகம் போகாமல் வீட்டிலிருக்கிறார். தாமதமாக எழுந்து, தேநீர் தயாரித்து, கோப்பையை கைகளில் பிடித்தபடி ஜன்னல் பக்கம் வந்து நிற்கிறார்.

மழை கொட்டிக் கொண்டிருக்கிறது. அன்றுதான் அவர் அமெரிக்காவில் மழை பெய்வதை நிதானமாக கவனிக்கிறார். பருகிய தேநீரும், அந்த மழைக் காட்சியும் ஒரு சேர, அவருக்கு அவருடைய பெற்றோர் வீடு நினைவு வருகிறது. கேரளாவுக்கு அருகில் இருக்கிற அவர்கள் ஊரில் அடிக்கடி மழை பெய்யும். அவர்கள்

குடியிருந்த அந்த பழைய வீட்டில் ஆங்காங்கே மழை நீர் ஒழுகும். அவரது அம்மா, மழையை திட்டவோ, அதனால் எரிச்சலடையவோ மாட்டார்கள். உடனே இயல்பாக பல சின்னச் சின்னப் பத்திரங்களை, வாளிகளை ஒழுகும் இடங்களில் வைப்பார்கள்.

அப்படிச் செய்யும் போது ஒரு பாடல் பாடுவார். தவிர, மழை காரணமாக வழக்கமாக வர வேண்டிய மீன் எடுத்து வருகிற பெண்மணி வராமல் போய், அவர்களுக்கு அன்று மீன் சாப்பாடு கிடைக்காது. ஆனாலும், சாபுதானா (ஜவ்வரிசி) போன்ற வீட்டில் வைத்திருக்கிற அவருடைய அம்மா அவற்றை வைத்து சாப்பாட்டை சமாளிப்பார். அது மிக ருசியாக இருக்கும். மொத்தத்தில் மழை நாட்கள் சிறுமிக்கு இனிமையான தருணங்களாக அவை இருக்கும்.

இப்போது அமெரிக்காவில், அலுவலகம் செல்ல மனமின்றி விடுப்பில் இருக்கும் அவர். கையில் ஒரு கோப்பை தேநீர். அதிலிருந்து வருகிற வாசனையும் ஆவியும். உடன் ஜன்னலுக்கு வெளியே கொட்டிக் கொண்டிருக்கிற மழையும் சேர்ந்து அவருக்கு அவருடைய கேரள வீட்டின் ஞாபகத்தைக் கொண்டு வந்து விட்டது.

வீட்டு நினைப்பு. உடன் அம்மாவின் சமாளிப்பு. பாடல். எல்லாம் நினைவு வரவும் அவருடைய மனதிலே ஒரு தெளிவு பிறக்கிறது. அந்த முந்தைய காலத்து தைரியமும் உற்சாகமும் வந்து விடுகிறது.

தன்னுடைய அந்த மிகச்சிறந்த உணர்வு இருந்த காலக்கட்டத்தை விரும்பும் நேரம் மனதில் கொண்டு வரமுடியும் என்பதை அவர் கண்டுபிடித்து விட்டார். அப்போது நடந்த சிலவற்றை மனக்கண்ணால் பார்த்து, அப்போதைய சத்தங்களை, வாசனைகளை, சீதோஷண நிலைகளை (பல புலன்கள்) அப்போதைய மன உணர்வை மீண்டும் கொண்டுவர முடியும் என்பதைக் கண்டு கொண்டு விட்டார்.

உற்சாகத்துடன் வெளியில் போனார். அதன்பின் அந்த நினைப்பைக் கொண்டு வந்து கொண்டு வந்து, சோர்வை விரட்டினார். வேண்டிய நேரங்களில் நல்ல உணர்வை தைரியத்தைக் கொண்டு வரலாம். அப்படி தூண்டச் செய்யும் நினைப்பு நிகழ்வுக்குப் பெயர், ஆங்கர்.

விமானப் பயணம் குறித்து பயந்தவருக்கு அந்த சாவிக்கொத்தும், ஆலோசகர் சொன்ன சில வாக்கியங்களும் ஆங்கராக்கப்பட்டது. ஆங்கரை தமிழில் தூண்டி என்று சொல்லலாம்.

எல்லோரும் எல்லா நேரமும் ஒரே போலிருப்பதில்லை. சில நேரங்களில் மிக சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் இருக்கிறோம். எல்லோரிடமும் நன்றாகப் பேசுகிறோம். நம்முடைய செயல் திறன் அதிகரிக்கிறது. நம்மைப் பலரும் விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சிறப்பான காலச் சூழ்நிலையை அப்படியே ஒரு பொட்டலம் போல (பேக்கேஜ்) ஆக்கி விடலாம். அந்தப் பொட்டலத்தை விரும்பும் நேரம் மனதில் கொண்டுவர முடியும்.

அதை திரும்பத் திரும்ப கொண்டு வருவதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம், அப்படி சந்தோஷமாக இருந்த நேரத்தில் ஏற்பட்ட மற்ற புற விஷயங்களை நினைத்துக் கொள்ள வேண்டியது. அவற்றை மீண்டும் மனதில் நினைத்துப் பார்க்க வேண்டியது மட்டுமே.

ஒவ்வொருவருடைய மன உணர்வுகளும் பல புற நிகழ்வுகளோடு பின்னிப் பிணைக்கப்பட்டு இருக்கின்றன. ஒன்றைப் பிடித்து இழுக்க அவற்றோடு மற்றவையும் கிளம்பி வெளியே வரும்.

அந்த கேரளப் பெண்ணுக்கு மழை வடிவில் அது இயற்கையாக அமைந்தது. அப்படி ஒன்று இருப்பது அவளுக்கு தற்செயலாக தான் பின்னால் நினைவு வந்தது. அந்தச் சூழ்நிலையோடு இருந்த சில பிற விஷயங்களை பார்த்ததும், அந்த முழு சூழ்நிலையும், அதைச் சார்ந்த அவருடைய தனிப்பட்ட மனநிலையும் வெளிப்பட்டது. அதற்குப் பிறகு அவர், அவருக்கு வேண்டிய போதெல்லாம் அந்த சூழ்நிலையை மனதில் வலிய கொண்டுவர, அவருக்கு அந்தப் பழைய சூழ்நிலையை ஒட்டிய உற்சாகம் கிடைத்தது.

எல்லோருக்கும் அப்படி ஏதாவது இருக்கும் என்று சொல்ல முடியாது அல்லது இருப்பது தெரியாது. அதன் காரணமாக விமானத்தில் பயணம் செய்தவருக்கு செயற்கையாக அப்படிப்பட்ட ஒன்றை அந்த மனநல ஆலோசகர் உருவாக்கிக் கொடுத்தார். ஒரு தைரியமான மனநிலையை அவரிடம் சொல்லி, அதை அவரை நம்ப வைத்து, அந்த சமயத்தில் வெளிப்புறத்தில் இருந்து அவரால் உணரக் கூடிய விதமாக ஒரு சாவிக்கொத்தையும் அவர் மனதுக்குள் சொல்லிக் கொள்ள வேண்டிய தகவல்களையும் சொல்லி, அவை இரண்டுக்கும் இடையே பிணைப்பு உருவாக்கினார். அதன் காரணமாக, பிணைப்பின் ஒரு பகுதியை தொடுகிற போதெல்லாம் மற்றொரு பகுதி நினைவுக்கு வருகிறது.

விமானத்தில் அமர்ந்திருக்கையில் அந்த சாவிக்கொத்தை கையில் எடுத்துப் பிடித்தாலே அவர் பாதுகாப்பாக உணர்வார் என்பதுதான் அந்த மனநல ஆலோசகரின் திட்டமும் பயிற்சியும். அது சரியாக வேலை செய்தது.

இப்படியாக, எவரும் தங்களுக்கு வேண்டிய விதம் சிலவற்றை உருவாக்கிக் கொள்ள முடியும். அது ஒரு சுவிட்ச் போல. உற்சாகமெனும் பல்பு எரிய, அதற்கு முன்கூட்டியே இருக்கும் அல்லது இப்போது உருவாக்கிக் கொள்ளும் 'ஒயரிங்' இணைப்புகள் மற்றும் ஆங்கர் எனும் சுவிட்ச் உருவாக்கிக் கொள்ள முடியும். என்.எல்.பி. மாஸ்டர்களால் அதைச் செய்ய முடியும். ஒரு கூடுதல் தகவல்: நான் என்.எல்.பி.–யில் ஒரு மாஸ்டர் பிராக்டிஷனர். ♦



# குறள் பாட்டு

குழந்தைக் கவிஞர் செல்ல கணபதி

அதிகாரம் - 40 (கல்வி)

391) கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

படிக்கத் தகுந்த நூல்களைப் படிப்பதும்
படிப்பதை கொஞ்சமும் பழுதின்றிப் படிப்பதும்
படித்ததை படித்த படிநீ நடப்பதும்
படித்ததன் பயனென பக்குவப் படுவாய்
எல்லா எழுத்தும் எழுத்தா காளனில்
எழுத்தில் சிறந்த எழுத்தினைப் படித்து
நில்நீ படித்த எழுத்தினைப் போல
நியதி நியாயம் நேர்மை நிலைக்கும்.

393) கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லா தவர்.

கல்வி கற்பதே கண்களின் பயனாம்
கல்லா தவர்இரு கண்களும் புண்களே
கல்லுதல் எனில்அது தோண்டுதல் ஆகும்
கல்லா மைதனைத் தோண்டி வீசிடு
கற்றவர் முகத்தில் பெற்றவை கண்களே
கற்றுநீ சான்றோன் ஆகுதல் என்பது
உற்ற கண்களின் உறுபயன் ஆகும்
உயரவும் உன்திறம் வளரவும் கல்விதான்.

395) உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.

செல்வனின் முன்னால் ஏழை வறுமையைத்
தீர்த்திட வேண்டி ஏக்கமாய் நிற்றல்போல்
கல்வியைப் புகட்டென வேண்டிக் கற்கலாம்
கடையர் எனில்அவர் கற்கவே மாட்டார்
இருப்பவன் முன்னால் ஏதுமற் றவர்கள்
இருகை ஏந்தல்போல் கல்லா தவர்கள்
தருகெனக் கல்வியை யாசித்துப் பெறலாம்.

396) தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்து ஊறும் அறிவு.

தோண்டத் தோண்டக் கேணிநீர் ஊறும்
தோண்டும் அளவுதான் ஊற்றுநீர் அளவும்
கற்கக் கற்கவே அறிவும் வளரும்
கற்கும் அளவுதான் அறிவின் வளர்ச்சியும்
தோண்டித் துருவினால் நீர்பெருக் கிடலாம்
தொலையாக் கல்வியைத் துருவித் துருவியே
வேண்டிக் கற்றிடில் விசாலமாய் அறிவும்
விரியும் வானமாய் வித்தைகள் வளருமே.

# திருமந்திரச் சுவை - 44

## வழிபாடு



பூங்குன்றம்
இராமசாமி

உலகவர் இறைக்கு ஆடை, அணிகலன், பூமாலை சாத்தியும், அர்ச்சனை, ஆராதனை செய்தும், சுயம்பு எனப் போற்றித் துதித்த போதிலும் அவ் இறை உண்மையை அவர் உணரார்.

மாறாக, உலக ஆசையை நீக்கி, மனக்குற்றங் களைந்து அவன் வழிப்படின் அதுவே பெருந்திசையாகிய வீட்டுலகிற்குச் செல்லும் வழியைக் காட்டும்.

சிவ வழிபாட்டின் பயன் வீடு (முத்தி) பெறுதலே.

சயம்பு: சுயம்பு, தானே தோன்றியவர். ஆத்தி: ஆர்த்தி, ஆசை. மலக்கிட்டு : மயங்கச் செய்து. மாத்திக்கு: பெருந்திசையாகிய வீடு பேறு.

இறைவனைத் தன்னுள் உணர்வாரே இறை வழிப்படுவார். அவர்தான் அவனோடு இணைவார்; ஐக்கியப்படுவார். ஆகவே, அவர்தான் மறுபடிப் பிறவார்!.

வழிபாடு என்பது என்ன?

வழிபாடு என்றால் வழிப்படுதல். இறைவழிப்படுதலே இறைவழிபாடு. 'தன்னை உணர்ந்தோரே' இறைவழிப்படுவர்.

'தன்னை உணர்தல்' என்றால் என்ன?

'தன் உயிரைத் தான் உணர்தலே' தன்னை உணர்தல் ஆகும்.

ஆகத் தன் உயிரை உணர்ந்தவர், 'இறை இருப்பினைத்' தன் உயிருள் உணர்வார். அவ் இறையோடு ஒன்றுவார். அவ்வழியில் இறைவழிப்படுவார்.

அதுவரை அவர் உலக போகத்துக்காக (பொன், பொருள், உறவு) வாழ்வார். தன்னலம் கருதியே இறையையும் வேண்டுவார்.

இதனை உணர்த்தும் திருமூலரின் பாடலைக் காண்போம்.

சாத்தியும் வைத்தும் சயம்புஎன்று ஏத்தியும்
ஏத்திய நாளும் இறையை அறிகிலார்
ஆத்தி மலக்கிட்டு அகத்தழுக்கு அற்றக்கான்
மாத்திக்கே செல்லும் வழியது வாமே. (10.1841)

★



நமது செட்டிநாடு

# ஏழிளந்தமிழ்

## 2 கொன்றை வேந்தன்

### உரை - செம்மல் வ.சுப.மாணிக்கனார்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

தாயும் தந்தையும் கண்கண்ட தெய்வங்கள்.

2. ஆலயந் தொழுவது சாலவும் நன்று

கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது மிகவும் சிறந்தது.

3. இல்லற மல்லது நல்லற மன்று

மனைவியுடன் வாழ்ந்து செய்யும் அறமே நல்லறமாகும்.

4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார்

கருமிகளின் செல்வத்தைத் தீயவர் எடுத்துக் கொள்வர்.

5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு

அளவாக உண்பது பெண்களுக்கு அழகைத் தரும்.

6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

ஊராருடன் பகைத்துக் கொண்டவன் அடியோடு அழிவான்.

7. எண்ணும் எழுத்துங் கண்ணெனத் தகும்

கணக்கும் இலக்கியமும் மக்களுக்குக் கண்கள் போன்றவை.

8. ஏவா மக்கள் மூவா மருந்து

சொல்வதற்கு முன் குறிப்பறிந்து செய்யும் மக்கள் அமிழ்த்தை ஒப்பார்கள்.

9. ஐயம் புகினும் செய்வன செய்

பிச்சை எடுத்தாயினும் கடமைகளை விடாமற் செய்.

10. ஒருவனைப் பற்றி ஓரகத் திரு

சிறந்த ஒருவனைத் துணையாய்க் கொண்டு இல்லறம் நடத்து.

11. ஓதலி னன்றே வேதியர்க் கொழுக்கம்

வேதம் ஓதுவதிலும் ஒழுக்கமே சிறந்தது.

12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு

பொறாமை கொண்டால் செல்வம் அழியும்.

13. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு

தானியத்தையும் செல்வத்தையும் வீண்செலவு செய்யாமல் தேடி வை.

14. கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை

பெண்களுக்குக் கற்பாவது உறுதியாக இருப்பது.

15. காவல் தானே பாவையர்க் கழகு

தம்மைத் தாமே காத்துக் கொள்வது பெண்களுக்கு அழகு.

16. கிட்டா தாயின் வெட்டென மற

விரும்பிய பொருள் கிடைக்காதென்றால் அதனை உடனே மறக்க.

17. கீழோ ராயினுந் தாழ வுரை

உனக்குக் கீழ்ப்பட்டவரிடத்தும் பணிவாகப் பேசு.

18. குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை

குற்றத்தையே பார்த்தால் சுற்றமே இருக்காது.

19. கூரம் பாயினும் வீரியம் பேசேல்

கூர்மையான அம்பு கையில் இருந்தாலும் வீராப்புப் பேசாதே.

20. கெடுவது செய்யின் விடுவது கருமம்

நண்பன் தீங்கே செய்யின் அவன் நட்பை விடுவது நல்லது.

21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை

பொருளை இழந்தபோதும் மனம் தளராது இருந்தால் செல்வம் மீண்டும் வரும்.

22. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி

கையில் உள்ள செல்வப் பொருளைக் காட்டிலும் கல்விப் பொருளே சிறந்தது.

23. கொற்றவன் அறிதல் உற்றிடத் துதவி

அரசன் அறிந்திருந்தால் துன்பக்காலத்து உதவி கிடைக்கும்.

24. கொட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு

கோள் சொல்லுபவனிடம் போய்ச் சொல்லும் கோள் காற்றுடன் சேர்ந்த நெருப்புப் போலப் பரவும்.

25. கௌவை சொல்லின் எவ்வெவர்க்கும் பகை

பிறர்மேல் பழிச்சொற்களையே சொல்லிக் கொண்டிருப்பவன் எல்லோருக்கும் பகையாவான்.

26. சந்ததிக் கழகு வந்தி செய்யாமை

மலடு இல்லாமல் இருப்பது குடிக்கு அழகு.

27. சான்றோ ரென்கை யீன்றோட் கழகு

தன் பிள்ளைகள் சிறந்தவர்கள் எனச் சொல்லிக் கேட்பது தாய்க்கு மகிழ்ச்சி.

28. சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு

சிவனை வழிபடுதல் ஒருவன் செய்யும் தவத்திற்குச் சிறப்பு.

29. சீரைத் தேடின் ஏரைத் தேடு

சிறப்பாக வாழ விரும்பின் உழு தொழிலைச் செய்.

30. சுற்றத்திற் கழகு சூழ இருத்தல்

இன்பத்திலும் துன்பத்திலும் கூடியிருப்பதே சுற்றத்தார்க்கு மேன்மை.

31. சூதும் வாதும் வேதனை செய்யும்

வஞ்சகமும் வழக்கும் துன்பத்தை உண்டாக்கும்.

32. செய்தவம் மறந்தாற் கைதவ மாளும்

செய்ய வேண்டிய தவத்தை மறந்தால் துன்பம் பற்றிக் கொள்ளும்.

33. சேமம் புகினும் யாமத் துறங்கு

காவல் செய்யினும் நள்ளிரவில் உறங்க வேண்டும்.

34. சையொத் திருந்தால் ஐய மிட்டுண்

இணங்கும் அளவு எப்போதும் பிச்சை அளித்து உண்பாயாக.

35. சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர்

பொருள் உடையவர் அறம், இன்பம் ஆகிய பேறுகளைப் பெறுவர்.

36. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்

சோம்பல் உடையவர் வறுமையால் வாடி அலைவர்.

37. தந்தை சொல்மிக்க மந்திர மில்லை

தந்தை சொல்லைவிட மேலான அறிவுரை இல்லை.

38. தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை

தாயைக் காட்டிலும் வேறு கோயில் இல்லை.

39. திரைகட லோடியுந் திரவியந் தேடு

கப்பல் ஏறி வெளிநாடு சென்றும் பொருளைத் தேடு.

40. தீராக் கோபம் போராய் முடியும்


தணியாத கோபம் சண்டையில் கொண்டு நிறுத்தும்.

(தொடரும்)

# திருப்பதியில் சர்வதேசக் கோயில்கள் மாநாடு



அரியக்குடி " ஸ்ரீ" – சபாரத்தினம்
(garudasaba@gmail.com)



திருப்பதி பிப்ரவரி 17, 18 மற்றும் 19ஆம் தேதிகளில் களை கட்டியது. நகரத்தார் பெருமக்கள் பெரும்பாலும் ஊருக்கு இருவராய் பல மார்க்கங்களில் வந்து குவிந்தனர்.

ஒரு குடையின் கீழ், நகரத்தார்கள் இணைந்தது சர்வதேசக் கோயில்கள் மாநாட்டு நிகழ்வுகளில் பங்குபெறுவதற்காகத்தான். இந்த மாநாட்டிற்கு International Temple Convention & Expo 2025 (ITCX 2025) எனப் பெயர் இட்டிருந்தார்கள். 58 நாடுகளிலிருந்து 1581 ஆலயங்களின் நிர்வாகிகள் பங்கேற்பாளர்களாகத் திரண்டிருந்தனர். 15 அமர்வுகள் – ஆன்மீக உலகில் தலைசிறந்தவர்களின் உரைகள் என விமரிசையாக இருந்தது மாநாடு.

நல்ல பயனுள்ள ஆன்மீகத் தெளிவுகளைக் கற்றுத்தந்தது மாநாடு. தொடக்க விழாவே, விழாவின் பிரமாண்டத்தைக் கட்டியம் கூறுவதாக அமைந்திருந்தது. தொடக்க விழாவின் முக்கிய விருந்தினர்கள் மூன்று மாநில முதல்வர்கள். மஹாராஷ்ட்ரா மாநில முதல்வர் தேவிந்த்ர பத்னாவிசு அவர்கள். கோவா மாநில முதல்வர் பிரமோத் சாவந்த் அவர்கள். ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்கள். ஆல் அத்தி அரசாய் இந்த மூபெரும் ஆளுமைகள் வந்து சிறப்பிக்க, மிகப் பிரமாண்டமாகத் தொடங்கியது விழா .

மாநாட்டின் அடிப்படை நோக்கம் உலகெங்கும் இயங்கும் இந்துத் திருக்கோயில்களில், நிர்வாகங்களை வளர்ந்து வரும் தொழில் நுட்பச் சூழலில், பண்பாடு மாறாமலும், அதே வேளையில் அதிகப் பயன்பாடுள்ளதாகவும் மாற்றி அமைக்க முயற்சிப்பதே.

ஆகப்பெரிய பொருளாதாரக் கேந்திரமாகச் செயல்படும் ஆலயங்களில் உள்ள நிதியை. நல்ல ஆளுமைகளைக் கொண்டு சமூகப் பயன்பாட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டும். பக்தர்கள் பெருமளவில் தரிசிக்க வரும் ஆலயத் தலங்களில் நல்ல தங்குமிடம், சுகாதாரமிக்க சூழலை ஏற்படுத்துதல், அன்னம் பாலித்தல், ஆதூர சாலை என்னும் மக்கள் உடல் நலத்தில் அக்கரை கொள்ளுதல், அனைவருக்குமான கல்வியைக் கொடுக்க வழிவகை செய்தல் என நிதி நிர்வாகம் மடை மாற்றம் செய்யப் பெறவேண்டும் என்பதைப் பலர் முன் மொழிந்தனர்.

கூட்ட நெரிசல்களை நெறிப்படுத்துதல், தரிசன நேரத்தை எண்ம வழியில் சீரமைத்தல், சிவாச்சாரியார்கள்/அர்ச்சகர்களின் ஊதியங்களை நடப்பு பொருளாதார சூழலுக்கு ஏற்ப நிர்ணயம் செய்தல் போன்ற ஆலய மேம்பாடுகள் குறித்தும் விரிவாக மாநாடு விவாதத்திற்கு முன்னெடுத்தது.

மாநாட்டில் பேசிய ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்களின் உரை, உற்சாகம் தருவதாக இருந்தது. உரையின் உரத்துப் பேசப்பட்டவை:

'பிரதானத் தெய்வமான வேங்கடவனை ஒரு கண்ணாகவும் தொழில் நுட்ப வளர்ச்சியை ஒரு கண்ணாகவும் போற்றி வருகிறது ஆந்திர மாநிலம். கடவுள்களுக்குச் செய்யும் கைங்கரியமும். மக்களுக்குச் செய்யும் சேவையும் ஒன்றுக்கு ஒன்று சமமானவையே.

இந்திய அளவில் இயங்கி வரும் இந்துக் கோவில்களிலிருந்து வரும் நிதியம், சுமார் ஆறு லட்சம் கோடிகளைக் கொண்டதாக உள்ளது. இது நாட்டின் மிகப் பெரிய பொருளாதாரக்

கேந்திரமாகக் கொண்டாடப் படவேண்டிய ஒன்று. பொருளாதார வல்லுநர்களைக் கொண்டு, இந்த நிதிகளை நிர்வகித்தால், பொதிந்து கிடக்கும் பெரும் பயன்கள் மக்களைச் சென்றடையும்.

திருமலைக்கு வரும் பக்தர்களின் தினசரி சராசரி எண்ணிக்கை 72000. மேனாள் ஆந்திர முதல்வர் NTR அவர்களால் 83-84களில் ஆரம்பிக்கப் பெற்ற திருமலையில் நடைபெறும் விலையில்லா மதிய உணவுத் திட்டத்திற்கு, இன்று உள்ள நிதிய மூலதனம் (Corpus fund) ரூ. 2000 கோடியாக இருக்கிறது. உயிர் காக்கும் மருத்துவச் சேவைக்குரிய நிதிய மூலதனம் (Corpus fund) ரூ. 440 கோடியாக உள்ளது.

ஆந்திர மாநிலத்தின் அடுத்த இலக்காகச் செய்ய நினைப்பது, திருமலையில் அருள் பாலிக்கும் வெங்கடாசலபதி பத்மாவதித் தாயாரின் ஆலயங்களை. ஒரு மாநிலத்திற்கு ஒன்று வீதம், இந்தியத் தேசமெங்கும் நிர்மாணம் செய்ய வேண்டும். அது போல உலகளவில், இந்துக்கள் பெரும் அளவில் வாழும் வெளி நாடுகளில், ஒரு நாட்டிற்கு ஒன்று வீதமும் திருமலைப் பெருமாளின் -தாயாரின் ஆலயங்களையும் ஏற்படுத்த வேண்டும். இந்த இலட்சியத்தை நிறைவேற்றத் திருமலை திருப்பதி தேவஸ்தானம் தகுந்த திட்டங்களை வகுத்து வருகிறது.

90களில் தொழில் நுட்ப வளர்ச்சி குறித்து பிள்ளையார் சுழி போட்டுப் பேசி வந்தது ஆந்திர மாநிலம் தான். அன்று வீட்டிற்கொரு IT தொழில் நுட்பம் பயின்றவர் தேவை என்றோம். அதன் தொடர்ச்சியாக, இன்று வீட்டிற்கொரு AI தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைக்கிறோம். வளர்ந்து வரும் நவீனத் தொழில் நுட்பம் நமது பண்பாடும் பழமையும் மாறாது ஆலயங்களை நிர்வகிக்கும் வழிவகைகளைக் கண்டறிந்து சொல்லவேண்டும்.

ஆந்திர முதல்வரின் உரையின் நிறைவில், ‘இந்த மாநாட்டில் பங்கு பெறும் அனைவருக்கும் வெங்கடேசப் பெருமாளின் தரிசனம் கிடைக்கத் தேவஸ்தானம் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுகிறேன் எனச் சொல்ல, ஆவலாய் காத்திருந்து பார்த்திருந்த பார்வையாளர்கள் பரவசமாயினர். ஓம் நமோ வெங்கடேசாய... கோவிந்தா.... கோவிந்தா... என உற்சாகக் குரல்களால் அரங்கு அதிர நன்றி தெரிவித்தனர் பார்வையாளர்கள். இப்படி ஆன்மீகமும் ஆன்மீகம் சார்ந்த சிந்தனைகளுமாகத் தொடர்ந்தது மாநாடு .

இரண்டாவது நாள் அமர்வில் தமிழக பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் அண்ணாமலை அவர்களின் உரை இருந்தது . அரசியலைத் தாண்டி ஆலயங்களில் உள்ள நிர்வாகச் சீர்கேடுகளைப் பட்டியலிடுவதாக அமைந்தது.

### உரையில் உறைந்திருந்த செய்திகள் :

ஒரு நகரம் 1000 ஆண்டுகளைக் கடந்தும், அனைவரும் போற்றும் நகரமாக இருந்தால், அடிப்படையில் அது கோவிலும் கோவில் சார்ந்த நகரமாக இருப்பதே காரணமாக இருக்க முடியும் . உதாரணத்திற்கு வாரணாசி, தஞ்சை, மதுரை, திருவரங்கம், ராமேஸ்வரம் போன்றவை. திருப்பதி தேவஸ்தான நிகரச் சொத்து மதிப்பு சுமார் இரண்டு லட்சத்து ஐயாயிரம் கோடி. சுமார் 10 டன் எடையில் தங்கம் சுமார் 2.5 டன் எடையில் தங்க நகைகளாக வங்கியில் இருப்பாக உள்ளது. வங்கியில் இருக்கும் வைப்பு நிதியின் மதிப்பு 16,000 கோடி ரூபாய். நிலங்களும் கட்டிடங்களாக 960 தேவஸ்தான நிர்வாகத்தில் உள்ளது.

ஒரு ஆண்டுக்கு வாட்டிகன் நகர் தேவாலயத்திற்கு வருபவர்கள் எண்ணிக்கை சுமார் 90 லட்சம். மெக்காவிற்கு வரும் இஸ்லாமியர்களின் எண்ணிக்கை ஓராண்டிற்கு 2 கோடியாக உள்ளது. திருமலை திருப்பதிக்குத் தினசரி வரும் பக்தர்களின் சராசரி எண்ணிக்கை 72000.

2025-26-ல் உத்தேசிக்கப் பெற்ற திருமலை தேவஸ்தானம் வரவு சிலவு 2530 கோடி ரூபாயை எட்ட இருக்கிறது. தேவஸ்தானம் நிர்வகிக்கும் இந்த ஒரு ஆலயத்தின் நிதி நிலை அறிக்கை நமக்குச் சொல்லும் தகவல், பங்குச் சந்தையில் இருக்கும் பட்டியலிடப்பட்ட கார்ப்பரேட் நிறுவனங்களின் நிதிநிலைமையைப் போன்றதாக உள்ளது.

தமிழகத்தின் உள்ள ஆலயங்களின் எண்ணிக்கை 79 ஆயிரம். இதில், இந்து அறநிலையத் துறையின் நிர்வாகத்தின் கீழ் உள்ளவை 44,121. சுமார் 1000 ஆண்டுகளைக் கடந்த கோவில்களின் எண்ணிக்கை 604. 1986-ன் புள்ளி விபரப்படி இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்த நிலங்கள் ஐந்து லட்சத்து இருபத்தி ஐயாயிரம் ஏக்கர். 1996 நிலவரப்படி மேற்படி துறையின் வசம் உள்ளதில் 65000 ஏக்கர் நிலம் குறைந்திருக்கிறது. ஒரு தேவஸ்தானம் கொண்டுள்ள நிதி நிலையை 44 ஆயிரம் கோவிலுக்கு மேல் உள்ள நிர்வாகங்களோடு ஒப்பீடு செய்ய முடியவில்லை என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. இதை நேர் செய்ய இளையவர்கள் ஆன்மீக ஆர்வலர்கள் தங்கள் பங்களிப்பை நல்க வேண்டும்.

கோவிலூர் சுவாமிகளின் உரை வெகு சிறப்பாக அமைந்திருந்தது. சுவாமியின் பேச்சில்...

நேர்மையும் அர்ப்பணிப்பு உணர்வும் நிறைந்த தர்ம காரியங்கள் மிக உன்னதமான பலன்களை விளைவிக்கும். அதற்கு ஒரு முன் உதாரணம் திருப்பதி தேவஸ்தான நிர்வாகம். தர்ம காரியங்களுக்கு GST வரி விதிப்பது முற்றிலும் முரணானது. தமிழகத்தில் இந்து அறநிலையத் துறையின் ஆண்டு வருமானம் 400 கோடிகள் என்றால், அதில் அந்த துறையின் ஊழியர்களுக்கு வழங்கப் பெறும் சம்பளத்திற்கே 350 கோடிகள் சிலவு செய்யப் பெறுகிறது. ஒரு செயல் அலுவலரின் (Executive officer) சம்பளம், அதே ஆலயத்தில் பணிபுரியும் அர்ச்சகர்கள் சம்பளத்தோடு ஒப்பீடு செய்ய இயலாத அளவில் உள்ளது.

HR&CE சிலகவுளைத் தணிக்கைக்கு உட்படுத்தும் நோக்கத்திலேயே பார்க்கிறது. நாம் பூஜை முறைகள் வழுவி விடாது செய்வதிலேயே கருத்தாக இருக்கிறோம். Public Private Partnership திட்டத்தில் ஆலய நிர்வாகங்கள் மாற்றம் செய்யப் படவேண்டும். HR&CE நிர்வாகத்தில் இருக்கும் சொத்துக்கள் நன்கு நிர்வகிக்கப் பெறவில்லை. தரம் தாழ்ந்த நிர்வாகத்தால் வருவாய் ஈட்டுதலும் சந்தை நிலவரத்திற்குச் சம்பந்தம் இல்லாது இருக்கிறது. Professional Portfolio Management team ஒன்றின் கீழ் HR&CE நிர்வாகம் கொண்டு வருதல் அவசியம்.

அடுத்த அமர்வு. எதிர்பார்ப்பு நிறைந்த சபையாக இருந்தது. காரணம், பேச இருப்பவர் புதிய புதிய செய்திகளை ஆன்மீகச் சுரங்கத்திலிருந்து தோண்டிக் கொண்டு வந்து தரும் செட்டிநாட்டு உ.வே.சா பொற்கிழிக் கவிஞர் சொ சொ மீ ஐயா அவர்கள். ஐயாவின் உரையின் அடிநாதங்கள்.

அமெரிக்காவில் வரவேற்பறை அழகாக இருக்கும். ஜப்பானில் அலுவலகம், சைனாவில் அடுப்படி அழகாக அமைந்திருக்கும். இந்தியாவில் பூஜை அறை அழகு. ஏனெனில் நாம் இறைவனால் ஆசீர்வதிக்கப் பெற்றவர்கள். குறிப்பாக ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் தொகை அளவே இருக்கும் நகரத்தார் பெருமக்கள் உலகளவில் 700 ஆலயங்களை நிர்மாணம் அல்லது புனரமைப்பு செய்த புண்ணியம் பெற்று இருக்கிறார்கள்.

ஒவ்வொரு ஆலயங்களும் மனித வாழ்வியலோடு இயைந்து பயணிக்கும் என்பதை பார்த்திருப்பீர்கள். குழந்தைக்கு அன்னம் ஊட்டுவதற்கு குருவாயூர். சரஸ்வதி வித்தியாரம்பம் செய்ய கூத்தனூர். சமூக நலனில் அக்கறை கொள்ளும் வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம் போன்றவை. திருத்தலங்கள், மக்களை ஒன்றிணைக்கும் திருவிழாக்கள், சுற்றுலாக்கள் வழியாக, அதைச் சார்ந்த வேலை வாய்ப்புக்களைத் தந்து பொருளாதார உயர்வுக்கு வழிவகுக்கிறது. ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதை உரக்க ஒலிக்க வேண்டும்.

நச்சாந்துபட்டி திரு. PR.செல்வம் அழகப்பன் அவர்கள் ஆலயங்களின் வரலாற்றுச் சிறப்பைப் பற்றி அழகான உரையாற்றினார்கள். அடுத்து, வைநாகரம் திரு கருப்பஞ் செட்டி அவர்கள் 'வைநாகரம்' குடும்பத்தார்கள் செய்வித்த மதுரை மீனாட்சி அம்மன் கோவில் வடக்கு கோபுரம் உள்ளிட்ட திருப்பணிகளை அழகு பெற எடுத்துரைத்தார்கள். வழிவழியாக மரபு மாறாமல் தர்ம சிந்தனைகளை இப்போதுள்ள இளம் தலைமுறையினரும் எடுத்துச் செல்ல உள்ளதை நன்கு பதியம் செய்தார்கள்.

நமது 76 ஊர் நகரக் கோவிலின் பிரதிநிதிகளும், இலங்கை, சிங்கப்பூர், கனடா போன்ற நாடுகளில் 34 கோவில்களை நிர்வகிப்பவர்களுமாக 185 நகரத்தார் பெருமக்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கோவிலூர் சுவாமிகளின் முயற்சியால் - மடாலய நிர்வாகத்தினர் ஒத்துழைப்பால் குறிப்பாகத் திருமதி சோமசுந்தரி அவர்கள் சிரமேற்கொண்டு செய்த தொண்டால், Mahakumbh of temples நிகழ்வுகளில் நகரத்தார்களின் ஒன்று கூடல் மிக இனிதாக நிறைவேறியது.

இந்த விழாவிற்குச் சென்று வந்ததற்கான பயனாக, விழாவில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் - ஆந்திர முதல்வரின் உத்தரவின் பெயரில், திருப்பதி தேவஸ்தானம் ஒரு VIP தரிசனத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. முப்பது நிமிடங்களுக்குள் திருப்பதி ஏழுமலையானின் தரிசனம் கிடைக்கப் பெற்றது. இது பங்குபெற்றவர்களுக்கு என்றும் நின்று சேவை சாதிக்கிற ஏழு மலையான் வழங்கிய திருவருட்கொடை.

தரிசனம் நிறைவேறி லட்டு பிரசாதம் சாதித்த போது

சங்கமா கடல் கடைந்தான் தண்முகில்காள் வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீழ் அடிவீழ்ச்சி விண்ணப்பம்

என்கிற நாச்சியார் திருமொழி காதில் ஓங்கி ஒலித்தது. ♦




# Dr.மணிஸ் பல் மருத்துவமனை

No: 315/24 MAM பில்டிங் பூரணி மருத்துவமனை எதிரில்
(மீனாட்சி பேன் ஹவுஸ் காம்ப்ளக்ஸ் மாடி)
செக்காலை ரோடு - காரைக்குடி
வார நாட்கள் காலை 9.30 முதல் 1.30 வரை
மாலை 6.00 முதல் இரவு 9.00 வரை
ஞாயிறு-முன்-பதிவு-செய்தவர்களுக்கு-மட்டும்

இலவச பல் பரிசோதனை செய்யப்படும்

பல் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற Dr.மணிஸ் பல் மருத்தவமனைக்கு வருகை தாருங்கள்.

பல் பாதுகாப்பிற்கு காலை மற்றும் இரவு இருவேளையும் பல் துலக்குங்கள்

Dr.S.மணிகண்டன்,BDS., MBA(HM)
9551624126 / 7904079923

நமது செட்டிநாடு

# இராம காவியம்

தேவகோட்டை அரு.லெட்சுமணன்
(அலெக்ஸ்)




## வாலி வதை - (13)

கடலை ஒத்த பரப்பும் கருநீலமாய்
சுக்ரீவன் வாலியை வம்புக்கு இழுத்தான்
குகை விட்டு வெளியே வரவழைத்தான்
வந்தவன் நின்றான் நெடுமரமாய் பெரும்
குகைமுன் இருக்கும் குன்றினை போல்.
பேசிப் பார்த்ததில் பயன் இல்லை
வாலிக்கு வேறெந்த பயம் இல்லை
வேண்டா ஏழு வெட்டிக் குணங்கள்
முழுதும் பெற்ற மூடன் மற்றும் வீரன்
வாலியின் முன்னே யார் வந்தாலும்
வந்தவர் வலிமை பாதியாய் குறையும்
ஆண்டவன் படைப்பில் கொடுமை இது
சுக்ரீவன் வாலி இருவரும் மோதினர்
மூர்க்கத் தனமாய் கட்டிப்புரண்டனர்.
வாலியின் தாக்கும் வலிமை தாங்காது
வலியால் துடித்தான் சுக்ரீவன்.
இராமனைவணங்கிச் சரண்அடைந்தான்
என்னை காப்பது கடமை என்றான்.
இராமன், இலக்குவன் அருகில் இருக்க
தைரியம் சொல்லி அனுப்பி வைத்தான்
தானும் பின் சென்றான்.
திரும்பிய சுக்ரீவன் திசை கண்டு
வாலியின் கோபம் தலைக்கேற
சுக்ரீவன் உடலை பற்றி தூக்கி
பாறையில் மோத யத்தனித்தான்
இராமன் தன்னை மறைத்து கொண்டு
எய்தான் அம்பை வாலியின் இதயம் நோக்கி
பாய்ந்த அம்பை பளிச்சென பற்றி
இதயத்தோடு பிடித்து கொண்டான்
யார் விட்டது, இராமனாய்
இருக்காது என நினைத்தான்.
தாரை சொன்னாள் இவன் சாவு இராமனால்
முடிய விதி உண்டு. அம்பை எடுத்து
பெயர் பார்த்தான்.
செம்மை படர்ந்த இராம நாமம் கண்டான்.
முன்னே வந்த இராமன் முகம் தெரிய
செய்தது நீயோ செப்புவாய் இராமா
பெரிய குலத்து பெரியோன் நீ
போரில் பிழை செய்தாய்
என்னை கொல்ல மறைந்தாயோ
ஏன் உனக்கு இந்த நிலை
இராமன் சொன்னான் மதி இழந்தாய்
தம்பி மனைவியைதாரமாய் கொணர்ந்தாய்.
மகள் போல் இருப்பவளை மணந்தாய்
மதி கெட்டவன் மடையன் நீ என்றான்.
வாலி சிரித்தான். மந்தி எமக்கு மானம் இல்லை
இங்கும் அங்குமா இருப்பது இயல்பு.
எனக்கு எதுவும் தவறில்லை என்றான்.
இராமன் சொன்னான் நீ விலங்கு இல்லை.
மதி நுட்பம் கொண்டு மனு நீதி
சொல்லும் நீ மானுடன் போலாவாய்
எனவே உன்னை கொன்றது சரி.
தசரதன் மகனாய் பரதனின் அண்ணனாய்
நீ செய்தது பெரும் தவறு
அரக்கனிடம் உன் மனைவியை இழந்ததால்
அரக்க குணம் வந்ததோ!
இராமனுக்கு சொல்லில்லை தலைகுனிந்தான்.
வெற்று பதிலாய்வேறொன்றும் சொல்லாமல்
இருந்தஇராமனை மதித்தான் வணங்கினான்.
இலக்குவன் இடையில் புகுந்து
இத்தனை நடக்குமெனில் குரங்கு
கூட்டத்தில் என் அண்ணன்
தலைகுனியும் நிலை உண்டோ.
தம்பிக்கு கொடுத்த வாக்கைக் காக்க
உன்னை கொல்வதே நியாயம்.
உண்மை புரிந்ததால் வாலி பார்த்தான்
பெரியவன் பெரியவன் தான் இது
ராமனால் முக்தி தான் பெற்றபேரு
புண்ணியம் என்றே ஏற்றுக் கொண்டான்.

# பிராக் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி அரவிந்த் சிதம்பரம் பட்டம் வென்றார்



செக்குடியரசின் பிராக் நகரில் பிராக் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி நடைபெற்றது. இதன் கடைசி மற்றும் 9-வது சுற்றில் இந்திய கிராண்ட் மாஸ்டரான அரவிந்த் சிதம்பரம், துருக்கியின் குரேல் எடிஸுடன் மோதினார். கருப்பு காய்களுடன் விளையாடிய அரவிந்த் சிதம்பரம் 39-வது நகர்த்தலின் போது ஆட்டத்தை டிராவில் முடித்தார். இதன் மூலம் 6 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து பிராக் மாஸ்டர்ஸ் செஸ் தொடரில் அரவிந்த் சிதம்பரம் சாம்பியன் பட்டம் வென்றார். இதனை தொடர்ந்து அரவிந்த் சிதம்பரம் மேலும் பல சாதனைகளை படைக்க நமது செட்டிநாடு வாசகர்கள் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறது.




# நகரத்தார் சிகரத்தார் 112



காரைக்குடி நாராயணன்

சிகப்பி ஆச்சியும், செட்டியாரும், ராஜ்மோகனுடன் குன்றக்குடி முருகன் கோவிலுக்கு வந்தார்கள். அங்கே ரெங்க லெட்சுமணய்யா, மனைவி பொன்னம்மா அப்பத்தாவுடன் சேர்ந்து நகரத்தார்கள் காவடிகளுக்கு வடித்துப் போட்டு உதவி செய்தார். ஆச்சியின் பேத்தி அழகம்மை பிறந்த போது அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் அவதிப்பட்ட போது குன்றக்குடி அய்யாவின் அருள்வாக்கு படி பேத்தி அழகம்மையை குன்றக்குடி முருகனுக்கு எழுதி வைத்தார். அன்றிலிருந்து அழகம்மை அமோகமாக அயல்நாட்டில் வாழ்ந்து வருகிறாள். அதை நினைத்தபடி ஆச்சி மலையிலிருந்து அடிவாரத்துக்கு இறங்கியதும் அங்கே பார்த்துக் கும்பிட்டார். ராஜ்மோகன் விவரம் கேட்டார். ஆச்சி சொன்னார்.

தம்பி. யானை இறந்தாலும் ஆயிரம் பொன். இருந்தாலும் ஆயிரம் பொன். நான் குன்னக்குடி வர்ர போதெல்லாம் இங்கே கட்டிக் கிடந்த யானைக்கு வெல்லம், கரும்பு, வாழைப்பழம், தேங்காய் எல்லாம் கொடுத்து ஆசிர்வாதம் வாங்கிட்டுப் போவேன். இன்னைக்கு அந்த யானை இல்லை. இந்த ஊரே திரண்டு நல்லடக்கம் செஞ்சுது.

ஆச்சி கண்களைத் துடைத்துக் கொண்டார். செட்டியார் குருவாயூரப்பன் கோயிலுக்குச் சமர்ப்பணம் செய்த கேசவன் யானையைப் பற்றிச் சொன்னார்.

டைரக்டர் சார். 1913-ல் பிறந்த கேசவன் யானையை 1923-ல் குருவாயூர் கோயிலுக்குத் தந்தாங்க. அது குருவாயூரப்பன் தந்த வெண்ணெயை மட்டும் தான் சாப்பிடுமாம். அங்கே யானைகளுக்கு ஓட்டப் பந்தயம் வச்சா இந்தக் கேசவன்தான் முதல்ல வருமாம். அப்படி வர்ர யானைதான் திருவிழாவுல குருவாயூரப்பனைத் தூக்க முடியும். அதுக்கு உடம்பு சௌகர்யமில்லாமப் போக வேற யானையை வச்சு தூக்கி வர முடிவு செஞ்சிருக்காங்க. இது தெரிஞ்ச கேசவன் யானை 35 கி.மீ. செயினை அறுத்துக்கிட்டு வந்து குருவாயூரப்பனைத் தூக்கியிருக்கு. அதுதான் தூக்கணும்னு பிரசன்னம் சொல்லியிருக்கு. அந்த விழாவுல புறப்பாடு முடிஞ்சதும், குருவாயூரப்பனைப் பார்த்துத் தும்பிக்கையைக் காட்டிட்டுத் தன்னால எந்தப் பிரச்சனையும் வரக்கூடாதுன்னு ஏகாதசி அன்னைக்கு விடியற்காலையில 1976-ல் இறந்து போச்சு. அதுக்குச் சிலையைத் தந்தத்தோட வச்சிருக்காங்க. அதோட நினைவு நாள்லே யானைகள் எல்லாம் மொத்தமா நின்னு மரியாதை செய்யுதாம்.

ராஜ்மோகன் ஆச்சர்யத்துடன் சொன்னார்.

மனிதர்களை விட மிருகங்கள் நன்றியும், பாசமும் அதிகமுள்ளதுன்னு இதுலேருந்து தெரியலையா?

ஆச்சி ஆமோதித்தார்.

அதனாலதான் தம்பி. ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒவ்வொரு மிருகங்கள் அடையாளமா இருக்கு. பிள்ளையாரோட தும்பிக்கை வளைந்து, சுருண்டு இருப்பதாலதான் அவரை வக்ரதுண்டர்ங்குறாங்க. வாழ்க்கையில் வளைந்து கொடு. அதே நேரம் நேர்மையை விட்டு விடாதே.

ஆச்சியின் தெய்வ பக்தியையும், வாழ்க்கை நெறிமுறைகளையும் ராஜ்மோகன் பாராட்டினார். இப்போது வயதான இரண்டு ஆச்சிமார்கள் கதர் சேலை உடுத்திக் கையில் தேசியக் கொடியுடன் முருகா, முருகா என்று சொல்லியபடி குன்றக்குடி மலையில் ஏறினார்கள். ஆச்சி அவர்களைப் பார்த்து வணக்கம் சொன்னார்.அவர்கள் மெல்லச் சிரித்தபடி வந்தே மாதரம் முருகனுக்கு அரோகரா என்றபடி மலையேறினார்கள்.

ராஜ்மோகன் அவர்கள் கோயிலுக்குப் போகும் போது ஏன் தேசியக் கொடியுடன் போகிறார்கள் என்று கேட்க நினைத்ததைப் புரிந்து கொண்டு ஆச்சி சொன்னார்.

தம்பி... ஒரு ஆச்சி யாருன்னா. சீர்திருத்தச் செம்மல் வை.சு. சண்முகனாரின் மகள் திருமதி பார்வதி ஆச்சி. இவரின் கணவர் திரு.நடராஜன் செட்டியார், பினாங்கில் உள்ள ஆங்கிலோ சைனீஸ் பள்ளியில் படிச்சாரு. முதல் மாணவனாத் தேர்ந்தெடுக்கப்பட்டாரு. லண்டனில் உள்ள ஆக்ஸபோர்டு பல்கலைக் கழகத்துக்குப் படிக்கப் போனாரு. அன்றைய ஆங்கிலேய அரசு இவரை மாவட்டப் பள்ளிக் கண்காணிப்பாளராக நியமித்த போதும், இவர் மனைவி பார்வதி ஆச்சியோட சேர்ந்து 1915-ஆம் ஆண்டு தேசிய விடுதலைப் படையில பணிபுரிஞ்சாங்க. உலகப் போரில் குண்டு வீசப்பட்டுச்சு. இவங்க ரெண்டு பேரும் பதுங்கு குழியிலே பதுங்கி அமெச்சூர் ரேடியோவை இயக்கி எதிரிகளோட இடத்தை அறிஞ்சு ஐ.என்.ஏ. படைக்கு அனுப்புனாங்க. சுதந்திரப் போராட்ட உச்சக்கட்டத்தில பார்வதி ஆச்சி தன் வைர மோதிரத்தை ஏலம் விட்டு ரூ.68,620/-யை 1915-ல் இந்தியன் இன்டிபென்டன்ஸ் லீக் என்ற அமைப்புக்கு நன்கொடையாத் தந்தாங்க அவங்க குடும்பம்.

ராஜ்மோகன் டைரியில் எழுதினார்.

ஆச்சி இன்னொரு ஆச்சியைப் பற்றிச் சொன்னார்.

தேவகோட்டையில் ராம. தினமணிச் செட்டியார், காந்தியை நேர்ல சந்திச்சாரு 1942, மார்ச் 17-ல் நீதிமன்றம் எரிஞ்ச போது இவரும் கலந்துகிட்டாரு. தேவகோட்டை நீதிமன்றத்துக்கு நான்தான் தீ வச்சேன்னாரு. இதுல

ஆங்கிலேய அரசு 75 பேர்களைச் சுட்டுக் கொன்னுச்சு. 300 பேர் காயம் அடைஞ்சாங்க. இவரும் படுகாயம் அடைஞ்சாரு. வெள்ளையனே வெளியேறுன்னாரு. இவருக்கு அப்ப 25 வயசு. இவரைச் சிறையில அடைச்ச போது, இவர் மனைவிக்கு ஆண்குழந்தை பொறந்தது. குழந்தையையும் பாக்க முடியலே. அந்தக் குழந்தையும் ரெண்டு வயசுல செத்துப் போச்சு. அந்தக் குழந்தையைக் கூடப் பாக்கலே. சரியான உணவு உறக்கம் இல்லாமச் சிறையில சித்ரவதையை அனுபவிச்சாரு. மத்திய அரசு 1972-ஆம் ஆண்டு இவரைக் கவுரவப்படுத்தி தாமிரப் பத்திரமும், பாராட்டுப் பத்திரமும் வழங்கியது. சென்னையிலுள்ள காந்தி மண்டபத்தில் இவரது புகைப்படங்களை வைத்து மாநில அரசும் கவுரவப்படுத்தியது. 01.06.1994-ல் காலமானார்.

இவங்க ரெண்டு பேரும் பல காலமா எங்கே போனாலும் தேசியக் கொடியோடதான் போவாங்க.

நகரத்தார்களின் தேச பக்தியையும், தெய்வ பக்தியையும் ராஜ்மோகன் பாராட்டினார்.

தைப்பூசம் முடிந்த சில நாட்களிலே மகாசிவராத்திரி வந்தது. அன்று இரவு கண் விழித்துப் பிரார்த்தனை செய்வது பழக்கம் என்று ஆச்சி சொன்னார். ராஜ்மோகன் ஆச்சியிடம் மெல்லக் கேட்டார்.

ஆச்சி. கண் விழித்து இந்த வயதில் இரவெல்லாம் தூங்காமல் இருக்கணுமா?

தம்பி எதுவுமே வேணும்னா வேணும். வேண்டாம்னா வேண்டாம். ஒரு வேடன் வேட்டையாடப் போன போது புலி அவனைப் பாத்திடுச்சு. அவன் பயந்து உடனே ஒரு வில்வ மரத்தில ஏறி உக்காந்துக்கிட்டு வில்வ இலையைப் பறிச்சுக் கீழே போட்டுக்கிட்டே தூங்காம இருந்தான். அந்த வில்வ இலை சிவலிங்கத்து மேலே விழுந்திருக்கு. புலிக்குப் பயந்து தூங்காம இருந்த புண்ணியம் தான் அவன் காப்பாற்றப்பட்டான்னு ஒரு கதை இருக்கு தெரியுமா?

ஆச்சி, இந்தக் கதையைச் சொல்லிக் கொண்டே அங்கு கோவில் வாசலில் இருந்த பரதேசிகளுக்கும், ஊனப்பட்டவர்களுக்கும் வீட்டிலிருந்து கொண்டு வந்த உணவைக் கொடுத்தார்.

ராஜ்மோகன் கேட்டார்.

ஆச்சி, உங்க வீட்டுச் சமையல்காரர் பத்து நாள் லீவு கேட்டுப் போய்ட்டாரு. நீங்க சிரமப்பட்டு சாம்பார் சாதம், தயிர் சாதம் பண்ணிக் கொண்டு வராம ஆண்டிகளுக்குப் பணத்தைக் கொடுத்திடலாமே.

தம்பி. கங்கை நதியில் நீராடுற புண்ணியம் 3 தலைமுறைக்கு நல்லது. பாழடைந்த கோயிலைப் புதுப்பிச்சுத் தீபம் ஏத்துற புண்ணியம் 7 தலைமுறைக்கு நல்லது. கோயில் திருப்பணிகளுக்கு உதவுறது 9 தலைமுறைக்கு நல்லது. ஏழைப் பெண்களுக்குத் திருமணம் செஞ்சு வைக்குறது 11 தலைமுறைக்கு நல்லது. கோசாலைக்கு உதவுறது 13 தலைமுறைக்கு நல்லது. காசி கயாவில் பெத்தவங்களுக்குத் தர்ப்பணம் செய்யுறது 16 தலைமுறைக்கு நல்லது. ஏழைகளோட பசிக்கு உணவளிக்குறது 27 தலைமுறைக்கு நல்லது.

இதெல்லாம் நேர்த்திக்கடனா?

இல்லை. நேர்த்திக் கடன் வேற. உங்களுக்குப் புரியுற மாதிரிச் சொல்றேன்.

செட்டியார் ஒரு ஓரமாச் சென்று வெத்திலையைத் துப்பினார். அது காற்றில் சிதறி அங்கே ஒரு கைக்குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்துக் கொண்டிருந்த ஒரு ஏழைப் பிச்சைக்காரியின் முகத்தில் பட்டது. அவள் தன் முகத்தில் பட்ட வெத்திலையைத் துடைக்காமல், அவள் குழந்தையின் பசி தடைபடக் கூடாது என்று அமுதூட்டினாள். ஆச்சிக்குக் கோபம் வந்தது.

இந்த வெத்திலையை ஆடு, மாடு மாதிரி மேஞ்சுக்கிட்டே இருக்கீங்க. இதை விட்டுத் தொலைக்கக் கூடாதா?

செட்டியார் வேறு பக்கம் திரும்பிக் கொண்டார்.

ஆச்சி சொன்னார்.

தம்பி. நான் சொல்லப் போறதுக்குச் சாட்சிதான் தாய்ப்பால் கதை.

சோழப் பேரரசுவின் பெருவுடையார் கோவிலில் அப்போ பல செல்வந்தர்கள் நேர்த்திக் கடனா ஆடு, மாடுகள்ன்னு தந்தாங்க. இதை அரசன் வெத்தூர் மாராயன்ங்குறவன்ட்ட 42 பசுக்களைத் தந்து அதன் மூலம் வர்ர வருமானத்தில கோவிலுக்கு விளக்கேத்தச் சொன்னார்.

திடீர்னு வெத்தூர் மாராயனைக் காணாம, அரசன் அவன் வீடு தேடிப் போயி எங்கே உன் கணவன்னு அவன் மனைவிட்ட கேட்டாரு. அவ அழுதுகிட்டே அரசன்ட்ட மாடுகளைக் குளிப்பாட்டுற போது ஆத்தோட போய்ட்டாருன்னு சொன்னா. அப்படின்னா இந்த ஏழு நாட்கள் எப்படி கோயில்ல விளக்கு எரிஞ்சுதுன்னு கேட்டாரு. அரசே பல பேர்கள் தந்த நேர்த்திக் கடன் பசுக்கள் ஆத்தோட போயிடுச்சுன்னு சொல்றது தர்மமா? அதனால என் பச்சைக் குழந்தையைப் பல நாட்கள் பட்டினி போட்டு என் தாய்ப்பாலை வித்துக் கோயிலுக்கு விளக்கத்துனேன்னு சொன்னாள். அரசர் மனம் கலங்கி அந்தப் பெண்ணோட பேரைக் கல்வெட்டில் பதிக்கச் சொல்லி உத்திரவிட்டார்.

ராஜ்மோகன் ஆச்சர்யத்துடன் சொன்னான். அந்தக் காலத்து அரசர்கள் எவ்வளவு நியாயமாகவும், தர்மமாகவும் வாழ்ந்திருக்காங்க. பல ஜென்மங்களுக்குப் புண்ணியம் செஞ்சவங்க.

தம்பி, பெரியவர் என்ன தெரியுமா சொன்னார்? குழந்தை இல்லாதவங்களுக்கு மறு ஜென்மம் கிடையாது. அவங்க கர்மா முடிஞ்சுது. ஆண் குழந்தை இல்லாதவங்களுக்கு மறுஜென்மம் கிடையாது. அம்மா அப்பா இல்லாத மகளுக்குக் கணவனும் சரியில்லை. பெத்த குழந்தையும் மதிக்கலே. நல்ல உறவு நட்பு இல்லை. நல்லதே நடக்குறதில்லை. இப்படிப்பட்ட பெண்ணுக்குக் கர்ம வினை முடிஞ்சு மறுபிறவி இல்லேங்குறாரு.

கோயிலை விட்டு வழக்கம் போல வீட்டிற்கு நடந்து போனார்கள். ராஜ்மோகன் கேட்டார்.

ஆச்சி, சிவன் கோயில்கள் இந்தியாவுல எந்தெந்த மாநிலத்தில எத்தனை இருக்கும்?

அருணாசலப் பிரதேசம் – (1), ராஜஸ்தான், ஜார்க்கண்ட் – (2), ஹரியானா, பீகார் – (3), வங்காளம், சத்தீஸ்கர் – (4), ஜம்மு காஷ்மீர் – (9), இமாசலப் பிரதேசம் – (10), பஞ்சாப் – (11), ஒடிசா – (12), குஜராத் – (15), உத்திரகாண்ட் – (18), உத்திரப்பிரதேசம் – (19), அசாம், ராஜஸ்தான் – (22), மத்தியப்பிரதேசம், தெலுங்கானா – (26), ஆந்திரப் பிரதேசம் – (71), கர்நாடகம், கேரளா – (79), தமிழ்நாடு – (1127).

ராஜ்மோகன் வாய் பிளந்து தமிழ்நாட்டுல உள்ள சிவன் கோவில்கள் 1127-ஆ என்று கேட்டார். ஆச்சி பதில் சொன்னார்.

தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

இப்போது ஆச்சி வீட்டிற்குள் வரவும், மொஃபைல் அடிக்கவும் சரியாக இருந்தது. அயல்நாட்டில் இருந்து ஆளுக்கொரு பக்கம் வரும் பிள்ளைகள், பேரன், பேத்திகள், சென்னைக்குக் காரை அனுப்பச் சொன்னார்கள். தங்கள் வீட்டிலிருந்த நான்கு கார்களையும் பத்து நிமிடத்திற்குள் ட்ரைவர்களைத் தயார் செய்து அனுப்பினார்கள்.

ஆச்சியும், செட்டியாரும் ரெக்கை கட்டிப் பறந்தார்கள். (தொடரும்)

சென்ற இதழ் தொடர்ச்சி

# கைப்பிடியில் கம்ப்யூட்டர்

சிறுகூடல்பட்டி முத்துக்கருப்பன்



### இன்டெர்நெட்டின் பிறந்த நாள்:


1983-ம் வருடம் ஜனவரி ஒன்றாம் தேதி, இன்டெர்னெட்டின் பிறந்த நாளாகக் கொண்டாடப்படுகிறது. ஏனென்றால் அதுவரை இருந்த TCP/IP முற்றிலும் சீர் செய்யப்பட்டு அன்று முதல் ARPAnet-டின் அங்கீகரிப்பட்ட நெறிமுறை (Protocol) யாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அன்று முதல், உலகின் பல வகையான நெட்வொர்க்குகளும், மின்னணு சாதனங்களும் தங்களுக்குள் பேசிக் கொள்ளவும், செய்திகளை அனுப்பிக் கொள்ளவும் துவங்கின.

### கம்ப்யூட்டரின் புதிய வடிவங்கள்:

1980-களில் கம்ப்யூட்டர் புதிய வடிவங்கள் எடுத்தது. Personal Computers – தனி மனிதக் கணினிகள் (IBM, Macintosh) பிறந்தன. 1981-ல் SONY-யின் 3.5 அங்குல ஃப்ளாப்பி தகடுகள் சந்தைக்கு வந்தன. 10 கிலோ எடையில் கையில் தூக்கிச் செல்லும் கம்ப்யூட்டர் அறிமுகம் ஆனது.

### உலகளாவிய வலைத் தளம் – WWW (Worldwide Web):

இதுவரை படித்தவர்களின் அறிவார்ந்த அடையாளமாக இருந்த கம்ப்யூட்டரைச் சாமானியர்களின் கைகளிலும் தவழ்ந்திடச் செய்ததில் 1989-ல் டிம் பெர்னெர்ஸ் லீ (Sir Tim Berners-Lee) என்பவர் கண்டுபிடித்த WWW (World wide Web) – “உலகளாவிய வலை”க்கு முக்கிய பங்குண்டு.



டிம் லீ WWW-வைக் கண்டுபிடித்ததே, தன்னுடைய செர்ண் (CERN) கம்பெனியில் வேலை செய்யும், அரைகுறையாகக் கம்ப்யூட்டர் தெரிந்த தொழிலாளி கூட, இன்டெர்நெட் வழியாகக்



கம்பெனி விஷயங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். அவர்களுக்குப் புரிகிற மாதிரி, Browser, URL போன்ற எளிய வழிகளைக் கண்டுபிடித்துக் கொடுத்தார்.

காபிக் குடுவையில் வெப் கான்ஃபெரென்ஸ் (Web Conference): WWW-கான ஆராய்ச்சிகள் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்த போது, சில வேடிக்கைகளும் நடந்தன.

பல்கலைக் கழகக் கட்டிடத்திற்கு 7 மாடிகள். 7 மாடிகளுக்கும் சேர்த்து ஒரே ஒரு இடத்தில் ஒரே ஒரு காபி மெஷின் (Coffee Machine) தான் வைக்கப் பட்டிருந்தது. பணிபுரிந்த ஆராய்ச்சியாளர்களும், மாணவர்களும் காபிக்காக எப்போது எழுந்து போனாலும் காபிக் குடுவை காலியாக இருக்கும்.

அட, நம் WWW இதற்கு ஒரு தீர்வைத் தராதா என்று யோசித்தார்கள்.

காபிக் குடுவைக்கு முன்னால் ஒரு பெரிய கேமராவை நிறுத்தி வைத்தார்கள். அது காபிக் குடுவையை ஒரு நிமிடத்திற்கு 3 புகைப்படங்கள் வீதம் (129x129 அளவில்) எடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அந்தப் புகைப்படங்கள் 7 மாடியிலும் நெட்வொர்க்கில் உள்ள எல்லாக் கம்ப்யூட்டரிலும் தெரிவதற்கு ஒரு மென் பொருளை (Software) எழுதி விட்டார்கள். பிறகென்ன, கொண்டாட்டந்தான், குடுவையில் காபி எவ்வளவு இருக்கிறது என்று



கம்ப்யூட்டரில் தெரியும். அதைப் பார்த்துக் கொண்டு விரும்பிய போதெல்லாம் போய்க் காபி அருந்தினார்கள். இதுதான் பின்னர் வெப் கேமரா (Web Camera) ஆனது.

Web Camera-வை அடிப்படையாக வைத்து, 1990-ல் அலுவலகங்களில் வீடியோ கருத்தரங்கம் (Video Conferencing) என்ற அமைப்பையும் உருவாக்கி விட்டார்கள்.

தன்னுடைய WWW முழு வெற்றி அடைந்த பிறகு, டிம் லீ WWW-வை உலக மக்களுக்கே கொடையாக வழங்கி விட்டார்.

### கம்ப்யூட்டரில் வலைத் தளம் (Website):

1981-ல் ஃப்ரான்ஸ் டெலிகாம் கம்பெனி வலைத் தளத்துடன் (Websites) கூடிய கம்ப்யூட்டரை உருவாக்கியது. 1990-க்குள் அது 10 லட்சத்துக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் விற்றுப் போனது. வலைத் தளத்தில் செய்தித் தாள்கள், ரயில்வே கால அட்டவணைகள், விளம்பரங்கள் எல்லாம் கிடைத்தன. நெட்வொர்க்குகள் வர்த்தக ஊடகங்களாகவும் மாறிப் புகழ் பெற்றன.

### நெட்வொர்க் நினைவுப் பெட்டகங்கள் (Memory Storage):

உலகின் பட்டி தொட்டி எல்லாம் கம்ப்யூட்டர் நுழையத் தொடங்கியதால், நெட்வொர்க்குகள் புதிய சவாலைச் சந்திக்க வேண்டி இருந்தது. லட்சக் கணக்கில் பரிமாறிக் கொள்ளப்பட்ட தரவுகளும், விவரங்களும் (Data and Information) போகப் போக ட்ரில்லியன் கணக்கில் கம்ப்யூட்டருக்குள் வந்து விழுந்தன. இவ்வளவையும் சேமித்து வைக்க, கம்ப்யூட்டர் மெமொரிகளின் ஆற்றலைப் பெருக்கி ஆக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

நெட்வொர்க் பயன்பாட்டுக்கு வந்த புதிதில் காந்த சக்தியால் இயங்கிய நினைவுப் பெட்டகங்களில் (Memory Storage) தரவுகள் சேமிக்கப்பட்டன.

1947-ல், வில்லியம்சும், கில்பெர்னும் சேர்ந்து மின்னணுவால் (electronic) இயங்கிய நினைவுப் பெட்டகத்தைக் கண்டுபிடித்தனர். தற்போது ஹார்ட் ட்ரைவ் (Hard Drive)-களில் சேமிப்பது பரவலாக இருக்கிறது. ஹார்ட் ட்ரைவில், காந்தம் பூசப்பட்ட கண்ணாடி அல்லது அலுமினியத்தால் ஆன, சுழலும் தட்டுகளில் தரவுகளின் சேமிப்பு நடக்கிறது.

இதையும் தாண்டி நவீன யுகத்தில், ஒரு தட்டின் மேற்பரப்பில் தரவை எழுதும் பாரம்பரிய சேமிப்பகத்தைப் போலன்றி, ஹாலோகிராபிக் சேமிப்பகம் (Holographic storage) முப்பரிமாணத்தில் தரவைச் சேமிக்க லேசர் கற்றைகளைப் பயன்படுத்துகிறது.

### சென்சாரும் நேனோவும் செய்த நவீனப் புரட்சி:

1883-ல் அறிமுகப்படுத்தப்பட்ட சென்சாரும் (Sensor), 1959-ல் கண்டுபிடிக்கப்பட்ட நேனோ தொழில் நுட்பமும் (Nano Tchnology)-யும் இன்டெர்நெட்டுடன் இணைக்கப்பட்ட போது புதிய புரட்சியை மலரச் செய்தன.

சென்சார் என்பது சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் மாற்றங்களைக் கண்காணித்து, அந்த மாற்றங்களை மின்சாரக் குறியீடுகளாக (Electrical Signals) மாற்றி அனுப்ப வல்ல சாதனம்.

நேனோ தொழில்நுட்பம் என்பது நேனோ அளவுகளில் (எடுத்துக்காட்டு: ஒரு நேனோ கிராம் என்பது ஒரு கிராமில் பத்து லட்சம் பகுதிகளில் ஒன்று. கண்ணால் பார்க்க முடியாதது. மிகக் கூர்மையான மைக்ராஸ்கோப்பினால் தான் பொருளைப் பார்க்க முடியும்). மிகச் சிறியதாகப் பொருட்களையும், கருவிகளையும் செய்ய வல்லது.

### IoT (Internet of Things)

இப்போது நேனோ தொழில்நுட்பத்தில் கருவிகளைச் செய்து, அதில் சென்சாரை இணைத்து அதற்கு ஒரு கம்ப்யூட்டர் நிரல் (Program அல்லது App) எழுதி IoT (Internet of Things) என்ற பெயரில் நிறைய சாதனங்களைச் செய்து வருகிறார்கள். Appகள் Python, Go, PHP, Dart, Ruby, Java, C++ இப்படி ஏதாவது ஒரு நிரல் மொழியில் எழுதப்பட்டிருக்கும்.

Smart Watch, Door Bell Cam, Smart Lock இதெல்லாம் IoT சாதனங்கள்.

### Smart Watch:

எடுத்துக்காட்டுக்கு, Smart Watch எப்படி இயங்குகிறது என்று பார்ப்போம்:

இது ஒரு கைக் கடிகாரம். இதைக் கையில் கட்டிக் கொள்பவரின் இதயத் துடிப்பின் அளவுகளை, இந்தக் கடிகாரத்தில் உள்ள ஒளிரும் பச்சை விளக்கின் மூலம் கணக்கிட முடியும்.



பச்சை விளக்கின் வெளிச்சம், கடிகாரத்தை அணிந்திருப்பவரின் இதயக் குழாயில் ஓடும் இரத்தத்துக்குள் பாய்கிறது. கடிகாரத்தின் பின்பக்கத்தில் உள்ள ஒளி உணரிகள் (Optical Sensors) இரத்தத்தில் ஏற்படும் அதிர்வுகளை signal-களாகப் பதிவு செய்கின்றன.

இப்போது Sensor சேகரித்த Signal-கள் என்ற விவரம் (Data) எங்கோ தொலைவில் உள்ள சர்வெரில் இருக்கும் செயலிக்கு (App) அனுப்பப்பட்டு இதயத் துடிப்புகளும், இதயத்தின் ஆரோக்கியமும் மதிப்பிடப்படுகிறது.

Smart Watch-ஐ நாம் எப்படி இயக்க வேண்டும் என்பதில் நமக்கு உதவி செய்வதற்கு Graphic User Interface இருக்கிறது.

இதுபோல் Smart Watch-ல், மலை ஏறுபவர்கள் தாங்கள் இருக்கும் உயரத்தை அளக்க Altimeter, ஓடுபவர்கள்




தங்கள் வேகத்தை அளக்க Accelerometers, காற்றின் அழுத்தத்தை அளக்கும் Barometers போன்ற பல வகையான சென்சார்களைப் பொருத்திக் கொள்ள முடியும்.

August Doorbell Cam – நீங்கள் உங்கள் வீட்டில் மாடியில் இருந்தால் கூட, கீழே சாத்தி இருக்கும் வாசல் கதவைத் தட்டுபவர்கள் யாரென்று அறியவும், அவர்களுடன் பேசி, வந்திருப்பது யாரென்று தெரிந்து கொள்ளவும் உதவும். August Smart Lock – நீங்கள் வெளியில் எங்கே இருந்தாலும் உங்கள் வீட்டின் கதவைத் திறக்கவும், மூடவும் உதவும்.

**இன்னும் சில சுவாரசியமான IoT சாதனங்கள்:**

Connected Cars:

கார்களை இன்டெர்நெட்டுடன் இணைத்து ஆக்சிலரேட்டர், ஸ்பீடாமீட்டர், ப்ரேக் முதலானவற்றில் இருந்து விவரங்களைச் சேகரித்து, காரின் ஆரோக்கியம், டிரைவர் எப்படி வண்டி “ஓட்டுகிறார்” என்பதை மதிப்பிடுகிறார்கள். இன்னொரு IoT device கார் விபத்துக்குள்ளானால் குடும்பத்தினருக்கு செய்தி அனுப்புகின்றது.

Connected Home:

பூட்டிய வீட்டுக்குள் புகை வந்தாலும், திருடன் வந்தாலும் எச்சரிக்கிறது. வீட்டில் மின்சாரத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துகிறது. வெளியில் போன குடும்பத்தார் வீட்டுக்குத் திரும்பி வந்தால், பூட்டிய வீட்டைத் திறந்து வைக்கிறது. அணைக்க மறந்த விளக்குகளையும், காற்றாடிகளையும் அமர்த்தி வைக்கிறது. தொலைந்த சாவியைத் தேடிக் கொடுக்கிறது. காஃபி கூடப் போட்டுக் கொடுக்கிறதாம். களைப்பாக இருந்தால் கால் அமுக்கி விடுமா என்று தெரியவில்லை.

Smart Cities:

நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் தீட்டுவதில் அரசுக்குக் கை கொடுத்து, ஸ்மார்ட் சிட்டிகளை உருவாக்கிக் கொண்டிருப்பது கூட IoT தொழில் நுட்பந்தான்.

Industrial IoT:

பெரிய தொழில் நிறுவனங்களில் நிதி நிர்வாகம், தொழில் செயல்முறை (Process)–களைக் கண்காணிப்பது, இயந்திரம் பழுதாவதற்கு முன் எச்சரிக்கை செய்வது தொடங்கி எண்ணி மாளாத உதவிகள் செய்கிறது..

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence):

இனி வரும் காலம் AI (Artificial Intelligence)–யின் காலம் என்கிறார்கள்.

செயற்கை நுண்ணறிவு என்பது சில கம்ப்யூட்டர் தொழில்நுட்பங்களின் தொகுப்பு. இது நாம் இன்டெர்நெட் வழியாக அனுப்பும் கோடிக்கணக்கான தரவுகளையும், விவரங்களையும் (Data and Information) ஒழுங்காகப் பிரிக்கும். அவற்றை ஆய்வு செய்யும். அந்த ஆய்விலிருந்து சில விஷயங்களைப் புரிந்து கொள்ளும். அந்தப் புரிதலில் இருந்து சில பிரச்னைகளுக்குத் தீர்வு சொல்லும்.

இதைச் செய்வதற்கு, கணக்கையும் (Maths), தர்க்க நியாயங்களையும் (Logic) பயன்படுத்துகிறது.

இயந்திர கற்றல் (Machine Learning):

இயந்திர அறிவு அல்லது இயந்திர கற்றல் (Machine Learning) என்பது செயற்கை நுண்ணறிவின் தம்பி. அதுவும் AI மாதிரிதான், AI-யில் ஒரு வகை.



AI தரவுகளைப் பகுப்பாய்வு (Data Analysis) செய்யும் போது, திரும்பத் திரும்ப ஒரே மாதிரியாக நடக்கும் சில நிகழ்வுகளை (Patterns), ML (Machine Learning) கவனித்துப் பார்க்கிறது. அதிலிருந்து இனிமேல் இப்படி இப்படித்தான் நடக்கும் என்ற தன் யூகங்களை ML சொல்கிறது.

போகிற போக்கில், நம் கைப்பிடியில் கம்ப்யூட்டர் இருக்குமா அல்லது கம்ப்யூட்டரின் கைப்பிடியில் நம் வாழ்க்கை இருக்குமா என்று தெரியவில்லை. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ♦



# நகரத்தார் வேர்களை தேடி
# ஏட்டுக் கல்வி
## வயது வரம்பு - 5 லிருந்து 12 வரை

புது வகுப்புகள் சித்திரை 1-ஆம் தேதி, (14.04.2025) தொடங்க உள்ளது. ஆர்வமிருக்கும் நகரத்தார் சங்கங்கள், நகரத்தார் அமைப்புகள் எங்களை தொடர்பு கொள்ள பணிவுடன் வேண்டுகிறோம். தற்பொழுது இயங்கும் மையங்கள் - 16, விருப்பமுள்ள அமைப்புகள் தொடர்பு கொள்ள வணக்கம் சுப்பிரமணியம் (ஆத்தங்குடி) - 9498083966, CT. RM. வள்ளியம்மை ஆச்சி (காரைக்குடி) - 9884493515, S. முத்துக்குமார் (அரிமளம்), Retd. DSP - 9444125193


**மையம் பதிவு செய்ய வேண்டிய கடைசி நாள் 31.03.2025**

# ஆன்மிக தொடர் சொற்பொழிவு

சென்னை ஆவிச்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறை நற்றமிழ் மன்றம் சார்பாக சொல்லோவியர் பேராசிரியர் சொ.சொ.மீ. சுந்தரம் அவர்கள் 30-6-2025 முதல் 24-07-2025 வரை மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை வழங்கும் பெரியபுராணமும் 63 நாயன்மார்களும் என்ற தலைப்பில் ஆன்மிக தொடர் சொற்பொழிவு நடைபெறும். தொடர்புக்கு: 9444588928

# மஹா கும்பாபிஷேகம்





நிகழும் சுபஸ்ரீ மங்களகரமான குரோதி ஆண்டு, மாசி மாதம், 4-ஆம் தேதி (16.02.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், கல்லுப்பட்டியில் அமைந்துள்ள நகரத்தார்களுக்கு பாத்தியமான அருள்மிகு ஸ்ரீ கைலாசநாதர் சமேத ஸ்ரீ நித்தியகல்யாணி அம்பாள் மற்றும் பரிவார மூர்த்திகள் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் சுமார் 120 ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி ஆலயத்தை அமைத்து வழிபட்டு வந்தார்கள். தற்போது அதில் நர்த்தன விநாயகர். சோமாஸ்கந்தர், காசி விஸ்வநாதர். விசாலாட்சி, ஸ்ரீ மகாலெட்சுமி சன்னதிகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இப்பெருவிழாவில் பக்த மெய்யன்பர்கள் பெருமளவில் கலந்து கொண்டு இறையருள் பெற்றனர்.




Namadhu Chettinad Published and Printed by N.Avadaiappan on behalf of M/S Chettinad Print Media (P) Ltd., Printed at DOT LINE DATA, New No.3, Old No.2, 21st Avenue, Ashok Nagar, Chennai - 600 083 and Published from Chettinad Print Media (P) Ltd., Rani Seethai Hall Building, 603, Anna Salai, Chennai - 600 006. Editor : N.Avadaiappan


Chettinad
Sarvalokaa Education
International School
Activities that nurture
children
holistically
• Archery
• Theatre
• Dance
• Instrumental Music
• Taekwondo
• Chess
• Soccer
ADMISSIONS
OPEN
ENQUIRE
FOR
DETAILS
044 47429900
73 5872 1784
www.sarvalokaa.org
Cambridge Assessment
International Education

Namadhu Chettinad Tamil Monthly Regd. as Newspaper with RNI No.TNTAM / 2015 / 63956 Postal Registration No.TN/CH(C)583/2025-2027
Licensed to post without prepayment under WPP No.TN/PMG(CCR)/WPP-542/2025-2027 and published on first week of every month.
Posted at Egmore. RMS PATRIKA Channel Posted on 15-21 March - 2025

